குல்குந்து ப. உ சிமைகிலுவிரை சூரணம் ப. உ கிராக்ஷி ப. உ பாதாம்பருப்பு ப. உ இவைகளை கூட்டியரைத்து இரவில் கழற்சிக்காய் பிரமாணம் புசித்து நித்திரை செய்ய காலை மலம் தாராளமாய் உடைந்து மலக்கட்டு ஆசனகடுப்பு கணுக்கள் நோய்வீக்கமும் தீரும்.

## சீதளரோக நிவாரணி.

மிளகு லவுங்கம் திப்பிலி பொன்வரலாக வறுத்து இளாக்கி வஸ்திரகாயம் செய்து வகை ப. க வெள்ளாட்டு கோமியத்தில் டோலாந்திரம் கட்டி எரித்தநாபி சூரணம் ப. க சுத்தித்த வெள்வங்கம் ப. ௭ சூதம் ப. ௭ இரண்டையும் தொந்தித்து நன்றாக ரேகிக்கஅரைத்து அழுக்கு நீக்கியதேன் ப. உயச சுடுகைசெய்து இறக்கி சுடுகையில்தானே மூன்றினுசுகளையிட்டு வீரமுள்ள மின்னாகுச்சியினால் ரேகிக்கதுழவி புட்டியில் பத்திரப்படுத்தி ரு - வி - நி உள்ளுக்கு கொடுக்க சகல விதசீதளம் தலைபாரம் மயக்கம்தீரும்.

## இருமல், நீர்மட்டியா யிருப்பதற்கும்.

பாதாம்பருப்பு ப. க மேல்படி கோந்து தோலா க கரு

வேலம்பிசின்தோ(க) அதிமதுரப்பால்தோ(க)வெள்ளைமிளகு தோ (க) பேதானு தோ. வ (இ)துகளை பக்குவப்படுத்தி ஒருபலம்தேனை காச்சி அதிலிட்டு பிசைந்து வேளைக்கி வ தோலா விதம் இருவேளையாக நாள் (௰) புசிக்கவும்.

## ஆமலாலேகியம்.

தேன் ப. ௰௨ வெள்ளைசக்கரை ப. ௰௨ இரண்டையும் கூட்டிகாச்சி இதில்நெல்லிவற்றல் ப. ௯வ குலாப்பு வி - நி ௯ கோரைக்கிழங்கு ப. ௨ அசாருன் வி - நி (௪) சடாமாசி வி - நி (௯) லவுங்கம் வி - நி (௯) ருமஸ்தகி வி - நி (௯) ஏலக்கா அரிசி தாளிசபத்ரி சாபத்ரி சாதிக்கா சிறுலவுங்கபட்டை குங்குமப்பூ வகை வி - நி (௨) இவைகள் தனித்தனி தூள்செய்துயிட்டு பிசைந்துகொண்டு பீங்கானில்வைத்து வேளைக்கி ௨ தோலா முதல் ஒருதோலா வரையில் புசித்துவர வாய்நாற்றம் தீர்ந்து மூளைபலம் குடல்பலம் உண்டாகி தேகம்சிவப்பாகி மனசந்தோஷமாகும் அசீரணம்தீரும்.

## வெப்பரோகத்தீர்க்த லேகியம்.

நாரிஞ்சிபழரசம் ப. க௦ புளிப்பு மாதளம்பழரசம் ப. க௦ தித்திப்பு மாதளரசம் ப. க௦ சுக்காகோரரசம் ப. க௦ பழம்புளிதெளிவு ப. க௦ பன்னீர் ப. ௯ இதுகளைகூட்டியிதில்சீனிகற்கண்டு ப. ௯ யிட்டுபாகுசெய்து புளிப்பு திராக்ஷி ப. வ கர்த்தெசமாக் ப. வ ருமஸ்திகி வி - நி (௨) குங்குமப்பூ வி - நி (க) சடாமாசி வி - நி (௨) லவுங்கம் வி - நி (௨) அகர் வி - நி (க௦) மூங்கிலுப்பு வி - நி (க௦) பாதுரஞ்கியோயா வி - நி (க௦) வெள்ளைசந்தனத்தூள் ப. வ இவைகளை தனித்தனி தூள்செய்து பாகிலிட்டு பிசைந்துபதமாய் வைத்துக்கொண்டு இத்துடன் சீமைஇலந்தன் முரப்பா தோலா அ பிகிமுரப்பா தோலா அ தேன் ப. ௪ வெள்ளிரேக்கு தோலா ஐ இட்டுப் பிசைந்து வேளைக்கி வி - நி (க) விதம்புசித்துவர.

பலம் தாதுபுஷ்டி குடல்ஆகார பைய்களுக்கு வலிவுதந்து நீர்பெருக்கை குறைவுபடுத்தி வாயு தலைநோவு வாதபேதி மூலச்சூடு குண்டிக்காய்நோய் எச்சல்சுரப்பு அசீரணம்தீரும் மயிர்கறுக்கும்.

## நீரோகநிவாரணி.

செங்கழுநீர்க்கிழங்கு செவ்வல்லிக்கிழங்கு சீமைதண்ணீர் மிட்டான்கிழங்கு பூமிசக்கரைகிழங்கு நிலப்பனைகிழங்கு



கோஷ்டம் சாதிக்கா சாபத்ரி மதுரம் கோரைக்கிழங்கு பூனைக்காலிவித்து இலுப்பைப்பூ குகைநீறு நிலாவரை சீரகம் வகைக்கு வி - நி (க) உணர்த்திய துத்திவேர்பட்டை ப. உ இவைகளை தனித்தனி தூள்செய்து பசும்பாலில் வெள்ளைசக்கரை ப. க௦ இட்டு பாகுசெய்து சூரணங்களையிட்டு லேகியமாகச்செய்து வேளைக்கி கொட்டைப்பாக்கு பிரமாணம் காலையில் தேனிலும் மத்தியானம் வெண்ணையிலும் மாலைபசும்பாலிலுமாக நாள் உ௰ புசிக்க மூத்திரகிரிச்சினம் கைகால் எரிவு நெஞ்செரிவு நீரடைப்பு இந்திரியநஷ்டம் தீர்ந்துவிந்துறும்.

## உதிரக்கொதிப்பும் சூடுந்தணிய.

அரைக்கால்படி இளநீர்சலத்தில் பசும்பால் ப. ௯ சீரகதூள் வி - நி (க) சீனிசர்க்கரை தோ ௨ அரைத்தசந்தனம் புன்னைக்காயளவு கூட்டி காலையாக நாள் எ பிரதி கொடுக்க

## உடம்புநோய் பசிமந்தம் சீதளந்தீர்க்கு.

ஓமம் ப. ௯ பௌளம்ப. ௨ சர்திக்கா ப. ௨ சாபத்ரி ப. ௨ இவைகளை சூரணம்செய்து ௰௨ பலம்தேனைகாய்ச்சி இதில் அபினி தோலா அரைக்காலையிழைத்து இறக்கி சூரணமிட்டு பிசைந்து புளிகொட்டை பிரமாணம் புசிக்கவும்.

## மலபந்தமிளகுந்து.

நிலாவரை பிஞ்சுகடுக்காய் திராக்ஷி சீரகம் மிளகு வகை ப. ௯ லவுங்கம் ப. வ சாபத்ரி ப. வ தனியா ப. ௨ ஆவாரம்பூ ப. உ சூரணம்செய்து தேனைகாய்ச்சி அதிலிட்டு பிசைந்து இரவில் ஒரு தோலா விதம்புசிக்கவும்.

## ஒத்சிநீர்கூட்டு.

கால்படி யிஞ்சிரசத்தெளிவில்கெந்திதிராவகம் தோ. வ லாகூர்உப்பு தோலா வ இந்துப்பு தோ. வ நாயுருவிஉப்பு தோலா வ தூள்செய்து புட்டியிலிட்டு ரவியில்வைத்து ஒரு தோலா விதம்கொடுக்க அசீரணபேதி மந்தம் வாந்தி ஒக்காளம் வாயு வாந்திபேதி தாகமும்தீரும்.

## புதினாசக்கூட்டுநீர்.

புதினாரசம் இஞ்சிரசம் கரும்புரசம் எலுமிச்சம்ரசம் சமமாககூட்டி புட்டியிலிட்டு ரவியில்வைத்து தோலா விதம்

கொடுக்க வாந்தி ஒக்காளம் தாகம்நீக்கும் வாந்திபேதி கண்டவர்களுக்கும் உபயோகமாகும்.

### மலபந்தங்களுக்கு.

நெய்யில்வறுத்த பிஞ்சுகடுக்காய் திராக்ஷி பாதாம்பருப்பு நிலாவரைவகை ப. உ இவைகளை சூரணம்செய்து தேனுலைத்து பசுநெய்விட்டு பிசைந்து உய நாள் சும்மாவைத்திருந்து பிறகு இரவில் கழற்சிக்காய்பிரமாணம் நித்திரைக்கு முன்புசிக்க.

### மூளையில்நீர்கேடுதலை காதுமந்தத்திற்கு.

காபுலிகடுக்காபிஞ்சுகடுக்காய் மஞ்சள்கடுக்காய்தானிக்காய் இவைகளின் விரைநீக்கியது வகை ப. க தனியா ப. க தூள்செய்து தேனைக்காச்சிவடித்து தக்கபடிவிட்டு கிளறியிறக்கி பாதாம் நெய் தோலா க விட்டுபிசைந்து மண்டலம்வைத்து ஒரு தோலா விதம் இரவில் கஉ மணிக்கு புசித்து மீது சோம்பு ஜியாழம்புசிக்க.

### சூரணம்.

திப்பிலி லவுங்கம் ஓமம் ஏலக்காஅரிசி விளையதுப்பு கறுப்புவுப்பு சிகப்புஉப்பு கல்லுப்பு வகை தோலா க இலாமிச்சை வகை தோலா உ இவைகளை சூரணம்செய்து சக்கரை தோலா கூ கூட்டி இரவில் அன்னம் கொண்டபின் ஒரு வி. கி புசித்துவர வாதம் வாயு பித்தவாயு மேகநீர் தேகநாற்றம் சிரங்கு அசீரணம் உப்புசம் வயறுளைச்சல் பித்தகுன்மவலியும்தீரும்.

### நக்ஷண நாயன் பாக்ஷாவுக்குரைத்தயாகுத்தீ.

கெம்புமாசா (ரு) துளையிடாத ஆணிமுத்துமாசா (ரு) அஜரே அற்மனிமாசா (எ) அஜரேலாசவர்தமா (எ) கஸ்தூரிமாசா உ குங்குமப்பூ மாசா (ரு) சூடன்மாசா (ரு) இவைகளை தனித்தனியாக பன்னீரில் வொவ்வொருநாள் அரைக்கவும் காவுஜபான்பூ காசினிவிரை (கக) ரூபா பட்டுப்பூச்சிகூண்டு கால்நீக்கிய கண்டுசுட்ட கரி கெஷ்னிக்கிரைவிரை நூனிவிரை உஸ்தகதூஸ் பாமனேசுபேத் அகிறகட்டை ஏலக்காஅரிசி சோத்துவர்கத்தாயி தருவஞ்சி அகரபி ஜடாமாசி ரோஜாபூ கிரைக்காய்விரை வகையொன்றுக்கு தோலா (௧) தனித்தனி தூள்செய்துக் கொள்ளவும். பிங்கானில் தித்திப்பு மாதளம்பழ சர்பத் தோலா (ருயகஉ) இதில் மேற்கண்டதிறுசுகளை



இட்டு மூடி (சய) நாள் சும்மாவைத்திருந்து பிறகு (வ) தோலா முதல் (௧) தோலா வரையில் மண்டலம் இருவேளையாக உட்கொள்ளவும் கெட்டபதார்த்தங்கள் மீன்வகைகளும் புளியும்நீக்க சிரத்திலுள்ள வியாதிகளும் குலைசம்மந்தவியாதி மேகவியாதிகளனைத்தும் நீங்கி தேகபுஷ்டியும் சரீரகாந்தியும் தாதுவலிவும் மனோவுற்சாகமும் தரும்.

### முபரேபாரீத்.

கெட்டிமுத்து மாசா (ரு) நற்பவளமாசா (எ) ககருபாமாசா (எ) இவைகளை பன்னீரால் தனித் தனியாக ஒவ் ஒருநாளரைக்கவும். காவிகல்மாசா (சு) வெள்ளை சந்தனத்தூள் மாசா (எ) தனியாமாசா (எ) மூங்கிலுப்பு பாமனிசுபேத் ரோஜாப்பூ காவுஜபான் வகை தோலா (கவ) பாமனிசுருக் போஸ்து பேருனிபிஸ்தா கோளிகிரைவிரை புளிப்புதிராக்ஷி பட்டுபூச்சிகூண்டு கத்திரித்து வஸ்திரகாயம் செய்யவும் வகைக்கு தோ. (௬) இவைகளை தனித்தனி தூள்செய்யவும் சீனகற்கண்டு ப. (யஉ) நல்லசலத்தில் பாகுசெய்யவும் துருஞ்சிபழரசம் ப. (சு) விட்டு கொதிப்பித்து கீழிறக்கி முன்கண்ட தூள்களையிட்டு ரேகிக்கசெய்து தங்கரேக்கு (ய) வெள்ளிரேக்கு (உய) இட்டுதுழாவி பிங்கானில் வைத்துக் கொண்டு வேளைக்கு (சு) மாசாவிதம் புசித்துவரவும். சூடான பதார்த்தங்கள் புளி மீன் வகைகளையும் நீக்கவும் மனஇளைப்பு குலைகாபரு பித்தபயித்தியம் நெஞ்செரிவு இவைகள் நீங்கி தேகதிடமும் வுச்சாகமும் இந்திரியவலிவும் தரும்.

### சுகமராது திராவகம்.

பனங்கற்கண்டு ப. (உ௱) கறுப்புதிராக்ஷி ப. (அய) கருவேலம்பட்டை ப. (ருய) நெல்லிகாய்வத்தல் ப. (கரு) உசு படி சலத்தில் வேகவைத்து வடித்து இதில்சடாமாசி வுஷ்ணு பங்கரு வெட்டிவேர் வகை ப. (உ) சவிக்கா ஜாவசியிந்தி பேக்கேலப்லாப் வெற்றிலைவேர் பாதுரஞ்சிபோயா பெரியயேலக்கா நீர்முள்ளிவிரை பேக்கேபந்துபிர் சுலேதாவா அமுக்கரங்கிழங்கு கோரைகிழங்கு கஜ வெப்பாலரிசி கச்சூர் கேலீசேலா சிகப்பு சந்தனம் வெள்ளைசந்தனம் தண்ணீர்விட்டான் கிழங்கு நிலப்பனை கிழங்கு தொக்மே வெட்டங்கன ஜனுவர்வகை பலம் (க) நைய நறுக்கியிட்டு பாலையில் திராவகம் இறக்கி இதில்சாலேமிசிரி அகர் லவுங்கம் ஜாதிக்காய் ஜாபத்ரி சிகப்பு முள்ளங்கிவிரை ஷல்கம்விரை வெங்காயவிரை பூனைகாஞ்சோரி விரை வெள்ளைபாமனி கறுப்புபாமனி

னூதரிபி ஷாகாருல்மிசிரி நாகேசர்வகை தோலா (உ) பரங்கிசக்கை துரிஞ்சிக்காய்தோல் வகை பலம் (உ) நைய நறுக்கியிட்டு நாலுநாள்சென்று அதில் வெள்ளைசற்கண்டு ப. (சா) ஆவின் பால் (கசா) கூட்டி பாலையில் திராவகம் இறக்கி புட்டியில் பத்திரப்படுத்தி வேளைக்கு ஒரு தோலாவிதம் புசித்தால் கொழுமைதரும் நல்ல ஆகாரங்கள் புசித்து வளர்ந்த விருத்தாப்பியருக்கும் வல்லுவந்து வாலிபனைப்போல் மனோதிடம் உண்டாவதுமன்றி வாகிரி வஸ்துக்களால் நேரிடும் வியாதிகள் நீங்கிவிடும்.

## தங்கபற்பம்.

வாசரோகத்திற்கும் அதிக கொழுமையினை லடைந்த தாதுசோர்வைக்கும் தங்கரேக்கு வி. நி. (௨) சுத்திசெய்தசித்தண்டவோடு வி-நி க இவ்விரண்டையுமரைத்து உத்தாமணிப்பால் (ரு) துளிவிட்டுபிசறி மூசையிலிட்டோடுமூடி சீலைசெய்து குண்டுசட்டியில் உமிகொட்டி மத்தியில்வைத்து தீயிட பற்பமாம். தக்க அனுபானங்களிலிட சுகுணமாம்.

## ஓந்திஜதி லேகியம் (கய) வயதுள்ளவர்களும் புசிக்கலாம்.

கெம்பு, ஆணிமுத்து, நற்பவழம், ககருபா, தங்கரேக்கு வகை தோ. (க) ரேக்கைதிருத்தி மற்றதை தனித் தனி தூள்செய்துக்கொண்டு சாலேமிசிரி சிமை தண்ணீர்விட்டாங்கிழங்கு சின்ன நெரிஞ்சிக்காய் பெருநெரிஞ்சிக்காய் வகை ப. (க) ஜாதிக்காய் ப. (௨) ஜாபத்ரி ப. (ரு) வெப்பாலரிசி நீர்முள்ளிவிதை பூநீர்க்கிய லவுங்கம்வகை தோ. (வ) ரூமஸ்தகி வி. நி. (௨) தனித் தனி தூள்செய்து (அ) ப. பாதம்பருப்பை நல்ல ஜலத்திலரைத்து பாக்கிலிருந்து சீனிசற்கண்டு ப. (உய) கூட்டி பாகுசெய்து சூரணங்களையிட்டு கிளறி பசு நெய் ப. (ரு) விட்டு பக்குவமாய்வரும் சமயம்முதலிலிருக்கும் திரவியங்களையிட்டு ரேக்கைச் சேர்த்து மிசரமாக்கி பத்திரப்படுத்தவும். தேகதிடப்படி அரை தோலா முதல் ஒரு தோலா வரையில் புசித்து மீது வெள்ளாட்டுப்பால் பசும்பால் முலைப்பால் கோழிசூப்பு இதுகளிலொன்று புசிக்கவேண்டும் புளி புகை புளிப்பாகிய வஸ்துகள் சீதளவஸ்துகள் நீக்கவும். லேகியமெரிக்க விலாரி, மாதுளை, கொய்யா இதுகளிலொரு தினுசு விறகில் எரிக்கவும். வாலிபவலிவும் உதிரக்கொழுமையும் தாதுவலிவும் விந்தூறலும் செய்யும்.



## மகாபோகக் குளிகை.

தங்கரேக்கு வி. நி. (க) கஸ்தூரி வி. நி. (ச) கோரோசனை வி. நி. (எ௨) பச்சைகர்ப்பூரம் வி. நி. (ரு) குங்குமப்பூ வி. நி. (ரு) மயிலோசனம் வி. நி. (க) படிகாரச்சுன்னம் வி. நி. (௰) இவைகளை ஈசரமூலிகைரசத்தால் அரைத்து மிளகுபிரமாணம் செய்து நிழலிலுணர்த்தி மாலை ஒரு மாத்திரை புசித்து மீது பசும்பால் ப. (ரு) புசிக்க இரவு புளி நீக்கி போகம்செய்யவும்: சகல சீதளசுரசன்னிகளும் தீரும்.

## சடாதார போஷகம்.

தங்கபற்பம் வி. நி. (க) ஆணிமுத்து பற்பம் வி. நி. (க) வெள்வங்கபற்பம் தோ. (௨) வெள்ளிபற்பம் தோ. (௨) சிமைமுங்கிலுப்பு தோ. (க) ரூமஸ்தகி வி- நி. (கரு) ஜாதிக்காய் தோ. (க) ஜாபத்ரி தோ. (க) இவைகளை தனித்தனி தூள்செய்து கற்கண்டுபத்தாசா தோ. உக, ஆலம்பால் தோ உய, இவைகளை மரத்மான் ஜாடியிலிட்டு மூடி சீலைசெய்து பூமியில் பத்துநாள் புதைத்தெடுத்து நாலுநாள்சென்று காலைமாலைகால் தோலா விதம் புசித்து மீது இரண்டு பலம் பசும்பால் கொள்ளவும் இவ்விதம் வ, ௨, மண்டலம் கொள்ள கவுமாரதிசையினரும் வாலிபவயதினையுடைய பலமுடையவர்களாவார்கள்.

## திரிதோஷ நிவாரணம்.

ஜடாமாசி பெரியலவுங்கப்பட்டை சிறுலவுங்கப்பட்டை சித்தரத்தை லவுங்கம் சுக்கு மிளகு திப்பிலி கோரைக்கிழங்கு குதேபல்ஸான் அசாருன் கோஷ்டம் சருயித்தா குங்குமப்பூ மவ்ரீத் வகை ப. க, ரூமஸ்தகி ப. ௨, இவைகளை தனித் தனி சூரணம்செய்து வெள்ளைசர்க்கரை ப. சயசா௨, நல்லஜலத்தில் பாகுசெய்து சூரணங்களையிட்டு லேகிய பதமாகஇறக்கி இரவில் போஜனத்திற்கு முந்தியாவது பிந்தியாவது இரண்டு முதல் மூன்று வி-நி. வரையில் கொள்ளவும் இதினால் உள்ளுறுப்புகளுக்கு பலம் உண்டாகும் வாய் நாற்றம்தீரும் காற்றைகண்டிக்கும் ஊத்தாம்பிள்ளையின் குளிர்ச்சியாலுண்டாகும் நீர்பெருக்கைமாற்றும் தாதுபுஷ்டியை தரும் பயித்தியங்களை நீக்கும் குளிர்ச்சியைப் பற்றிய தலைவலி இருமலை நீக்கும், மூலநோய் பாதநோய் கால்விரல்களினிசிவு படைகள் கல்லடைப்பு நீர்த்தாரை ரோகங்கள்தீரும் ரோமங்கள் வெளுக்காமல் காக்கும் (உக) நாள் கொள்ளவும்.

## மகாதிராவகம்.

பனைவெல்லம் ப. ௮, சுக்கு மிளகுதிப்பிலி சாதிக்காய் ஜாபத்ரி லவுங்கப்பட்டை லவுங்கம் கஸகஸா லவுங்கப்பத்ரி ஏலரிசி கஞ்சா வகை ப. உ, இஞ்சி ப. க, அபினி ப. உ, லிங்கம் ப. க, கருவேலம்பட்டை ப. ச, மலைதாங்கிவேர் ப. க, இவைகளை சற்றுநையநறுக்கி எ. படிசலத்தில் பாண்டத்திலிட்டு அ, நாள்ஊறியபிறகு பாலையில் திராவகம் இறக்கிக்கொண்டு நல்ல சலத்தில் ஒரு ரூபாயிடைவிட்டு கொடுக்க விஷபேதி, வாந்தி, அசந்தி விந்துநஷ்டமிவைகள் தீரும்.

## பிரீதிப்திராவகம்.

சுத்திசெய்தவாளப்பருப்பு ப. உய லிங்கம் ப. உ, சுக்கு மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், கடுகுரோகணி, வெண்காரம், வகைக்கு, ப. உ, பூநீறு ப. க, இவைகளை நையநருக்கி ச, படி நல்லஜலத்தில்பாண்டத்திலிட்டு அ, நாள்ஊறி திராவகம் இரக்கவும் நல்லசலத்தில் கால்ரூபா இடையிட்டுக்கொடுக்க மலபந்த வியாதிகளும் குதகவாய்வும் மேகவாயுவு நிவாரணமாகும்.

## பஞ்ச தீபாக்கினி திராவகம்

ஓமம் ப. ௰உ, சீரகம் கருஞ்சீரகம் சித்திரமூலபட்டை சுக்கு மிளகு திப்பிலி இஞ்சி வெள்ளைப்பூண்டு பெருங்காயம் சர்க்கரை வகைக்கு ப. உ, மூன்றுதேங்காயின் நிருகல் ௫ படி ஜலத்தில் அ நாள்ஊறி திராவகம் இறக்கவும் நல்ல ஜலத்தில் ஒரு ரூபாயிடை கொடுக்க அஜீரணம் உப்பிசம் பொருமல் வாய்வு குத்தல் பித்தம்தீரும்.

## அப்புதிராவகம்.

சித்தரத்தை சதகுப்பை சுக்கு உத்தாமணிவேம்பட்டை மாவிலங்கன்பட்டை நொச்சிபட்டை வகை ப. உ, இஞ்சி ப. ச, இவைகளை முன்மாதிரியாக தீநீர் இறக்கி நல்லசலத்தில் அரைரூபா இடைகொடுக்க ஐயரோக சம்பந்தவியாதிகளும் சுரம் சீதளம் குளிர்சுரம் பாண்டுரம்தீரும்.

## சோம்பு திராவகம்.

சோம்பு ப. ௬ய, இதை ௯, படி நல்லசலத்தில் ஊறவைத்து மறுநாள் பாலையில் திராவகம் ச, புட்டிக்கி அதிகப்படாமலிறக்கவும்.



## ஓமத்திநீர்.

மேற்கண்ட நிறைபடிக்கி இறக்கிக்கொள்ள வேண்டியது.

## சிவகரந்தை திராவகம்.

சிவகரந்தை சமூலம் வீசை ஒன்றுக்கு மூன்றுபடி சலம்விட்டு திராவகமிறக்கி இந்ததிராவகத்தில் வெள்ளைசக்கரை யிட்டு சர்பத்செய்து வேளைக்கி அரைபலம் சாப்பிட்டுவர மேகவியாதிகள் தீரும.

## வெள்ளைத் தாமரைப்பூ திராவகம்.

வெள்ளைத்தாமரைப் புஷ்பத்தின் இதழ்களாக எடுத்தது ப. (உய) நல்லசலம் படி (உ) விட்டு உடனே திராவகம் இறக்கி வெள்ளைசர்க்கரையிட்டு சர்பத்செய்து அரைபலம் நல்ல சலத்தில்விட்டு புசித்துவர உள்கொதிப்பு நீர்த்தாரை சூடுநீங்கி ஆரோக்கியத்தைதரும்.

## சிகஞ்சபின்எனும்.

## அங்கூர்காடி சர்பத்.

அங்கூர்காடி ப. (௯) வெள்ளைசக்கரை ப. (சரு) இரண்டையும் பதமாய்காச்சி பதமாயிறக்கி புதினாஇலை ஒருபிடி அதிலிட்டு வைத்துகொள்ளவும் இதினால் வாந்தி வோக்காளம் நீங்கும்.

## பாதாம் சர்பத்.

அகிற்கட்டை தோ. உ, இதை வீசம்படியாக யொறும் வடித்து பாதாம்பருப்பு ப. ச, வ, படிசலத்தில் பால்பிழிந்து கலந்து வெள்ளைசக்கரை ப. உய, கூட்டி பதமாய்காய்ச்சி இறக்கும் சமயம் பாலிலிழைத்த குங்குமப்பூ வி - நி. அரைக்காலும் பன்னீர் ப. உ, ம்விட்டு பதமாய்செய்து புட்டியில் வைத்துகொண்டு நல்லசலம் ப. உ, ல் சர்பத் தோ. கஉ, விட்டு சாப்பிட நாபிரணம் கொதிப்பு சூடு வாய்ரணமும் நீங்கும்.

## சரீஷ் சர்பத்.

பழம்புளி ப. ௯, காலேஅரைக்கால்படி சலத்தில் பிசைந்து தெளிவைஎடுத்து இதில் சரிஷ் தோ. ச, யிட்டு பிசைந்து திப்பியை நீக்கிவிட்டு வெள்ளைசக்கரை ப. ௰உ, இட்டு காய்ச்சி பதமாயிறக்கி ஒன்றரை தோலா புசிக்க பித்தம் தீர்ந்து ஆரோகியம் தரும்.

## உன்னுப்பென்னும்.

### சீமை இலந்தம்பழ சர்பத்.

உன்னுப் ப. அ, கூயஉ ப. சலத்திலிட்டு வேகவைத்து பிசைந்து உயச பலமாக எடுத்து திப்பியைநீக்கி வெள்ளை சக்கரை ப. யசு, இட்டு பதமாய்காய்ச்சி எடுக்கவும் ஒரு தோலா நல்லசலத்தில் புசிக்க பித்தம் மயக்கம் இருமிறு ப்பு தீரும்.

### தாமரைப்பூ சர்பத்.

வெள்ளைத்தாமரைப்பூ உணர்ந்ததாக இருந்தால் ரு-க, பச்சையாக இருந்தால் ரு-ச, இதில் இரண்டுருக்தல் சலம் விட்டுவேகவைத்து மூன்றிலொன்றாக வடித்து வெள்ளைசக் கரை ப. உய, இட்டு பதமாய்காய்ச்சி அரைபலம் விதம் பு சிக்க தலைநோய் பித்தக்காச்சல் பக்கநோய் வயிர்நோயிவை கள் தீரும்.

### வெற்றிலை சர்பத்.

இருநாறு வெற்றிலையை சற்றுநசுக்கி இரண்டுரு சல ம்விட்டு மூன்றிலொன்றாக வியாழம்வடித்து வெள்ளைசக்கரை ப. ௬உ, இட்டு பாகுசமயம் குங்குமப்பூ சாதிக்காய் சாபத்ரி வெள்ளையேலக்காயரிசி வகை தோ. ௭, லவுங்கம் தோ. ௰, இவைகளை பன்னீரால் அரைத்துக்கூட்டி இறக்கிக்கொண்டு அரைதோலா விதம்புசிக்க மனசந்தோஷம் காதுபுஷ்டி யும் சுக்கிலவிர்த்தியும் உண்டாம்.

### சந்தன சர்பத்.

வெள்ளைசந்தனம் ப. கூ, பன்னீர் ப. யஉ, ல் ௪, சாம ம்ஊறி சற்றுகொதிப்பித்து பிசைந்து வடிகட்டி இதில் வெள் ளைசக்கரை ப. யஉ, இட்டு பதமாயிறக்கி ஒரு தோலா பு சிக்க குலைக்கு பலந்தரும் காபறு பயித்தியம் வயிறுகுடு தாக ம்தீர்ந்து ஈறல்குலைக்கு வலிவுதரும்.

### ரோசாபூ சர்பத்தெனப்படும் சர்பத்தேதல்.

குலாப்பு ப. யகூ, ருயஉ ப. நல்லசலத்திலிட்டு சய, ப. மாக வடித்து மறுபடியும் யகூ, ப. குலாப்பு இட்டுகாய்ச்சி யசு, ப. மாக வடித்து மறுபடியும் யகூ, ப. பூவிட்டு காய்ச்சி யகூ, ப. மாகஇருக்க காய்ச்சி பிசைந்து வடிகட்டிக்கொண்டு இதில் வெள்ளைசக்கரை ப. யகூ, இட்டு காய்ச்சி பதமாயிற



க்கி ஒரு பலம் சோம்பு கியாழத்தில் கொள்ள மலபந்தம் பித் தம் வயிற்றின்ருடு தீரும்.

### கிருமிகள் நாசனி.

செல்லில் வேகித்தெடுத்த தேங்காயுடன் ஏலக்காயரிசி ப. (க) தோல்நீக்கிய புரசம் விரை ப. (க) கூட்டியரைத்து கழற்சி க்காய் பிரமாணம் உருட்டி சக்கரையில் வைத்து புசிக்க பேதியில் கிருமிகள் வெளிப்படும்.

வாளப்பருப்பு சாரைப்பருப்பு கஸ்தூரிமஞ்சள் பாதம் பருப்புவகை ப. (க) கூட்டியரைத்து துணியில்கட்டி சலத்தி ன்மீது ரோலாந்திரம் கட்டி எரித்து அதில்வரும் எண் ணையை பிழிந்து சக்கரையில் (க) (உ) துளிகொடுக்க பேதி யுடன் கிருமிகள் வெளியாய்விடும்.

### பேதிக்கி சந்திரவதன குளிகை.

கழற்சிபருப்பு வேம்பின்பருப்பு இரத்தபாளம் வாளப்ப ருப்பு சமனிடை இவைகளை சுத்தித்து மிளகாயிலையைவதக்கி ரசம் எடுத்துவிட்டரைத்து சிறுபட்டாணி பிரமாணம் மாத் திரைகள் திரட்டி நிழலுலர்த்தி சக்கரை பனைவெல்லம் இவைகளில் சிறுவர்களுக்கு ஒன்றும் பெரியவர்களுக்கு (உ) (௩)ம் கொடுக்க பேதியாய் பித்தம், வாயு, மடிப்பு, முடக்கல், சுரம்தீரும்.

### இதனைவிரோசன சர்பத்.

ஆலுபுகாருபழம் (யரு) கருவளிக்காய் (சய) சீமைஇலந்தம் பழம் (௩ய) சுத்திசெய்த சக்முனியா ப. (௩) நிலவாகை ப. (ஞ) குலாப்பு பனப்ஷா காவுசபான்பூ தாமரைப்பூ பெருஞ் சீரைக்காவிரை கிருஞ்சீரைக்காவிரை காசினிவிரை வகை தோலா (உ) இவைகளை (ரு) (ப) தாமரைப்பூ கியாழத்தி லிட்டு வேகவைத்துப் பிசைந்து வடித்து இதில் வெள்ளைசக் கரை ப. (உய) இட்டு பாகுபதமாய் காச்சி வைத்துக்கொண் டு காலையில் (கஉ) தோலாவிதமாக (௩) நாள் புசிக்கவும்.

### சுகபேதி மாத்திரை.

நல்ல சலத்திலூறிய கோதுமைமாவை ப. சவ, சுத்தித்து முளைநீக்கிய வாளம் ப. (ஞ) பூரம் ப. (ல) சுக்குத்தூள் ப. (ல) இவைகளை பன்னீர் ப. உ, விட்டரைத்து பயறுபோல் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி குழந்தைகட்கு முலைப்பா லிலும் பெரியவர்களுக்கு சோம்பு, திராக்ஷை சுக்கு இவி ன் கியாழத்தில் தேகவலிமை தெரிந்து உ- ௩, கொடுக்க மனக் களிப்புடன் சுகமாய் பேதியாகும்.

காசினியிலை சர்பத்.

காசினியிலை ரசம் எடுத்து காய்ச்சி வடிகட்டியது ப. ௰௯, வெள்ளைசர்க்கரை ப. ௨௰, இட்டுகாய்ச்சி பதமாயிறக்கி இரண்டு தோலா நல்லசலத்தில் புசிக்க நீர்கட்டு நீர்எரிவு உட்காய்ச்சல் தீரும் மலம்இளகும் குலைக்கிபலம் தரும்.

தாழன் விழுதின் சர்பத்.

விழுதின் ரசத்தை முறித்துவடித்தது ப. ௰௯, வெள்ளை சக்கரை ப. ௨௰, இட்டு பதமாய்காய்ச்சி வைத்துக்கொண்டு இறக்கும் சமயம் ஒரு எலுமிச்சம்பழம் ரசம்விட்டுக்கொண்டு ஒன்றரை இரண்டு தோலா வரையில் நல்லசலத்தில் புசிக்க கொதிப்பு பித்தம் இவைகள் சாந்தமாகும்.

அங்கூர் என்னும் கொடிமுந்திரிபழ சர்பத்.

பச்சை அங்கூர்பழ ரசம் ப. ௰௫, சீனாகற்கண்டு ப. ௰௫, காய்ச்சி முடிவில் பன்னீர் ப. ௨௫, விட்டு இறக்கி வேளைக்கு ஒருபலம் நல்லசலத்தில் புசிக்க பித்தசூடு தணியும்.

நன்னாரிவேர் சர்பத்.

நன்றாக ௧, படிசலத்தை கொதிப்பித்து இறக்கி இதில் ௰௨, ப. வேரையிட்டு இரண்டுசாமம் ஊறியபிறகு அடுப்பின்மீது வைத்து வேகசெய்து ௪, படியாக வடித்து இதில் ௰௨, ப. சீனியிட்டு பதமாய்காய்ச்சி இறக்கி இரண்டு தோலா நல்லசலத்தில் விட்டுசாப்பிட காங்கை பிரமேகம் குருக்கு நீர்கடுப்பு நீங்கும்.

நாரிஞ்சிபழ சர்பத்.

நாரிஞ்சிபழத்தினுள் சுளையின் ரசம் ப. ௭, வெள்ளைசர்க்கரை ப. ௧௰, இட்டு பதமாய்காய்ச்சி இறக்கும் சமயம் குங்குமப்பூ வி - கி. வீசம் நல்லசலத்திலரைத்து அதிலிட்டு கலக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு ௨, தோலா புசிக்க குஷ்ணபேதி பித்தம் இருதுடிப்பு எரிவு அரோசிகம் தீரும்.

சுகருபா சர்பத்.

நன்னாரிவேர் நாகமாசல்லிவேர் அத்திபட்டை மகிழம்பட்டை ஆலம்விழுதின் துனிகள் கொட்டகரந்தைப்பூ கோரைக்கிழங்கு வகை ப. ௯, இவைகளை நையதுக்கி ஒரு படி சலத்தில் ஒருநாள் ஊறவைத்து பிசைந்து வடிகட்டிக்கொண்டு இதில் ௫௰, ப. சீனாகற்கண்டிட்டு அழுக்கை நீக்கி ஒன்றரை தோலா சகருபாவை ௫, ப. பன்னீராலரைத்து வைத்திருந்து அதிலிட்டு பதமாய் இறக்கிக்கொண்டு வேளை



க்கு ௨, தோலா நல்லசலத்தில் கலந்துசாப்பிட நாள்வொன்றிற்கு மூன்றுதரம் சாப்பிட குடிகாந்தல் தீர்ந்து இரத்தவிர்த்தியுண்டாகும்.

நெல்லிக்காய் முறப்பா.

முதிர்ந்த பெருநெல்லிக்காய்களை நன்றாக குத்தி நல்லசலத்திலிட்டு ஊறியபிறகு ஒவ்வொன்றையும் கையினால் அழுத்தி நீரைநீக்கி துணியினால் ஒத்திவிட்டு பெருங்காய்கள் நூறுக்கு வெள்ளைசர்க்கரை ௨௰, ப. பாகுசெய்து அதிலிட்டு ஒரு ஆவிவரும்படி எரித்து சாடியிலிட்டு ஒருநாள்வைத்து மறுநாள் வடிகட்டி இறங்கியசலத்தை காய்ச்சி பதமாயிருக்கும் சமயம் காயிலிட்டு குலுக்கி ஒருமாதம்வைத்து பிறகு உபயோகப்படுத்தவும்.

இஞ்சி முறப்பா.

அரைவிரை முதிர்ந்த இஞ்சியாய் நார்நரம்பு இல்லாத தாய் தோல்போக்கி நல்லசலத்தை நன்றாக கொதிப்பித்துயிறக்கி இதில் இஞ்சியைப்போட்டு மூடி ஆறியபிறகு வடித்து மறுநாள் வேறே சலத்தை கொதிப்பித்து இட்டு முன்போலாகிரியாக (எ) தரம்செய்து கடைசியாக நல்லசலத்தில் இஞ்சிகளையிட்டுசோடா ப. ௧, யிட்டு வேகவைத்து இறக்கி நன்றாகஉலர்வி வெள்ளைசர்க்கரை ப. ௨௰, பாகுசெய்து இறக்கி ஆறியபிறகு அதில் இஞ்சிகளையிட்டு மூடி பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

நாரங்கடுக்கா முறப்பா.

௰, கடுக்காயை பூமியில் மணல்பரப்பி அதின்மீது [illegible] பரப்பி அதின்மீதுடன், விரல்களால் மணல்பரப்பி நல்லகைக்கால் நன்றாகநனைத்து சாய்த்துவைக்காமல் ௫ நாள் நனைத்து எடுத்து அலம்பி ஊசியால் சாய்முழுமையும் குத்தி அழுத்தி அதிலிருக்கும் துவரை நீர்வழியாக நீக்கி ௨௰, ப. வெள்ளைசர்க்கரையை பாகுசெய்து அதிலிட்டு சாடியில்போட்டு ஒருமாதம் சென்றெடுத்து உபயோகப்படுத்தவும்.

சிந்துவிட தைலம்.

௰, முட்டையை நீரில்வெதுக்கி மஞ்சட்கருக்களை எடுத்து ஒரு மண்பாத்திரத்தில் நன்றாக கருகும்வரையில் எரித்து தயிலமிறங்கும் சமயம் அடுப்புமீது அந்தபாத்திரத்தை முன்புறம் சாய்த்துவைத்து மத்தினால் கருக்களை அழுத்த தயிலமிறங்கும் அதைஎடுத்து கொள்ளவும்.

## மெழுகு தைலம்.

தேன்மெழுகு ப. அ, லவங்கப்பட்டை லவங்கம் சாதிக்காய் சாபத்திரி ருமஸ்தகி அக்கர்காரம் சாம்பராணி வகை தோ. ௫, குங்குமப்பூ தோ. ௧, கள் தோ. ௧, குங்கிலியம் ப. ௪, மணல் ப. ௪, கூட்டி உருக்கி குழாவழியாய் இறக்கவும்.

புன்னெண்ணெ ப கூ, ல் தேன்மெழுகு ப உ, குருசாணி வோமம் ப. க, பளிங்குசாம்பருணி ப. க, கஸ்தூரிமஞ்சள் லவங்கம் கற்பூரம் வகை ப. ல, சாதிக்காய் செஞ்சிகிழங்கு வகை ப. ௧, தூள்செய்து போட்டு ஊறவைத்து அடுப்பில் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு பிடிப்புமீது தேய்த்துவரவும் குன்றி உள்ளுக்குக்குடுக்க சீதளசுரம் நீங்கும்.

## சாம்பிறாணி தைலம்.

சாம்பராணி ப. ௫, கற்பூரம்ப. கல, வெள்ளைகுங்கிலியம் ப. கஅ5, தூள்செய்துக்கொண்டு பானையிலிட்டு வாய்புறம்மலைக்குட்டைவைத்து குழாவழியாக இறக்கிக்கொண்டு தலைபாரம் தலைவலிக்கும் தடவிவரவும்.

## வாலுழுவை தைலம்.

ஒருபுது மண்பாண்டத்தில் அடியில் ௫, துவாரமிட்டு அதில் உ௰, ப. வாலுழுவைஅரிசியையிட்டு மீதுமூடி சீலைவாபுறம்செய்துகுழிபறித்து அதில்ஒரு சின்னகலயம்வை த்து பாண்டத்தின் கீழ்த்துவாரத்தில் இரும்புகம்பிகளை சொருகி அதின்மீது வைத்து ஓரம்மண்கட்டிசுத்தி கூ௰,வறட்டி வளாயில் அடுக்கி தீயிட அடியில்வைத்தகலயத்தில்தயிலமி றங்கும் வேளைகளில் இரசேந்தியனி வெற்றிலையில் தடவிபுசிக்க பாண்டுவீக்கம் நீங்கும்.

## பெருநீர்வேம்பு தைலம்.

நிவுரர்வேம்புசமூலம் ப. உ௰, நெல்லிக்காய்கெந்தி ப. உ வாதமுருவைஅரிசி ப. ௫, இவைகளை ஒருபாண்டத்திலிட்டுமுன் மாதிரியாக தயிலமிறக்கிக் கொண்டு மனக்கத்தை அதியமா வில் ௫, அளவிட்டு காலைமாலையாக உ௰ நாள் புசிக்க விஷக்கடி மேகம்தீரும்.

## விளாம்பட்டை தைலம்.

விளாம்பட்டை ப. உ௰,முன்மாதிரியாக குழித்தயிலமிறக்கி பித்தவெடிப்பு படைகளுக்கு தடவிவர நீங்கும்.



## காங்கேய னெண்ணெ.

இயிர், தடிப்பு, குட்டம்ரணம், படைசட்டை தீரும்.

பூவரசபட்டை ரசம் அத்திபட்டை ரசம் வெள்ளறுகு ரசம்கோவைரசம் காரசெங்கல்ரசம் வகைபடி ல, வெள்ளைத் தமுத்தெண்ணெ படி உ, ஆஸ்வகெந்திகிழங்கு ப. உ௫, பாக்கிசக்கை ப. கூ, லவுங்கப்பட்டை கார்போகரிசெங்குரோ கணி இப்பிலி வாய்விளங்கம் வகை ப. க,வால்மிளகு ப. ௫ தூள்செய்து போட்டு பசும்பால் படி. ல, காய்ச்சிவடித்துபசு நெய்யை ஞாணியில்கடவிபூரத்திற்கு சுத்தி கொளித்தியபூரம் ப. ல, இட்டுநன்றாகஅரைத்து ௫, ப. விதமாக எ, (கச) (உக) நாள்புசிக்க சுரக்காய் பீர்க்கன்முருங்கை பருப்பு உப்பு அரைக்கீரை நெய் ஆகும் புளிநீக்க.

## அண்டவாதத்திற்கு

பூரம் வீரம்துரிசி தாத்தம் பளிங்குசாம்பருணிகற்பூரம் வகை வி - கி. க, வெண்ணெ ப.க, கூட்டியரைத்த இரும்புசி மிளில்வைத்து அண்டபெரு நரம்புமீது அடுப்புபோல் கூ, புள்ளி பருப்பளவாக வைக்க அந்தவழியாக நீர்மாமிச நீர்வடிந்து குணமாகும்.

## சுகபேதி யெண்ணெ.

சித்தாமணக்கெண்ணெ படி க, பசும்பால்படி.௪, மருசம் கடுக்கா இந்துப்பு கடுகுரோகணி வாளம்வகை ப. ௫, காய்ச்சி வடித்து பெரியஆளுக்கு ௫, ப. விதம் ஒருநாழிசென்று வெந்நீர்குடிக்க பேதியிறக்க உப்புகஞ்சி மோர்மாலை மிளகு சுக்கு சிரகமியாழம் புசிக்க இரவு மிளகுநீர் சாதம் குடிக்க.

## கரப்பானெண்ணெ.

பூவரசு செங்கத்தாரிபூ தகரப்பன்பட்டை கருடக்காலி மிலாவலா வகை ப. ௰, ௫, படிசலத்தில் பொருமவடித்தது படி க, முத்தெண்ணெ படி க, வெள்ளாட்டுப்பால் படி க, மிளகு கருஞ்சீரகம் கார்போகரிசி பூண்டு வசம்பு சுதகுப்பைனெரு கடுகுரோகணி காரைப்பட்டை வகை ப. ல, காய்ச்சிவடித்து வலம்புரிக்காய் பரங்கிபட்டை வகை ப. ல, காய்ச்சிவடித்து காண்டிவிதம் குடிக்க சகலகரப்பான் தீரும் அரிப்பு, ரணமீதுதடவ தீரும் பத்தியமாக புசிக்க.

## கெந்தி யெண்ணெ.

முத்தெண்ணெ படி, க. கையான்ரசம், பொன்னுங்கண்ணிரசம் குமரி ரசம், வெள்ளை வெங்காயரசம், கோவை,புளியாரை, கற்பூரவள்ளி இவைகள் ரசம், வகை படி, ல. சாதிக்கா சாபத்திரி, மாசிக்கா, கடுக்காபூ, கோஷ்டம், அமுக்

கனுள் கிழங்கு, இருபிரசம், வெந்தியம், லவங்கபத்திரி, லவங்கபட்டை, பூண்டு வகை ப. ரு. பசும்பால் படி, க. இதிலரைத்துச்கூட்டி காச்சிவடித்து கோரோசனை, குங்குமப்பூ; சாதிக்காய் வகை ப. ரு, அன்செய்திட்டு கரைந்துசிவிதம் குடிக்க கெண்டெவட்டை கணைசுரம் மாந்தம் உப்பிசம் ரணங்கள் கெற்பவெட்டை கணைப்பாண்டு நீரிழிவுவெளுத்ததேகமும் உஷ்ணமும் தீரும்.

தேகமென்ற மூலமதில் சூடுகொண்டால்
சிவிவியப்புகைதான் மேலேசென்று
ஆகமுடன் சிரசதிலே யனல்தான்மீறி
வப்புவெனும் நீர்ப்பனைத்து வலியுண்டாச்சு
பாகமுடன் யன்னீர்தான் தசையில்சேர்ந்து
பக்குவமாய்குடிகொண்டு சுரங்களாச்சு
தாகமுடன் சுரமீறிவாதபித்தந் தணிந்ததினால்
சிலேத்துமத்துக் குயிர்தானச்சே.

ஆச்சப்பா சேத்துமந்தான் மீறித்தானால்
யப்பனே தோஷத்துக்குறுதியாச்சு
நீச்சப்பா தோஷத்துக் கடிதானென்ன
நிலையான வாதமதில் பித்தம்மீறி
போச்சப்பா பாதாதிகேசம்தோட்டுபொங்கியந்த
பித்தநீர் பரந்துமீறி
காச்சப்பா தேய்வுடனே வாய்வுங்கூடி
கடினமுடன் ஆகாசம் புக்கும்பாரே,

பாரப்பா மூன்றுமொன்றாய் கூடிப்போச்சு
பகையான பிரிதிவியும் யப்பும்நின்று
சேரப்பா கரைந்துதண்ணீர் மண்ணாய்ப்போச்சு
சிவசிவா பஞ்சகர்த்தர் கூத்திதாச்சு
ஆரப்பா அறிவார்கள் சடலவாழ்க்கை
அரகரா நீர்க்குமுழி மாய்கை மாய்கை
நேரப்பா நீறுப்போல சடலவாழ்க்கை
சிவசிவா இதையறிந்து குருவைக்கரே.

விதியை மதியால் நீங்கலாகும்.

மதிபமூர்த மென்றதொரு வகையைமைந்தா
மார்க்கமுடன் கோடியிலே யொருவன்காண்பான்
விதியறிந்தால் மதியறியும் மதிதான்தேய்ந்து
வினையான ரவியதனு லமூர்தம்காணும்



பதியறிந்து யமூர்தமதை கொள்வதற்கு
பக்குவமாய் மூலமதில் மனதையொட்டி
கேதிமோக்ஷமென்ற மேல்மூலம்பாரு
திருவையதிலுண்டாகும் வரிவைப்பற்றே.

மேகவாயிவு கருக்கு மாத்திரை·

கருநாபியை மூன்றுநாள் ஆவின் கோமியத்தி லூறச்செய்து எடுத்து மேல்தோல் போக்கி உலர்த்தி தூள்செய்தது வி ரு, உ. கோரோசனை வி ரு, க; சூதம் வி ரு, வ. பூரம் வி ரு, வ. இரசசிந்தூரம் வி ரு, வ. வெள்ளைக்காக்கணு வேர் வி ரு, வ. லவங்கம் வி ரு, வ. சயசெந்தூரம் வி ரு, ரு. சுக்கு வி ரு ரு. திப்பிலி வி ரு, ரு. திப்பிலிமூலம் வி ரு, ரு நெல்லிக்கா கெந்தகம் வி ரு, ரு தாம்பராஷ்டகம் வி ரு, ரு. அக்கரகாரம் வி ரு, ரு. வெண்காரம் வி ரு, விசம். லவங்கம் வி ரு, விசம். இவைகளை கறுப்புவெத்திலை ரசந்தாலரைத்து பயறுபிரமாணம் மாத்திரைசெய்து வாய்வு வாய்விட்டல் இடுப்புவலியிவைகளுக்கு வெத்திலை ரசத்திலும் திமிர் விக்கயிவைகளுக்கு இஞ்சிரசத்திலும் ஆள் தேகதிடத்தின்படி, ௩. நாள் கொடுக்க நீங்கும் ஏழாவது நாள் முத்தெண்ணையுடன் அன்னகாடி மஞ்சள் வோமம் வெத்திலைகாம்பு கூட்டி காச்சி ஸ்நானம் செயது வைக்கவும் இச்சாபத்தியம்.

மகாரோடாகுழிமாத்திரை.

தாளகம் வீரம் பாஷாணம் கௌரி லிங்கம் சூதம் கெந்தி பூநீர் பச்சைகற்பூரம் கல்லுப்பு துரிசி வெண்காரம் சவுக்காரம் இந்துப்பு நவசாரம் படிகாரம் அன்னபேதி செப்புநெரட்டி பால்துத்தம் மனோசிலை காயம் சக்கரைத்தான் திரிகடுகு திரிபலாதி வசவாசி தேவதாரம் கிராம்பு ஜாதிக்கா சாபத்ரி கோஷ்டம் கடுகுரோகணி சித்திரமூலம் குராசானி வோமம் கஞ்சாவேர் பேரீச்சன்காய் திராக்ஷி மஞ்சிஷ்டி சிறுநாப்பூ வலம்புரிக்காய் பூண்டு வாளம் வகைக்கி களஞ்சி க. சுத்திசெய்தவைகளை செய்து சூரணம் செய்பவைகளை பொன்வரசெய்து சூரணம்செய்து யாவும் ஒன்றாய்கூட்டி கரிச்சாலாகவறுத்து சூரணம்செய்து யாவும் ஒன்றாய்கூட்டி கரிச்சாலைரசத்தால் நாள் எ நொச்சிரசத்தினால் நாள் எ விஷ்ணுகிரந்தை ரசத்தால் நாள் எ [illegible]விதமாக உடக நாளரைத்து பயறு பிரமாணமாக மாத்திரைசெய்து அடியில்கண்ட அனுபானங்களில்கண்டபடி கொடுத்துவரவும்· வெட்டைக்கு அருகம்வேர் கியாழத்தில் கசரோகத்திற்கு தாமரைப்பூ கியாழம் சுரம் விஷத்திற்கு பழரசத்தி லரைத்துபூச தேளுக்கு கடிவாயி

ல் தடவி கலிக்கமும் சுகசன்னிக்கு மருஞ்சரசம சுர தாகத்தா
கு சர்க்கரையில் வுள்சுரத்திற்கு மோர் பித்த சிலேத்பனத்தி
ர்க்கு இஞ்சி முறைக்காச்சலுக்கு முடகொத்தான் கியாழம்
விஷவாதம் வேப்பிலை தாணிக்கா முளகு சுக்கு பசுகோமிய
த்தில் காமாலை சோகை பித்தங்களுக்கும் மூன்மாதிரியாக பில்
லிருவ்ளியத்திற்கு சலத்திலிட்டு குளித்தா பாப்பா முள்ளி
ப்பழத்திலே வைத்து குளிசமாடி முன்கையில் கட்ட. அண்
ட்வாதத்திற்கு பூலாசெடி. ஆரும் அமுக்குரா தாளும் கூட்டி
கொடுக்க,மாலைகண் குருடுகாசத்திற்கு கையான்ரசம் பழரச
த்திலும் கலிக்கவிட மூலகிராணிக்கு சக்கரையில்- நஞ்சுதின்
றவர்களுக்கு கருஊமத்தன் ரசத்தில் - அமசு - வாதத்திற்கு
மாவுலிங்கன் ரசத்திலும் அஷ்டகுன்மம் தசவாய்வு விப்பு
ருதி காசம் சுவாசம் பீலிகை சீராம்பல் கோவை அடிவயிறு
விக்கம் கவுசி மந்தாரகாசம் சுகசு சிலேர்ப்பனத்திற்கும்
தும்மட்டிக்கா ரசம் முசல்வலிக்கு ஊமத்தன் ரசத்தில் சுசி
ரம் கபாலகுஷ்டம் கிரந்தி சூலை சிலவிஷம் கடிவிஷம் வாய்
நீரொழுக்கிரக்கு திரிகடுகு ஆளில் பாதசக்கரம் பாதபுத்தி
ற்கு சாதிக்கா தயிலத்திலிழைத்து தடவ கண்டமாலை புண்பு
ரைபிளவைக்கு வெண்ணெயி லிழைத்து தடவ தண்ணியி
லிழைத்து உள்ளங்காலில் பூசிநடக்க நோயிராது தங்கதக
ட்டில் குளிசம்கட்ட வாசியுள்ளடங்கும்.

கோடாசூரி.

ரூதம், கெந்தி, தாரம், சிலை, லிங்கம் நாபி நிர்விஷம் கா
யம் அன்னபேதி மாங்கிஷபேதி எவாசாரம் நவாசாரம் சத
கிசாரம் சகஸ்த்திரபேதி சீனகாரம் பொரிகாரம் இந்துப்பு
பொட்டிலுப்பு சவுக்குப்பு வளயலுப்பு கல்லுப்பு சடாமாசி
திரிகடுகு திரிபலாதி கோஷ்டம் அக்கிராகாரம் சாதிக்காய்
இரும்பு ஏலரிசி லவுங்கப்பட்டை வாலுழுவை கார்போக
வரிசி அதிமதுரம் லவுங்கப்பத்ரி கொத்தமல்லி வாய்விளங்
கம் மஞ்சள் கஸ்தூரிமஞ்சள் சீரகம் கருஞ்சீரகம் சிறுநாகபூ
செவ்வியம் சிறுதேக்கு தேசாவரம் வகைக்கு வி. கி. க,
வாளம் வி-தி. சா, கையாந்தகரைரசத்திலே எ, நாளரைத்து
குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்யவும். சுரத்திற்கு பஞ்
சமூலகியாழத்தில் குளிர்காச்சலுக்கு கண்டங்கத்திரி முக்கா
வேளை கோஷ்டம் அக்கிரகார கியாழத்தில் மேகத்துக்கு
சீந்தில் சர்க்கரை இருமலுக்கு கண்டங்கத்திரி கியாழத்தில்
அசீரணத்திற்கு ஓமகியாழம் வயிற்றுவலிக்கு பெருங்காயத்
தில் சுகபேதிக்கு சர்க்கரையில் நீர்கிருச்சனத்திற்கு உத்தா



மணிரசம் மஞ்சள்மேகம் வெள்ளாட்டுப்பால் நீலமேகத்தி
ர்க்கு ஏலரிசிகியாழம் காயகரம் லவுங்ககியாழம் செர்பகரம்
தணியாகியாழம் குழந்தைசுரத்திற்கு சுக்குகியாழம் தோஷ
த்திற்கு குட்டிவிளா கியாழத்திலுமிடவும் நோயாளியின்றிட
மும் வயதும் நோயினளவும் தெரிந்து பத்தியமும் மருந்தும்
யூகித்து நடத்திவர மேற்கண்டவைகள் நீங்கும்.

அயநங்க செந்தூரம்.

கெந்தி ப. ச, காட்டிரும்புத்தூள் ப. ரு, வாலைரசம்
வி-கி- சு, தங்கப்பொடி வி-கி.க வெள்ளைப்பாஷாணம் வி-கி.
ய, எலுமிச்சம்பழரசத்தால் சா, அரைத்து பட்டாணி
போல் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி சாதி குப்பியிலி
ட்டு காசக்குமுடி களிசட்டியில் இரண்டுவிரற்கடை மணல்ப
ரப்பி புட்டியைவைத்து புட்டிக்கு கழுத்தளவு மணல்கொ
ட்டி கமலம்போல் சு-சாமமெரித்து ஆறவிட்டு எடுக்கவும்,
கழுத்திருந்தால்புட்டியில்வைத்துவலுக்கெடுத்துவிசேடமாகும்
காடிசலத்தில் பலாசிடையிட கட்டும் இதையுருக்கண்ட மேலி
யத்தில் மண்டலம் கொள்ள தளர்ந்த நரம்புகள் இறுகி மேக
வலிவுபெலும் உக, மேகமும் பாண்டுரோகங்களும் தீரும்.

மேமல் படைகளுக்கு குருவபாழுவை தேனிலரைத்து
பூசுவதாலும் ஆனைநெருஞ்சிலை பழரசத்திலரைத்து பூசுவதா
லும் கோவஞ்சியை பழரசத்திலரைத்து பூசுவதாலும் கோ
ரைமசத்தும் குங்குமப்பூவுமரைத்துபூசுவதாலும் சிறுசெருக
ளியைதேனிலரைத்து பூசுவதாலும் பொன்னுவரைவேரை
சந்தனம்போலரைத்து பூசுவதாலும் மாவிலங்கையை காடியில
ரைத்து பூசியும் நாகமல்லிவேரை பழரசத்திலரைத்து பூசினு
லும் நீங்கும் மேருசன் ப. கஉ. குழிகெந்தி ப. அ. பொரித்த
வெண்காரம் ப. ஐ சிறுகுறிஞ்சா பஞ்ச வெள்ளாட்டுப்பாலி
லரைத்து பில்லைதட்டி உலர்த்தி நல்ல சலத்திலரைத்து
தடவிவர படைகளனைத்தும் தீரும்.

சொறிசிரங்கு காடியிலரைத்தும் மரு தோன்றிபூவைக
ல்லெண்ணையில் ஊறவைத்தும் கீரடிமுத்து பருப்பை பழர
சத்திலரைத்து பூசி மாலை சாணந்தேய்த்து குளிப்பதாலும்

கட்டிகள் உடைய துத்திஇலையும் சாதமுமரைத்துகட்டி
னாலும் சிறுபசளையிலேயும் பிரப்பந்தண்டு என்னையில் வத
க்கிக்கட்டினாலும் நாயுருவி யிலை யரைத்து கட்டினாலும்
அரிசிமாவும் யானிவிளாமாவும் கூட்டி காடியினால் கிளரி
கட்டிவருவதாலும் கிராசுசியும் ஆட்டுக்கொழுப்பு மரைத்து
கட்டுவதாலும் உடையும்.

நாம்புசிலந்திக்கு சுருள்விசப்பு தேன்மெழுகு என்னெண்ணெயில் பிளாஸ்த்திரிபோல் செய்து சிலந்திமீது போட்டுவரவும் ஊதாகத்திரிகாய்க்குள் கற்பூரம் சாம்பராணி இரண்டும்வைத்து முதிருப்பியினாற்றி வெந்தபிறகு எடுத்து கோவைரசத்தாலரைத்து கட்டி வரகிறும் கடசாரம் பிடி (க) ரசம் வி - டி. (க) கூட்டியரைத்து சிலந்திமீது வைத்து எருக்கம்பழுப்பு (எ) மீதுவைத்து கட்டிவைக்க ஆற்றுவிடும்.

சந்தராஸ்பிளாஸ்த்திரி.

இரும்புபாத்திரத்தில் சுத்தமான நெய் ப. (சா) தேன்மெழுகு ப. (உ) கூட்டியுருக்கி நான்செய்த சந்தராஸ் ப. (சா) இட்டுமிறக்கி கடுகையில்தானே காரியசெந்தூரம் தோ. (சா) இரசகற்பூரம் கற்பூரம் லிங்கம் சாம்பராணி முர்தார்சிங்கி வகை தோ. (௧) நான்செய்திட்டு இரும்பு ஆயுதத்தால் ரேகித்துக்கடைந்து இதைபிளாஸ்த்திரியாக சகலகட்டிகள் மீதுவர கட்டிகளை உடைத்து நோய்களைதீர்த்து ஆற்றிவிடும்.

அடிப்பட்ட காயத்திற்கும் அதினால்வந்த வீக்கத்திற்கும் கட்டகல்கண்ணும்பு ப. (௧) சப்பு ப. (௧) இருசித்தண்டத்தின் இருகுருவும் தயிர்கட்டி ப. (உ) கூட்டியரைத்து அந்தஇடத்தில் வைத்துபோல் பூசிவரவும் சத்தம்கட்டிவிருந்தாலும் கரைந்து குணப்படும்.

அம்மைவடுவுமாற வேப்பிலையும் கஸ்கஸா கஸ்தூரி மஞ்சள் கூட்டியரைத்து தேகத்தில் பூசிதேய்த்து குளித்துவரவும்.

குளிகால்வெடிப்புமாற கன்றுகுட்டி சாம்பல் தேன்விரைத்து பூசவுதாலும் கிளிஞ்சல்கண்ணும்பு வெல்லவுடிருல் முட்டைவென்னீர் காற்றநெய் கூட்டியரைத்து பூசவதாலும் விளாம்பட்டை தயிலம் பூசிவருவதாலும் தீரும்.

அறுபட்ட நரம்புகள் பூநாகத்தை யரைத்து பூசிவரக்கூடும் காயத்தைத்தை முன்வெளியாக கன்டையிடித்து கட்டிவைக்கவும்.

அருகிணைகளுக்கு கிணற்றை நன்றாக சுத்தப்படுத்தி நாவேலமன்னறுவாம் இரசபற்பம் வி - டி. (உ) சங்கனத்தான் வி - டி. (வ) கூட்டி வேசாகாகி துணியால் முடிவைத்து வரகிணம்ஆறும் நாயுருவிரசத்தில் சயவெள்ளையை கலந்து கிணமீது பூசிவந்தாலுமாறும்.



வெண்குட்டம் கருங்குட்டத்திற்கு கோரோசனையை உமிழ்நீராலரைத்து பூசிவரகிறும் கருப்புபிளாஸ்த்திரி என்னெண்ணெ ப. (அ) இதில் சயசெந்தூரம் ப. (உ) குங்கிலியம் ப. (அ) தேன்மெழுகு ப. (உ) இரசகற்பூரம் ப. (வ) இட்டு காய்ச்சிகருக்கும் வரையில் நழுவிவந்து பதமாகும் சமயம் இறக்கி துணியில்தடவி ரணமீதிட்டு வரவும்.

பச்சைபிளாஸ்த்திரி பங்காளாபச்சை குங்கிலியம் வகை ப. (க) ரசம் ப. (வ) ஊமத்தன்ரசத்திலரைத்து பசுவெண்ணெய் கூட்டி எருபாத்திரத்திலரைத்து வெற்றிலையில்தடவி போட்டுவர புத்துரெந்தி புடைகள் தீரும்.

நாகபற்பம்.

சுத்திசெய்த நாகம் ப. (சு) குதம் ப. (௧) இரண்டையும் உருக்கி தொக்கித்து கல்வத்திட்டு அஞ்சராயகாசல் வெடியுப்பு ப. (க) சேர்த்து உத்தாமணியிலை ரசத்தால் (ய) நாள் மரைத்து பில்லைசெய்து உலர்த்தி ஓட்டில் வைத்து சீலைசெய்து (ய) எருவில் புடம் இதில் குன்றிஇடை பாலில் வெருத்து உலர்த்தி எக்கருக்கரைப்பான் மனிவெல்ல முகம் சமயாக சிறைந்த கழற்சிக்காய் பிரமாணத்தில் வைத்து மூன்றுநாள் கொடுக்க நீர்மேகம் சூலம்தீரும்.

வன்னிதேற்பாகிய லிங்கக்கட்டு.

ஒரு பலம் லிங்கத்தை தேன் முலைப்பாலில் (கூ) நாள் ஊறவைத்து ஒரு பலம் கெல்லிகொடுந்திரை ஆலம்பாலினால் சுருக்கி நன்றாககொதிக்க இடித்து லிங்கத்திற்கு கவசம் கொடுத்து உலர்த்தி சிறுகுழியில்வைத்து மீது மணலிடல் மறைத்து சுடு பம்பலிப்படியாக (உ) வரட்டியால் புடமிடவும் எடுத்து கெந்தியை நீக்கி வேறுகெந்தகம் பலம் ஒன்றை முன்பாலிட்டது கவசித்து முன்மாதிரியாக குழியில்வைத்து ஒருவரட்டி அதனைப்படுத்தவும் இப்படிக்கமாக (கூ) புடம் புடத்திற்கு ஒருவரட்டி அதிகப்படுத்தி வரவும் கெந்தியும் புதிதாய் கவசித்துவரவும் முடிவில் முன் மாதிரியாக கெந்தி கவசத்து (எ) சீலைமண்செய்து பூமியின்மீது (ய) வரட்டியில் புடம் எடுத்து சகலமாயயிற்கும் சிதளம் காய்ச்சனி முதலியவைகளுக்கு தேன் நெய்ரசத்திலிறக்கி கொடுக்கவும் பிறத பாகப்படித்தி செய்து அநுபவித்து வரும்போது இக்கட்டின் பெருமையை நன்றாக அறியக்கூடும் ஏட்டுக்காய் கதிக்காருமெமைப்பித்து இருப்பவர்களுக்கு எல்லோ அறியக்கூடுமானது.

## நேத்திமெழுகு.

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தி ப. (க) இதை புது பாண்டத்திலிட்டு கொட்டைமுந்திய முந்திரிப்பழ ரசம் ப (யஉ) விட்டு கொதிப்பித்து நீரைவடித்து மறுபடியும் மேல்படி பழரசம் ப. (யஉ) இட்டு கொதிப்பித்து வடித்து விட்டு இவ்விதம் மூன்றுதரம்செய்து நாலாவது மேல்படிநீரை ரசம்விட்டு கண்டெரித்து மெழுகுபதத்தில் யாவும் கான்டி எடுத்து பத்திரப்படுத்தி நாலடி ஆவின்பாலில் இரண்டு குன்றியிடைசேர்த்து காலை மாலையாக கால்மண்டலம் கொள்ளவும் சரப்பம் பதார்த்தம் நீக்கி அதிகாரம் சேர்க்காமல் இச்சை நெய் பால் இவைகள் புசிக்கவும் சகலமேகங்களும் நீங்கி தேகம் வச்சிரகாயமாகும்.

## சாகலேகியம்.

சுத்தித்த ரசம் ப. (ய) பழரசம் கரும்புரசம் அப்புகோவை ரசம் கையாந்தகரைரசம் அம்மைரசம் இவைகளில் ஒவ்வொரு நாள் ஊறி புரைத்தி சூரணம்செய்து சாதிக்கா கல்லார் வகை ப. (க) சுக்கு மிளகு நாட்டுக்ம்பால் ப. (உ) வெள்ளைசர்க்கரை ப. (ஙு) இட்டு பாகுசெய்து சூரணத்தை கொட்டி மோரி நெய் ப. (ய) தேன் ப. (ய) விட்டு கிண்டி பதமாயிறக்கி புன்னைக்காயளவாக மண்டலங்கொள்ள சகல பித்தரோகம் நீங்கி பித்தத்தால் வெளுத்த ரோமமும் கறுத்துதேக ஆரோக்கியத்தை யுண்டாக்கும்.

ஸ்ரீ போகம் கிரு என்னெண்ணை நீங்கி பதார்த்தங்களும் நீக்கவும்.

## கிலேசிக்கத்தக்க ரோகிகளுக்கு.

ஆவின்வெண்ணை ப (ச) ல் சித்திரமூலம் வேர்பட்டை அரைத்தது ப. (க) கூட்டி காய்ச்சி நெய்வடித்து இதில் காலை பலம் தேய்த்து ஸ்நானம் செய்துவரவும்.

## லவணபிவாக எருப்பு பற்பம்.

இந்துப்பு அஞ்சனக்கல் வெடியுப்பு கறியுப்பு வளையலுப்பு லாகூர் வெள்ளையுப்பு வகை ப. (க) வெண்காரம் ப. (உ) இவைகளை ஒருசாக நருக்கி கிள்ளுகுப்பியிலிட்டு வெள்ளெருக்கம்பால் விதக்கவிட்டு ஓடுமூடி (ய). சீலைசெய்து அரைமிச புடமிட்டு எடுத்து தாளி ப. (உ) கூட்டி கல்கோவை என்னும்சவுரியிலே ரசத்தாலரைத்து ஓட்டில்வைத்து (அ)



வரட்டியில் புடம் இவ்விதம் புடம் (எ) புடம் ஒன்றிற்கு ... வரட்டி அதிகப்படுத்தி வரவும் பிறகு ஆடுதின்னாபாளை ரசத்தில் புடம் (கூ) பப்புளி பாலில் புடம் (உ) இதை பத்திரப்படுத்தி குன்மம் பரிமந்தம் வயறுநோய் குதகவாயு நீர்கோவை சதையடைப்பு இவைகளுக்குத்தக்க அனுபானங்களிலிட புத்திமான்களாகிய பண்டிதர்கள் இவ்வளம் பலவித பிணிக்கும் உபயோகப்படுத்துவார்கள்.

## யோகிகளுக்கு.

பஞ்சகற்ப ஸ்நானம் பசும்பாலில் நெல்லி பருப்பு (கய) மிளகு (கவ) கடுக்காதோல்சதை (க) வேப்பின்வித்து (ஐக) கஸ்தூரிமஞ்சள் (உ) இவைகள் விராகனிடைகள் இவைகளை முன் பாலில் குழம்பாக அரைத்து சற்று கொதிப்பித்து சிரசிற்கும் தேகத்திற்கும் தேய்த்து குளித்து வரவும்.

## தைலம்.

வெருகி வேம்பு சமூலம் தலைச்சுருளிவேர் குறிஞ்சியிட்டான் வேர் சமனிடையாக குடிநீரிட்டு ஆந்தி சந்தி தக்கபடி உட்கொள்ள வாதவெளி வராதிருக்குமென்று முன்னோர்கள் நூல்கூறும்.

## சூரணம்.

குப்பமேனி சிறுசெருப்படை கரிசாலை சமன் சூரணம் இதற்கு நாலுக்கொன்று கற்கண்டு கூட்டி தேன்நெய்யில் வெருகடி மண்டலம்கொள்ள புத்திமந்த மதிமயக்கம் பித்தரோகங்க ளெரிச்சல் கிரகட்டு மலபந்தம் பித்தவெறி மூர்ச்சை தீர்ந்து மனமுண்டு வாக்குண்டாய் சுயம்படலாகும்.

## சிறுகுகள் சுத்திவிவரம்.

இரும்பு பொடியை ஒருநாள் எலுமிச்சம்பழ ரசத்தில் ஊறச்செய்தெடுத்து மறுநாள் என்னெண்ணையில் ஊறி அயசட்டியிலிட்டு வறுத்து காடியில் கழுவி வேலம்பட்டை கியாழத்தில் கொதிப்பித்து காடியில் கழுவி எடுக்கவும்.

காந்தம் பழரசத்திலும் காடியிலும் மோரிலும் கொதிப்பித்து காணிரசத்தில் (எ) தரம் காச்சியெடுக்க.

அயதொட்டி ஆவின்பாலில் (சா) ஜாமம் நெய் தேன் இவைகளில் (அ) நாள் ஊறி எடுக்கவும்.

நிமிளையிலும் வாழைகட்டை அடிசலத்தில் கொதிப்பித்து எடுக்கவும்.

பொன்மிமிளை (கூ) நாள் காடியில்ஊற கிருஷ்ண அப ரேக்கு ஒருபடி துலை (கூ) படி கோமியத்தில் வேகவைத்து எடுத்து உணர்த்தி நெல்லுசேர்த்து சீலிகட்டி காடியில் பிதய்த்து இறக்கும் தெருநெவ் நீக்கியுணர்த்தி கொள்ளவும்.

பால்துத்தம் சீலிகட்டி சிறுவர் அமுரியில் (எ) நாள் ஊறி ஆவின்நீரில் (உ) சாமம் ஊறியெடுக்கவும்.

குகம் அருகக்ன்பாலில் ஒருநாள் ஊறி செங்கத்தாள் ஓட்டை சர்க்கரை இறாவளி லரைத்து எடுக்கவும்.

இருவங்கம் நாகம் இலுப்பையெண்ணெயி லாகிலும் தேங்காயெண்ணெயிலாகிலும் சாத்துவா நாலி (எ) தரம் உருக்கி சாய்க்க மோர்காடி கோமியம் பழசாரம் அருக்கன்பாலிவைகளிலும் சாய்த்து எடுக்கலாம்.

கருவங்கம் வெள்ளாட்டுநீரில் பிரண்டைவேரரைத்து போட்டு நல்லெண்ணை விட்டு உருக்கி (ய) தரம் சாய்க்க.

நாகம் ஆட்டுநெய்விட்டு உருக்கி அமுரி பழரசம் கூட்டி சாரம் கல்சுண்ணாம்பிட்டு கலக்கி இதில் (ய) தரம் சாய்க்கவும்.

லிங்கம் தேன் முலைப்பாலில்ஊறி மறுநாள் பழரசம் மேனிரசம் முலைப்பாலும் கலந்து ஒரு ஜாமம் சுருக்கிடவும்.

வீரம் இளநீரில் களஞ்சிகர்பூரமிட்டு கலக்கி அதில் டோலாந்திரம் நீரில்படாமல்கட்டி எரித்து எடுக்கவும்.

இரசகர்ப்பூரம் வெற்றிலை மிளகு மொழுக்கில் சீலிக்கட்டி (கூ) நாள் எரித்து எடுக்கவும்.

வெள்ளைகெவுரி மிளகு பிழாழம் வெள்ளாவி ஆவின் பால் சுண்ணநீர் சாணிப்பால் இதுகளிலொன்றில் டோலாந்திரம் எரிக்க கெவுரியை பன்றிபாலில் சீலிகட்டி அவித்து எடுக்கவும்.

மனோசிலை காடியில் சீலிகட்டி எரிக்கவும் ஆட்டுமூத்திரத்தில் டோலாந்திரம் எரித்து எடுக்கவும்.

தாளகம் அமுரிநாழி கல்சுண்ணம் மேனிரசம் பழரசம் கலந்து இதில் சீலிகட்டி எரிக்க.

கோமியம் காடி கனைறும்பிநீர் ஆவின்பால் அரசன் பட்டை பிழாழத்திலும் டோலாந்திரம் கட்டி எரிக்க.

அமலகெந்தகம் நெய்விட்டு உருக்கி பசும்பாலில் (ய) தரம் சாய்த்து எடுக்கவும்.



இரும்புக் கரண்டியில் முத்தெண்ணெய்விட்டு உருக்கி பசும்பாலில் (ய) தரம் சாய்க்கவும்.

பவழபுத்து ஆவின்மோரில் சீலிகட்டி விட்டு (சா) நாழி யெரித்து எடுக்கவும்.

சிலாசத்து பழரசத்தில் கொதிப்பித்து எருக்கன்பாலில் (கூ) நாழிஊறி கழுவியெடுக்க அல்லது அலரிபூரசத்தில் ஊறியும் ஆவின்பாலில் டோலாந்திரமும் எரித்து எடுக்கவும்.

கல்லுார் கழுதைமூத்திரத்தில் (கூ) நாழி ஊறி கழுவியெடுத்துக்கொள்ளவும்.

கெருடபச்சை பயறுபோல்செய்துசீலிகட்டி குமரிசாற்றில் கூய நாழி எரித்தெடுக்கவும்.

சிலம் ஆவின்பாலில் ஊறியெடுக்கவும்

பொரிகாரம் எருமைசாணத்தில் சீலிகட்டிவைத்து எடுத்துக்கழுவ அல்லது கிழங்கீரில் (கூ) நாள் ஊறியெடுக்க.

குக்கில் எருமைமோரில் ஊறியெடுக்க சீலிகட்டி சிரட்டை தேவாரம் பேயுடலையியாழத்தில் டோலாந்திரம்கட்டி எரிக்க.

முடிதாரா பன்னிரண்டு படி நாலில் சீலிகட்டி எரிக்க.

மிருதார்சிங்கி வெள்ளாட்டுநீரில் கொதிப்பித்து எடுக்கவும்.

தொட்டி (சா)ம் முலைப்பால் வெள்ளாட்டுப்பாலிலும் தனித்தனி (ய) நாழி ஊறி யெடுக்கவும்.

தொட்டிபாஷாணம் அண்டுபோகசெய்து சீலிகட்டி நெல்லிலவித்து எடுக்கவும்.

மடல் துத்தம் வெண்ணெய் தயிர் குமரிசாற்றில் ஊறி கழுவி யெடுக்கவும்.

பச்சைநாபி ஆவின் நீரிலெரித்துக்கழுவி உணர்த்தவும்.

சகஸ்திரபேதி நாரத்தங்கா ரசத்தில் ஊறவைத்து எடுக்கவும்.

அஞ்சனக்கல் புளியாரைரசத்தில் ஊறி யெடுக்கவும்.

கல்மதம் அமுரியில் கழுவியெடுக்கவும்.

நாபி பருத்திஇலைரசத்தில் ஊறி முத்திலைக்குள்வைத்து கட்டி சும்பியில்வைத்து பிழத்தில் பிழாழத்தில் டோலாந்திரம்

எரித்து எருக்கன்பாலில் சத்தூறி கோமியத்தில் கழுவி எடுக்க.

கோர்வாளம் எருமைசாணத்தில் காடிவிட்டு இதில்கொதிப்பித்து நஞ்சுநீக்கி காடிமோர் பழரசம் கலந்து இதில் கொதிப்பித்து எடுக்கவும்.

செங்கொட்டை உதகத்திலூறி மறுநாள் மூக்கைவெட்டி நீக்கவும்.

சிவதை ஆவின்பாலில் அவித்தெடுத்து உணர்த்தியெடுக்கவும்.

அமுக்குரா ஆவின்பாலில்சுத்தி.

மூலிகை இனங்களின் வித்துவேரு இலைகள் யாவும் ஆவின்பாலில் டோலாந்திரம் எரிக்க.

சூதபாஷாணமும் ஏகசுத்தி மேனிரசம் தக்காளிரசம் சுரமஞ்சள்ரசம். பழரசம் அமுரி காடி சமனாகக்கலந்து இதில் உப்புசுண்ணம் வெடியுப்பு சாரம் சீனம் வகை ப. (௧) கள் செய்து கலந்து சரக்குகளை சீலையில்கட்டி மண்டலம் இட்டு எடுத்து உணர்த்திக்கொள்ள சிகசுத்தியாகும்.

சுத்தி விபரம்.

வெள்ளைகாக்கணவேர் பசுப்பாலில்சுத்தி திப்பிலி பழரசம் அல்லது சிறுநீரில் பாவனைசெய்யவும்.

சுக்கு மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசி உணர்த்தவும் மிளகு புளித்தமோரில் (௩) நாள் ஊறி உட்டில்வறுக்கவும்.

ஓமம் சுண்ணாம்பு தெளிவில் சாமம்ஊறவைக்கவும் இருசேரம் (௭) சாமம் உணர்த்தி வறுக்கவும்.

வசம்புதன்னை ஒருசாமம் சலத்தில் ஊறி பழரசத்தில் ௪ சாமம்ஊறி எடுக்கவும்.

எட்டிகொட்டை நெல்லிலவித்து கொடிவேலிரசத்தில் (௧) சாமம்ஊறி தேத்தாங்கொட்டை ரசத்தில் வெதித்து எடுக்கவும்

பெருங்காயம் தாமரையிலை ரசத்தில்பாவனம் செய்யவும்

கொம்பரக்கு நல்லசலத்திலிட்டு (௩) தபாளித்து எடுக்கவும்.

மாசிக்காய் பசுநெய்யில்வறுத்து வெடித்தபிறகு எடுக்கவும்

சகலவித எண்ணைகளும் நல்லசலத்திலிட்டு (௪) நாழி கொன்று எடுக்கவும்.



வெண்காரம் பொரித்துக்கொள்ள காடியிலாவது பழரசத்திலாவது அரைத்து எடுக்க.

மனோசிலை கார்த்தம்பழத்தில புடம் அல்லது இஞ்சி அகத்திப் ரசத்திலாகிலும் கரிசாலை ரசத்திலாகிலுமரைத்து எடுக்கவும்.

இந்துப்பு காடியிலாகிலும் ஆட்டுநீரிலாகிலும் மத்திக்க.

நாபி தயிரிலூறவைத்து அடைகட்டி ஒருகாலம் வைத்து அதில்பிரட்ட அல்லது தயிரில் ஒருசாமம்ஊறவும்

தாளகத்தை சிறுதுண்டுகளாகச்செய்து பின்னொரு [illegible] யிலிட்டு மூடி மண்ணடியில் (௩) துவாரமிட்டு கரிநெருப்பில் வைத்து [illegible] கறுப்பு புகைவந்து செகப்புப்புகை வரும்காலம் எடுத்துக்கொள்ள.

தாளகசுத்தி சுண்ணாம்புக்குள் வைத்து சமுத்திராப்பிலிட்டு (௭) தரம்தாளித்து எடுத்து சுக்கன்கீர் கொள்ளுமூன்று தயிர் சூழ்ப்பாண்டசீர் காடி அகத்தியிலை பயிலம் இவைகளைகட்டி (௨) சாமம் சுருக்கு கறந்தைசாற்றில் (௨) சாமம் சுருக்கு [illegible] க்கு எடுத்து சுத்தி சாட்டகளை [illegible] குழியில் இதை முருங்கிலைரசத்தாலரைத்து கவசம்செய்து [illegible] சுத்தியாம்.

சவ பாஷாணங்கள் சுத்தி மேனிரசம், கற்றாழைப்பால் அமுரி, பழரசம், செம்முருக்கி வெள்ளிலைரசம் வகை படி ௧. முலைப்பால் படி [illegible] இவைகளை பாண்டத்திலிட்டு அதில் பாறையுப்பு, வெடி, காரம், சீனம், சாரம்வகை ப. [illegible] கள்செய்து கலந்து இனங்களை சீலைகட்டியிட்டு [illegible] காற்றில்லாமல் [illegible] த்தில் [illegible]

ஆங்கிலேயர் பலவிதநூல்களால் [illegible]

[illegible] சிவிசயம் [illegible]

யம் இந்நூலால்நேரும் இவியையான கொடிய நோய்கள் ஆண்டவராது ஆக்கினையால் நேருவதால் அதற்கு முன்னோர்களால் கன்மகாண்டத்தில் சொல்லியபடி கன்மவிவாரணங்களின் ஒழுங்கின்படி கரும நிவாரணஞ்செய்து ஞானதைப்பிரயோகஞ்செய்யில் குழந்தையழ தாய்மனமிரங்கி ஆதரிப்பதுபோல ஸ்தூல சூக்ஷமத்தின் தேகமாகிய தாய்க்குகருணைவந்து அதில் சேர்ந்த கொடிய உபாதைகள் கரும நோய்களும் பாநுவைக்கண்ட பனிபோல் நீங்கி மதியை கண்ட மலர்போல் தேகஞ்செழித்து பிரகாசிக்கும்.

கன்மமென்ன தன்மமென்ன வென்றுயாருங்
காயத்தில் நோயிருந்து சன்னமுஞ் சன்னமும்
வன்மமென்ன வையகத்து கன்மந்தீர்த்து
வகையுடனே மருந்துசெய்யில் வயித்தியனுகு
நின்றிடனுறுக்கால் கன்மந்திக்கான்
நிலைவுகெட்டு மருந்துசெய்யிற் பிணிதீராது
கன்மமதை நிவர்த்திசெய்து மருந்துசெய்யிற்
கருத்துள்ளவயித்தியனுங் கருதிப்பாரே.

## முறிவு திரவியங்கள் விவரம்.

சேதுவைக்கு-வெந்தகரி-சலம்.
நெய்க்கு-புளித்தமோர்.
தேங்காய்க்கு-புழுங்கலரிசி.
சாதத்திற்கு-காந்தலை.
நெல்வேர்-சர்க்கரைக்கு-விலாமிச்ச
நாபிக்கு-சிறுகீரை-வெள்ளாட்டுநீர்-பசுநெய்.
வெண்காரம்-மிளகு-சுக்கு-பச்சைப்பயறு-சலம்-சுடுக்காய்-கியாழம்-சோகிவிளாயும்-நெய்யும்.
செங்கொட்டைக்கு-வெறிதிராவகம்.
காட்டுமுருங்கைக்கு-எள்ளெண்ணை-வாளத்திற்கு-வசம்புளி-சாணியால்.
பழுகத்துக்கு-மிளகு-சுக்கு-கியாழம்.
மாங்காய்க்கு-புழுங்கலுழுந்து.
மாமிசம்-நெய்-கத்திரியாழம்-புளிசலம்.
மிளகு-பசுநெய்-தேங்காய்.
வாழைப்பழம்-மிளகு-கற்பூரம்.
வெல்லத்துக்கு-எருமைமோர்.
எள்ளெண்ணைக்கு-தேங்காய்.
அலரிக்கு-கடுக்கா-கியாழம்.



பல்லி-எச்சத்துக்கு-மாம்பட்டை.
கஞ்சாவிற்கு - சுக்கு-கியாழம் - பழரசம். }
கதலிப்பட்டைரசம்-இருள்ளிரசம். }
எருக்கம்பாலிற்கு - ஆவின்மோர்-நெய்-கருவேல் கியாழம்-அவுரி-காடி - எள்ளு-சக்கரை - முருங்கைவேர் - மஞ்சள்.
கள்ளிக்கு-வாழைப்பட்டைரசம்-ஆவாரை.
அபினிகஞ்சாவிற்கு-நெய்-வெந்நீரில்-கொடுக்க.
அபினிக்கு-நெய்-வெங்காயம்-பழரசம்-சுக்கு மாங்காய் உப்பு இதனிலனைத்து குடிக்க.
எள்ளுக்கு - சர்க்கரை.
கருணைக்கு - வெற்றிலை.
தென்னைக்கு-ஆவாரைச்சாறு.
குன்றிக்கு - வெண்காரம்-வெடிக்காரம் வேரும்-வெந்நீரில் குடிக்க.
நாரகன்னிக்கு - கடுக்காய் - ஆவாரை.
சிவனைக்கு - வெள்வேப்பட்டை.
மருதோன்றிக்கு - தாளிசகியாழம்.
எருக்கிலைக்கு - சங்கம்பழம்-எள்ளு-சர்க்கரை.
எட்டிக்கு - தாழம்பூலிரசம்-நாவல்கொழுந்து.
கன்றாம்பிற்கு-எள்ளெண்ணை-எருமைதயிர்-பிஞ்சிற்கொடி-மஞ்சள்.
புளிக்கு - உப்பு.
உள்ளிமஞ்சளுக்கு - சீரகம்.
உப்புக்கு-வெங்காயம்.
இறைச்சிக்கு-இஞ்சி.
அரிந்திக்கு - புளி-எல்லெண்ணைக்கும்-கடுக்காய்கியாழம் பாசி - வெண்கரு.
கீற்றுமங்களுக்கு - கரிமஞ்சள்.
ஏலிபாஷாணத்திற்கு - பாகல்இலை.
கெந்திக்கு-பசுநெய்.
தாம்பரத்திற்கு - பழரசம்-புளித்தமோர்
அபினிக்கு-பழரசம்-இஞ்சி-தேன்-சர்க்கரை.
சாராயத்திற்கு - முள்ளங்கிரசத்தில் - பாடக்காயிட்டுக் கொடுக்க-கிரகம்-தவிர-வாழைப்பட்டை-ரசம்குடிக்க.
முயல்புட்டை - சாம்பலைக்கொடுக்க.
ஐயநாடிபடபடத்து நடக்கில் மறுநாள் பித்தம்சிதறி போடில் (ங) நாள் வாதம்சிதறி நடக்கில் நாள் (அ) வாத பித்தமிரண்டும்கூடி நிலைதப்பி சிதறில்நாள் (ரு) மூன்றுநாடியும் நிலைதப்பிநடக்கில் (சய) நாள் மூன்றுநாடியும் அரணை வால்போல் துடிக்கில் நாள் (க) காலைஐய்யம் உச்சியில் பித்தம் மாலைவாதமாக நிலைதப்பிநடந்தால் நாள் (ரு) பித்தசிலேதமும்கூடி வோடம்போல் நடந்தால் க, மாதம் ஐய்யம் குதிரைபோல் நிமிர்ந்து காணில் க, மாதம் சரீரம்குளிர்ந்தும் ரப்பையிலுதிரமில்லாமையாயினும் வியர்வையில்லாமை உலராதவியர்வை நேத்திரதேகம் நீங்கில் கால் வுள்ளங்கையிலுதிரமில்லாமை காதிர் சமுத்திர யிரச்சலாகவும் முககாந்தியில்லாமை மூக்கு தொப்புள் மார்பு கால்கைகுளிர்ந்தும் விக்கல் நடுக்கல் கண்டத்தில் கபம்கட்டுகல் பரிமளம் தெரியாமைதுருவன் சாயாதெரிசனம் தெரியாமல் போனாலும் சமீபகாலமரணமாம் - சரீரநிழலிலைந்து காட்டினும் உமிநீர் துப்பில் சமீபமாகவிழுந்தாலும் தண்டுவெதடு பல்லு நாக்கு கறுத்தாலும் நாள் கூ, குஷ்வுடம்பு நாலித்தாலும் ஸ்தூலவுடம்பு சிறுத்தாலும் க, மாதம் ரப்பையைமூடி நேத்திரத்தை அழுத்திபார்க்க மயிலிறகு கண்போல் தோன்றாதிருக்கினும் சூரியமண்டலம் தோன்றாமை கண்ணைமூடிபார்க்க கதிர்கள் தோன்றாதிருந்தாலும் உ, வருடம் உடல்சாயை தொண்டியாகவும் நிழல்பரப்பாகவும் கண்டால் கூ, மாதம் சலம்உமிழ்வதில் பஞ்சவர்ன்ன இந்திரதனசு தெரியாதிருந்தால் க, மாதம் காதைமூடிபார்க்க உள்நாதவொலி கேளாதிருந்தால் நாள் யரு, ஸ்நானம் செய்யும்போது வயிறுகால் கை நனையாதிருந்தால் கூ, மாதம் நடக்கும்போது அடிசுவடு சிதைந்து காணில் நாள் ரு, கண்ணாடியில் முகம்தெரியாதிருந்தாலும் இரவிஇரண்டாக தெரிந்தாலும் க, மாதம்.



## நோயாளரிக்கு.

இரவில் நக்ஷத்திரம் தெரியாமல் பகலில் தோன்றினும் பூரணசந்திரன் புகைபோல்மழுங்கி காணினும் ஆகாயநிறம் யானைகருப்பாகதோன்றினும் நெய், யெண்ணெ, பால், தண்ணீர்யிவைகளில் தன்முகம் தோன்றாவிடினும் நாள், யரு, இல்லையென்றுசொல்பவன் கொடாமல்நிறுத்தினும் கொடாதவன் கொடுக்கினும் சாதாரணமாய் நடப்பவன் குலிக்கி கெர்வமடைந்து மனிதரைமதியாமல் நடந்தாலும் கூ, மாதம் சட்கோசத்துவம் கூடியதேகத்தில் வாயுநாடிகள் அந்தகாரணம் பஞ்சேந்திரயங்களில் முடிவுபெறும் காலத்திற்கு முன்பாக தேகநிலமைக் குரியவஸ்துகளில் விசேடஅபேதம் எவையடைகின்றதோ அதர்க்குரிய குறிகளை சிலதை காட்டி முடிவில் வொன்றிலொன்று அயிக்கியமாய் தூலதேகத்திலிருந்த ஆதியாகவும் அனாதியாகவும் சுட்டுதர்ப்படித்தி காட்டயிடம்தாராதாக யிருந்த தெவையோ அவைநீங்கிவிடும்.

## பவளம்.

குழந்தைகளிடுப்பிற்கட்ட நித்திரையில் மருண்டழுவதைநீக்கும் சூரிசுக். சந்ஒருராசியிலிருக்கும்போது தங்கம் வெள்ளியில்மோதிரம் செய்திட யாவராலும் பூசிக்கப்படும்.

## கெம்பு புஷ்பராகம் நீலம் கோமேதகம்.

இவைகளை மேதிரம்தரிக்க நினைத்தகரும்முடியும் தானென்னும் வியாதியணுகாது வாயிலடக்க வாய்நாற்றம் தாகம் நீக்கும்.

வயிரதம் குளிசமாககட்ட அச்சம்விசனமவைகளைநீக்கி யிருதயத்தை பலப்படுத்தும் வெற்றியுண்டாகும் பிரச

வவேதனைநீங்கிவிரைவிர்பிரசவமாகும் ௬.கோணவயிரத்தை குளிசமாடிகட்ட காக்காய்வலி நீங்கும்.

எமனியெனு மிரத்தினம் குளிசமாககட்ட பகைவன் கோபமடங்கும் மோதிரமாய்த்தரிக்க பயித்தியம்தீரும் பகை வரையஞ்சசெய்யும் மந்திரங்கள் பிரார்த்தனைகள்பலிக்கும் கள்ளர்அஞ்சுவார்கள் வசிகரமாய் சகலஜெந்துகளும் நேசிக் கும்.

பைரோஜாவென்னுமிரத்தினம் மோதிரம்தரிக்க பகை வர்கள்போற்றுவார்கள் இடிவிலகிபோகும் விஷஜெந்துக ளோடிப்போகும் இதைபார்த்திருக்க நேத்திரவொளியிதி க ரிக்கும் பாக்கியமுண்டாகும்.

மரகதமென்னும்பச்சை யென்னேரமும் பார்த்துவர சாலேசரம்நீங்கும் சரீரமீதிருக்க காக்காய்வலிநீங்கும் மேக ரிணங்களும்வாராது.

கன்னியாராசியில் சூரியன் உச்சத்திலிருக்கும்போது தங்கம் ப. (வ) வெள்ளி ப. (வ) புருஷ்ரா ஜு, ப. நல்லபச் சையைவைத்து மோதிரம்மிட்டிருக்க சகலரும் அஞ்சுவார் கள் நாடியகருமமுமுடியும் செல்வமதிகரிக்கும் விஷங்கள்மு ரியும் கிரகதோஷங்களணுகாது தேகத்தில்தரித்திருக்க யீய்க் கள்மொய்க்காது.

ஜபர்ஜத்என்னும் இரத்தினம் சந்திரன் மீனாராசியிலி ருக்கும்போது இந்தகல்லை குதிரையினுருவம் செதுக்கிமோ திரத்திற்பதித்து இடதுகையின் அணிவிரலிற்றரிக்க சந்தோ ஷமுண்டாகும் காக்காய்வலிநீங்கும் பிரசவவேதனை நீங்கும் சந்திரன் கடகராசியி லிருக்கும்போது கல்லில் யச்சத்தி னுருவம் செதுக்கியித்தகட்டிர்க்குள்வைத்து வலையிர்க்கட்டி மீன்வலைவீச மச்சங்கள்யாவும் கிடைக்கும்.

அரிந்து மேன்மை மருதநில முதலைந்தினுள்ள குணகுண நோக்கினும்

செறிந்தவத்துலத் துற்ற பிணிதனை சிந்தித்தே மருந்தொப்ப க்கொடுப்பினும்

முரிந்து நோயறக் கொண்டிடும் பத்தியம் முன்னிசைத்த திசைந்தருந்தினும்

பிரிந்ததா லப்பருவமு மொத்திடிற் பேதியாதுறு மேன்மை யியம்புவாம்



வாயுவுபூமிக்கு மேல் (சமடு) மயில் வரையில் வசிக்கும் இதில் ஒருபங்கு பிராண வாய்வும்.௪.பங்குஉப்புவாய்வும்

அமில வாய்வும் விஷவாய்வும் உண்டாகும் சரீரத்தில் உள் புகுவது பிராண வாய்வு - வெளி விடுவது விஷவாய்வு

ஆதலால் தாம்வசிக்குமிடத்தில் நாற்றங்களில்லாமல் நன் மையான காற்று சஞ்சரிக்கும்படியான விடத்தில் வசிக்கவே ண்டும்

பூமியில் தண்ணீர் அனேக பேதங்களாக யிருப்பதால் தேகத் திர்க்கு பொருந்திய சலத்தை யுபயோகப்படுத்தி வருவதி லும் சலத்தில் தேயிலை தேற்றான் கொட்டை காசுகட்டிமாம் பருப்பு கொட்டைப்பாக்கு இவைகளிலொன்றை உரைத்து வைத்து தெளிவை யெடுப்பதாலும் இரண்டிபடி சலத் தில் ரு குன்றி படிகாரத்தையிட்டு மஉ, மணிசென்று உப யோகப் படுத்துவதாலும் குற்றமிராது.

சரீரத்தை அசைத்து சிரசைஆட்டி நடக்கையாலும் மல்லார்ந்து யிருகையை துடையுள்வைத்தும் பிரண்டுபிரண் டும் மார்மீதுகைவைத்து நித்திரைசெய்வதாலும் நெடுமூச் செறிந்து விடுவதாலும் மலசலமடக்கையாலும் வலிவுதிந்து செய்யாமல் அதிகமாக ஸ்ரீபோகம்செய்து விந்தைநாசப்படு த்துவதாலும் அகாலபோசனம் சதாவிசனம்யேக்கம் பொறு மை வஞ்சகம் சதாகோபசிந்தை இருக்குமாகில் அதிகசிக்கி ரத்தில் பிணிஅணுகும்.

சுழிமுனை அக்கினி வாயு வாதம் யிதர்க்கு ஸ்த்தானம் உந்தி யின்கீழ்

இடைகலை ஆதித்தன் நெருப்பு பித்தம் யிதர்க்கு ஸ்த்தானம் கண்டத்தின்கீழ்

பிங்கலை சந்திரன் சலம் அய்யம் இதர்க்கு ஸ்த்தானம் உச்சி யின்கீழ். மும்மண்டலமென்றும்பேர்.

சரீரத்தில்வாதபித்தஅய்யநீர்அதிகமும்குறைவுபடுகையா ல்அநேகவியாதிகள் உற்பவமாகின்றது. அஷ்ட்டவித பரிட் சையில் ஒன்றாகிய நாடியைபார்த்து வியாதியின்னவை தே கவுறுப்புக்குள் இன்னயிடத்தில் இவ்வாறாக பேதப்படுத்தி இருப்பதென்றும் இனியிந்நிலையை முடிக்குமென்றும்நிச்ச யிப்பது மகாஅருமை அவ்வகையறிபவர்கள் சதாஅந்தர

முகதிருஷ்ட்டியை நோக்குறும் மகான்களாகிய தபோநிபுணர்கள் சாக்கிரசொர்பன சுழுப்த்தியினிடம் அலைவுறும் சீவர்களறிவது மிகதுல்லபமாகும்.

வைத்தியர் ஆயுள்வேதியர் பிடகர் ஆமாத்தியர் மருத்துவர் ஆரியர் பண்டிதர் இவ்வகை நாமங்கொண்ட சிலர் சிவகாருண்ணியான இரக்கமுள்ள தன்னுயிர்போல் மன்னுயிரையும் பாவித்தல் துன்பத்தில்வசிக்கும் நோயாளருக்கு ஔஷதவுபகாரமளித்து இன்பவிருத்தியில் விடவும் அடியார்கள் வாஞ்சையையும் அண்டபிண்டசர அசரங்களனைத்திற்கும் ஆதிநாயகமாய் விளங்கும் கடவுளை அந்தரங்கமாய் சதாவாழ்த்த வல்லமையுடைய வைத்தியருக்கு கடவுள் கிருபைபெருகி சகலஉணர்வுமளித்து உலகின்கண் சகலசீவராலும் பெருமைகொண்டாட முடிவில் சீவன்முத்தர்களாய் விதேககைவல்லிய பாசுகத்திலடைவரென்று மேலோர் கூறியிருக்கின்றனர் அதற்கொருயாதொரு ஐயமுமில்லை.

அஸ்வனி தேவர் ஆயுள் வேதத்தில் கூறியசுருக்கம்.

ஆகாரம் தங்கும் இரைப்பையின் தொழிலால் மலம்நீங்கிபக்குவமடைந்த அன்னரசம் அன்னரசத்திலிருந்து பிரிந்த திருவுருபத்தையுடைய இரத்தம் பித்தம் சிலேத்மம் வண்டலெனும் வர்க்கமாம் இவையில் உதிரத்தை யீரலிழுத்து புழைநரம்புகளின் வழியாக உடலெங்குமேற்றி பரவச்செய்து சரீரத்தை போஷிக்கும் இருதயகமலம் துடிநரம்புவழியாக ஆன்மசத்தியை சரீரமெங்கும் பரவச்செய்து உயிர்ப்பிக்கும்.

தலைமூளை வெண்நரம்புகள் வழியாக உணர்வையுடலெங்கும் நிறைத்து இயக்கசெய்யும் குண்டிக்காய்கள் உதிரத்தோடுகலந்து யீரலில்நின்ற சிறுநீரை பிரிப்பதுமன்றி சுக்கிலநரம்புகள்வழியாக இரத்தத்தின் சத்துகளையிழுத்து விந்துவாக வெளுக்கச்செய்யும்.

உதிரத்தினின் றெழுகின்றஆவியே தேகசூடாயிருக்கிறதுஅவையே ஆன்மாவென்றுசொல்லப்படும்உதிரத்திற்கும் தேகத்திற்கும் சம்பந்தத்தை யுண்டாக்குவது சிலேத்மநீராம் இந்தசிலேத்ம நீரதிகப்பட்டு உதிரத்தின் கொழுமை குறைந்து ஆன்மசத்தியை குறைத்து சீவர்களை நசிப்பிக்கும்.

பண்டிதர்கள் சரீரலக்ஷணம் இருதயத்தின்றன்மையைநாடியாலும் யீரலின்றன்மையைகாட்டும் மூத்திரத்தாலும் இரைப்பையின்தன்மையைகாட்டும் மலத்தினாலும் தலைமூளையின் தன்மையையறிவிக்கும் இயக்கத்தாலும்



அறிவதுடன் ரோகநிதானம் சிகிச்சாகிரமம் அவிழ்தபாகமும் அவ்சியமறிபவர் பண்டிதராம்.

சூட்டின் விகற்பமேவரட்சி குளிர்ச்சியின் விகற்பமே கொழுமை தேயுசூட்டுடன் வரட்சியையும் வாயுசூட்டுடன் கொழுமையும் அப்புகுளிர்ச்சியுடன் ஈரத்தையும் பிரிதிவ்குளிர்ச்சியுடன் வரட்சியுமாகும்.

இரத்தம் சூட்டுடன் கொழுமையும் பித்தம் சூட்டுடன் வரட்சியும் இரசம் குளிர்ச்சியுடன் இரத்தத்தையும் வண்டல் குளிர்ச்சியுடன் வரட்ச்சியுமாக சுபாவகுணத்தை பெற்றிருக்தாலும் இரத்தம் பித்தம் இரசம் வண்டல் இந்நான்கு சத்துகளிலெழுகின்றதில் விசேடமாய் வண்டல் இரசத்தில் நின்றுமே யெழுகின்றவாயு காற்றும் ஆவியாக விருக்கிறது இச்சத்துகள் உயர்வுகுறைவினால் ரோகங்கள் உற்பத்தியாம்.

## சரீரத்தில் அஷ்ட்டவித பரிட்சையில்

### நாடி முகம் பல் நா சரீரம் சலம்வாய் மலமிவைகளில் மலக்குறி விபரம்.

மலம்மிறங்குவது அரைத்த சாதம்போல் விழில்திங்கள் ௪, கூழ்போல் விழுந்துகணங்கி பொருமினால் திங்கள் ௩, வெள்ளையாக விழுந்து விலாவுள்ளே சொருகினால் திங்கள் ௨, கம்பின்கஞ்சிபோல் கழிந்தால் திங்கள் ௧, நினைக்கு முன்கழிந்து நீர்கறுப்பாக யிறங்கினால் நாள் ௨௰, பன்றிநெய்போலும் பனிசலம்போலும் படர்ந்தால் நாள் ௰௩, கோழிமலம்போல் பலவர்ணமாகவும் தினையரிசிபோலும் உதிரம்சீழ்போலுமிறங்கில் நாள் ௰, மலமிரங்கும்போது தொப்புளுள்சொருகி மயக்கங்காணில் நாள் ௭, கழிச்சலாகயிருந்துதடைபட்டு மயக்கங்காணில் நாள் ௫, சரீரம்நாற்றமாய் மலம் முட்டைகருபோலும் கூழ்போலும் அடிக்கடியிரங்கில்நாள் ௩, பச்சிலைஅரைத்த வர்ணமாகவும் பால்நிரமாக கழியில் நாள் ௨, தேன்போலும் மண்டைசலம்போலும் நாற்றமடிக்கில் மாதம் ௨, இவ்வகையாக மரணமாகும் வாததேகிகளுக்கு மலம்இறுகிசெம்மைநிறமாயும் பித்ததேகிக்கு ஆவியோடு மஞ்சள்நிறமாயும் ஐயதேகிக்கு திரளாய் வெளுத்திரங்கும் வொன்றோடொன்று மிசரப்படில் மலம் மூவிதமும் கலந்திரங்கும்.

உடற்குறி சரீரவண்ணக்குறி கண்டத்தொனிக்குறிகண்களின்குறி நாவின்குறி மலக்குறி நீர்க்குறி நாடிக்குறிஆகஎண்வித பரிக்ஷையில் நீர்க்குறியை விபரிப்போம்.

இரத்தக்குறி சிமைஅத்திபழநிறம்இரத்தகொதிப்பின்குறிசிவந்தநிறம்

பித்தகுறி கொடிமாதளம்பழம்மாதுளம்பழம் பித்தம்திகரித்த குறி மஞ்சள்நிறம்

இரசக்குறி குங்குமபூவைபோல்வெளுத்தசிவப்பு இரசமதிகரித்தகுறி வெளுப்புநிறம்

வண்டல்குறி கருத்தஆகாயநிறம் வண்டலதிகரித்தகுறி கறுப்புநிறமாகும்

மேகத்தால் ௪,ம் பித்தத்தால் ௬,ம் ஐய்யத்தால் ௰,ம் ஆகநீர் வியாதி௨௰. இவைகளிலனேகவியாதிகள்உற்பவமாகும்அவ் நீர்களின் பேதங்களை பஞ்சலக்ஷணமும்காட்டிய நீர்க்குறிசாத்திரத்தை பார்க்க விபரமாகவிளங்கும்.

## ரோகங்கள் அணுகும் விபரம்.

உதிரரோகம் பலவழியாய் நரம்புகளிலிருந்து வற்னம் கெட்டு கரடுகட்டி மோதுகளில்தங்கி பலவாறுன ரோகங்களை விளைவிக்கும்.

மகோதரம் - அக்கினியதிகரித்து நீருண்டாகி தேகம் கனத்து வயிற்றில் வாய்வும்சலமும் கோர்த்து பெருக்கும் இராக்காலத்தில் நெஞ்சுவரண்டு தாகிக்கும்.

நீராம்பல் - தேகம்வெளுத்துவற்றி மார்பின்கீழ்வயிறும் காலும்வீங்கி தாகித்து புளிப்பு மீதிச்சையாகும்

பிறநீர்க்கோவை - தேகத்தில் அக்கினி அதிசப்பட்டு நீர்கோர்த்து கண்டவர்பயப்பட வீக்கமாகும்.

வெப்புபாவை - வயிற்றில்கட்டியுண்டாய் இடபுறத்தில்புறண்டு யீரலைமுட்டி உதிரம்பொருமும் அன்னதுவேஷமாகும்.

கௌசி - நடுவயத்திலாவது வலதுபக்கத்திலாவது கட்டிபோற்றிரண்டு வலிந்துவயிறு ஊதிவலிக்கும்

நிராமை - ஆமைபோல் வயற்றில்கட்டி யுண்டாய் உடல்முரிக்கி அக்கினிசுவாலையாய் அன்னதுவேஷமாகும்

பீலிகை - வயிற்றில் யீரலைபற்றி குழவிபோல் திரண்டு குருக்கேயிருந்து பிரளும் மேலேறும் வுடல்வற்றும்

பெருவயிறு - தேகம்வெளுத்து வற்றி கருவிகள் மந்தித்துவயறுபெருக்கும் மலந்தீயும் அன்னஞ்செல்லாது.



பெரியோரை பழித்தல் சீவசெந்தை வதைத்தல் இலைபூகாயுள்ள மரங்களை வெட்டியதாலும் வரும்.

பீனிசவகை ௮,ம் மூலத்தில் கனலதிகப்பட்டு சிரசில்நீர்தங்கி நாசிவழியாகவருவன.

வாதபீனிசம் - நாசிவரளும் நீர்வடிந்து சளிநாற்றமில்லாமல்வரும்

பித்தபீனிசம் - நாசிவழியாக மஞ்சள்நிறமாய் சளிவடியும் புலால்நாற்றமாகும்

சிலேத்மபீனிசம் - நாசியை மாறிமாறியடைத்து முத்துபோல் நீர்வடிந்து நாறும் துணுக்காகசளிவிழும் நாசியில்ஊசியில் ஊசிபோல்குத்தும் கண்ணில் பீளைசாரும்.

நீர் பீனீசம் நாசியில் நீர்வடியும் மழைகாலத்தில் பிடரியும் முகமும் ஊரலாகும் அடிக்கடி தும்பல் தலைகனத்து வலிக்கும்.

சீழ் பீனிசம் கபாலத்தில் அதிகவெப்பம் கொண்டு கபாலமுதல் நாசிவரையில் புண்ணாய் சீழ்வடியும் தலைவலிக்கும்.

உதிர பீனிசம் கபாலத்தில் வட்ட வட்டமாய் புண்ணாய் நாசிவழி உதிரம்வரும் தலைவலிக்கும்.

சிராய் பீனிசம் நாசியில் யிருள்ளிகூடுபோல் சீழ்திரண்டுவரும் மணம்தெரியாது விடாமல் தலைவலிக்கும்.

நேத்திரவியாதிகள்வாதகோபத்தால் கருவிழியில் ௪௰௨ பித்தகோபத்தால் இமையோரத்தில் ௰௯ கடைக்கண்ணில் ௰௫ அக்கோபத்தால் வெள்ளைவிழியில் ௨௰ ஆகவருபவை ௯௰௬.

நவமூலவிபரம் உள்மூலம் அபானத்தில் சதைவளர்ந்திருக்கும் பிரமூலம் பவுத்வாயில் கத்திபோலிருக்கும்.

இரத்தமூலம் முளைவெளிவந்து உதிரம்வடியும் சீழ்மூலம் அடிவயறு நோந்து மலத்துடன் சீழிரங்கும்.

மூலபாண்டு சரீரம் ஊதி வயிற்றில் மலம்கட்டும் முளைமூலம் வெளிதள்ளி மலமிரங்கும்.

வாதபித்த சிலேத்மத்தால் மூலமானது மேற்கண்டவைகள் மிசரமாகவிருக்கும்,

## அதிசார விபாம்.

வாத அதிசாரம் வயிறுபொருமி சரீரம் வாடும் மலம்கருமையோடு நுரையாககாணும்.

பித்த அதிசாரம் மலம் பசுமையோடு சிதம் ரத்தம் விழும் அபானம் கடுக்கும்.

சிலேத்ம அதிசாரம் மலம் வெண்மை சீதம் நுரையாக காணும்.

சுர அதிசாரம் சுரம்காயும் வயிறுகழியும் சிதரத்தம் விழும்.

அசாத்திய அதிசாரம் மலம்வுன்போலும் தேன்போலும் கரிபோலுமிரங்கும்.

கிராணி (சா) க்கு விபாம் மூலகிராணி சிழ்கிரணி நீர்கிரணி வாயுக்கிராணி சூசிகாகிருணி அசீரண கிராணியாம் மாமிஷம்தின்னல் கற்பழித்தல் புண்ணியமழித்தல் நீரில் மலம்விடல் பூமரமழித்தலால் வரும்.

காமாலை வருமாறு உதிரங்கெட்டு தன்சவெளுத்து யீரல்கருகி தசைகளில் கிருமிகளாய் மாமிஷத்தை தின்று மஞ்சள் நீர் கொள்வதன்றி பலவித வியாதிகளை யுற்பவஞ் செய்யும்.

சோகையானது பாண்டுரோகத்திலிருந்து நீர் கெட்டு சோகையாகும்.

## கண்டமாலை.

மேகநீரால் நரம்புவழியாய் உதிரம்கெட்டு கட்டிபோல்திரண்டு ரிணமாகி கண்டத்தைசுற்றி யரித்து கடித்து வெடித்து புரையோடும்.

சுரம் நீரிலுள்ள செந்துவை ரவியில்போடல் சுடல் சதையருத்தல் பசிக்கி தாகம் அன்னம்கொடாமை சூரிய நமஸ்காரமில்லாமை.

சுரம் மூன்றுக்கு விபரம் யிதில் அஸ்தியைபற்றிய சுரமானது தாகமிகுந்து தேகம் வெளுக்கும் குளிர்ச்சியாய் ஒவ்வொரு நேரம் சுரம் மிகுதியாய் காணும்,

உதிரத்தைப்பற்றியசுரம் அதிகமாய் காய்ந்து பிளப்பு வியர்வை மூர்ச்சை சித்தபிரமை உடல் நொகும்தாகிக்கும் மாமிஷத்தைப்பற்றிய சுரம் காய்ந்து அதிக சுவாசம் மூர்ச்சை மயிர்கூச்சு ஆயாசம் நோக்காடு நமச்சல்.



## கொடிசுன்னம்.

சாற்றுகிறேன் பிறப்பிக்கும்போதுபிண்டம் தன்னுடனே பிறந்தாரேனர் தனித்துலத்தி.
யெத்துவோமிதுகண்டால் சகலநோயும் யெந்தவழி போகுமென் றேகும்பாரு.
சுற்றுவனுமில்லையப்பா குலையுமில்லை குருடருக்கும் கையதுவும் கூடும் கூடும்.
பார்த்துவரயின்றலே வுவ்லைக்கண்டால் பாவித்தியமும் பிணிமூன்றும் பறக்கும்பாரே.
அப்பனே அதையெடுத்துசெய்யுமார்க்கம் அறைகிறேன் யகண்டசட்டிக் குள்வேவைத்துப் பாலாய்த்தோடையிலே சாறுநாழி சுண்டவிட்டு பிரகெடுத்யபம்பண்ணி செப்பியே நோய்க்க யனுவளவுதாக்கிப்பாரு செகசாலவைத்தியமும் கைக்குள்ளாச்சு.
தப்பிதமுமில்லையடா மறைத்தநூலை தயவாகவுந்தனுக்குசாற்றினேமே.

## எக்கு தங்கசிந்தூரம்.

நாட்டு எக்குபொடி ப. (க) தங்கபொடி ப. (வ) இரசம் கல்வத்திலிட்டு பச்சைகலப்பையுடையும் தேய்வுபடா குழி கல்வத்திலிட்டு பச்சைகலப்பைடையும் தேய்வுபடா குழி கல்வத்திலிட்டு வில்லைதட்டி காய கிழங்குரசத்தால் (ச) சாமம் அரைத்து வில்லைதட்டி காய வைத்து ஓட்டில்வைத்து சீலைசெய்து கோழிபுடமாக புடமிடவும் எடுத்து மேல்படிரசத்திறைல் ஒவ்வொரு சாமமாக அரைத்து முன்மாதிரியாக புடம் (உ௰க) யிடகு ங்குமம்போல் சிவந்துவிடும் இதைதேனில் அரிசியிடை யிழைத்து இரு வேளையாக மண்டலம் கொள்ளவும் கரப்பன் பதார்த்தம் மச்சம் கடுகு நல்லெண்ணை நீக்கவும் ஆவின்பால் சர்க்கரை சேர்க்கவும் தேகம் சிவந்து நரம்புகள் வலிவுபெற்று திரைநீங்கி விசேட பலனை கொடுக்கும்.

வியாதிமூவாறு விளங்கியகுட்டங்கேள்
சுயாதிகிரந்தி சுழன்மேகத்தாலாகும்
பயாதிமண்ணுணி பலவண்டிறலெட்டு
நியாதிபுகழ் நாலாய்நிறைந்தன குட்டமே
முன்னாளில்செய்தகுறை கடினத்தாலே
முறையானவெளுப்புவந்த முறைமைகேளாய்
நன்னாளிற் சிலயிடும்பு செய்பாவத்தால்
நாடிவந்த் காமத்தால் சிலந்திவண்டு

இன்னுளில் விஷபூச்சி சேரத்தானு
 மிசைந்தவிஷ அட்டையுட னெறும்புதானும்
தன்னுளில் மிருந்தபுழு விந்தஞ்செய்யான்
 தான்கடிந்தவிஷதோஷம் சாத்தக்கேளே.

காலதனிலேகடித்தக்கால் திமிருண்டாகும்
கைதனிலேகடித்தக்கால் விரல்குருகும்
மேல்தனிலேகடித்தக்கால் தடித்துகாணும்
மெய்கழுத்தில் கடித்தக்கால் பொரிந்திகாணும்.

சொல்பெரிய தலைதனிலேகடிக்கபுண்ணும்
சிறந்தவிரு துடைதொடுக்கில் பொரிந்திகாணும்
தொல்பெரிய விஷபூச்சி கடித்தால் தோஷம்
சொல்விடு குணாநோயும் தொருக்கலாமே.

சரீரத்தில் கிருமிகளால் குட்டம் பெருவியாதி சொரிசிரங்குகள் நேர்வதால் அதற்கு அவுஷத நிணுசுகள் ஓமம் புரசைவித்து மிந்துப்பு மருதொன்றிவேர் பூவரசுகொட்டை சிவனார்வேம்பு மக்கிஷ்டி சடாமாசி வாய்விளங்கம் கருஞ்சீரகம் வெப்பாலரிசி கார்போகவரிசி வாளுழுவை காட்டுசீரகம் தாளகம் காயம் ஆத்துருமட்டி நேரடிமுத்து கந்தகாம்பு சர்க்கரை தேன்சொடுக்கு விழுதிமஞ்சள் காமஞ்சள் சிவதை வாளம் கஸ்கசா வேம்பு கடுக்கா காடி பறங்கிசக்கை சதகுப்பை ஆடுதின்னாபாளை தலைசுருளி நொச்சி சிருநாகப்பூ மைசாக்ஷி நத்தி சீனக்கிழங்கு செங்கொட்டை திருபலாதியாம் மேர்க்கண்ட வியாதிகளுக்கு முன்னதாக கிருமிபூச்சிகளுக்கு கொடுத்து அதுகளை நிவர்த்திசெய்து பிறகு அவிழ்தம்குடுக்கவும்.

## மூளைமூலம் எண்ணை.

சித்தாமணக்கெண்ணை ப. (௫௰) மெருகன் கிழங்கு ப. (௫) செருடன் கிழங்கு ப. (௫) இவைகளை சிறுசாக அருத்து முன் எண்ணை கொஞ்சம்விட்டு வெக்கவறுத்து சங்கன்குப்பியிலை பொச்சி கொட்டை கரந்தை முருங்கிலை செருப்படை வெள்ளைவெங்காயம் அத்திபட்டை பூவரசுபட்டை பூவரசுபழுப்பு வகைக்கி ரசம் படி. (வ) இவைகளைக்கூட்டி காய்ச்சிவடித்து கருசீரகம் சாபத்திரி வகை ப. (௨) சாதிக்கா ப (க) பறங்கிசக்கை ப. (க) சிவனார்வேம்பு ப. [க] இலைகளைசூரணம் செய்திட்டு வேளைக்கி அரைபலம் விதமாக [௫] [எ] நாள்குடித்து இரண்டுநாள்சென்று முத்தெண்ணை ஸ்நானம்செய்து வைக்கவும் இப்படி மூன்றுதிரம் கொடுக்க பத்தியம் இச்சாபத்தியம் அல்லது பசும்பால் சீனி அன்னத்துடன் கொடுக்க மூலத்தில் மூளை காணாத்திடும் மேகம் [உ௰க] கிரந்தி உஷ்ணவாயு காந்தல்வெள்ளை அரையாப்புகட்டி யிவைகள் தீரும்.



## நீர்கோவை நீராம்பலுக்கு.

வியாதியாளனை காலை படுக்கையிலிருந்து எழுப்பி உட்காரவைத்து உடனே வெள்ளைவெங்காயரசம் படி [வ] உள்ளுக்குகொடுத்து நாற்காலிமீது உட்காரவைக்க நீராகயிறங்கி நீர்வடிந்து விடும்.

## பித்தத்தால்வெளுந்த ரோமம்கருக்க.

கடுக்கா நெல்லிக்காய் செங்கொட்டைவகை மணுகு [க] யிவைகளை யிடித்து செம்மண்ணில் கலந்து குழிவெட்டி அதில் நிறைத்து சலம்விட்டு உரவாகியபிறகு கிளரி சமானப்படுத்தி பூவெடாத கரிச்சாலை செடிகளைநட்டு சலம்விட்டுவர யிலைகள் உதிர்ந்து கருப்பாக இலைவிடும் காலையில் மூன்று யிலையாகமண்டலம் வுட்கொள்ள புளி கைப்புகாரம் மச்சமிவ்வகைகளை நீக்கவும்.

## மலசலகட்டுக்கு மாத்திரை.

இரசகர்ப்பூரம் ப. ௩, பூநீக்கிய லவுங்கம் ப. ௫, வோமபொட்டு ப. ௫, கூட்டி துமட்டிக்காய் ரசத்தால் ௰உ, ஜாமமரைத்து பட்டாணிபிரமாண மாத்திரை செய்து சோம்பு ப. க, திராக்ஷி ப. க, கிழாழம்செய்து அதிலிட மலசலம் உடனே விதயும்.

## ஸ்ரீ போகலேகியம்.

பூமிசக்கரைகிழங்கு தோ ௰, அமுக்கனுங்கிழங்கு தோ உ, பூனைகாலிவிரை தோ- உ, நீர்முள்ளிவிரை தோ. உ, நத்திவேர் சிருநாகபூ சாதிக்கா சாபத்திரி லவுங்கம் லவுங்கபட்டை யேலரிசி வேலன்சோந்து இலவம் பிசின் வால்மிளகு வெந்தியம் சாலேமிசிரி சீயாமுசிலி சீமைதண்ணீர்விட்டான் கிழங்கு ரூமஸ்தகி வெள்ளைகுண்டுமணி பருப்பு வகை தோ க, பாமனேசுபேத்தோ. க, யிவைகளை சூரணம்செய்து குங்குமபூ மாஷா, உ. தேனிலிழைத்துக்கொள்ளவும்நல்லதேனை க்காச்சி அழுக்கைநீக்கி அதில் சூரணங்களையிட்டு பிசைந்து வேளைக்கி எலந்தன்காய்பிரமாணம் புசித்து ஆவின்பால் பொசித்துவரவும்.

### சம்பங்கி எண்ணெ.

கழிகியாடிய எள்ளெண்ணெயை சாடியில்விட்டு சம்பங்கிபூ யிதழ்களாகயிட்டு வால்மிளகு கோரைகிழங்கு கஸ்தூரிமஞ்சள் பூலாகிழங்கு கோஷ்ட்டம் அகில்கட்டை சமனுகதாள்செய்திட்டு உருந்துமாவு கவசம்செய்து பெரியபானையில்அரைத்தரம் சலம்விட்டுஅதின்மீது உ,விரக்கடைசாடிநிறக்க டோலாந்திரம்கட்டி கூய, நாழிகை எரித்து எடுத்து வடித்துக்கொள்ளவும்,

### குழந்தைகளுக்கு சகல மாந்தஎண்ணெ.

முத்தெண்ணெ ப. ௱௰, துளசி முசுமுசுக்கை உத்தாமணி சிலந்திநாயகம் தேள்கொடுக்கு செருப்படை கையாந்தகரை மணத்தக்காளி கஞ்சாங்கோரை கொஞ்சியிலை வெள்ளறுகு பிரமியிலை யிவைகள்ரசம் படி அரைக்கால் குமரிமடல்சாதம் வரகுவைக்கலில் வெதப்பியெடுத்த ஆறு ஆத்துமட்டிக்கா ரசம்விட்டு காச்சி சேறுபதமா யிருக்கும் சமயம் கருஞ்சீரகம் வெந்தியம் கோஷ்ட்டம் வகை ப, ௨, செண்பகமொக்கு வி - நி, க, பூண்டு ப, ௨, யிட்டு பதத்தில்வடித்து தக்கபடி வ, ௨, ௐ, பலம் விதமாககொடுத்து மாலை மிளகு சாம்பலாக்கி துத்தியிலை வெந்தியம் வெங்காயம் கியாழமிட்டு கொடுக்கவும் சகல மாந்தமும் தீரும்-

### குழந்தைகள் அள்ளுஎண்ணெ.

சித்தாமணக்கு எண்ணெ ப, கூ ல் கஉ ப. வெப்பாலன்பால்விட்டு வெங்காயரசம் ப, கஉ, கருஞ்சீரகம் ப, ஊ கடுகுரோகணி ப. ஊ, கூட்டி காய்ச்சி வடித்து பால்குடிக்கும் குழந்தை யாகயிருந்தால் வ ப விதம் ௫ நாள் கொடுத்து தாயாருக்கு புளியில்லாமல் பத்தியமிருக்கசெய்யவும்

கிரந்திவகை நான்கும் மேகநீரால் கருங்கிரந்திசெங்கிரந்தி ஆலங்காகிரந்தி கள்ளிபூ கிரந்தியுண்டாகும்

தலைவலிசிரசில் மூளையில்நீர்தங்கிநரம்புகளில் அக்கினிசென்று துடித்தலுடன் நோகும்.

வயிற்றுவலி மூலத்தில் கனலேறி குடுகொண்டு குடல்முருக்குதலால் நோயுண்டாகும்.

குட்டம் (௰அ) ம் ஸ்ரீகள் கிரந்தி மேகத்தால்வருபவை (கூ) மண்வளியன் வண்டு பூச்சி எலிகடிகளால்வருபவை (அ) சரீரத்தினுள் கிருமி புழுக்களால்வருபவை (ச) சிவவதைதா



ய்தந்தை மனதுநோகச்செய்தல் தெய்வவுருவையழித்தலும் பெரியோரை பழித்தலால்.

பித்தக்ஷயம் காசம் மந்தாரகாசம் விஷபித்தகாசம்இரத்தகாசம் சுவாசகாசம் இவைகள் மூலத்தில் அனலதிகரித்து மூளையில் நீர்கசிந்து நெஞ்சில் சுவாசம் கவரி கபத்தை உறையச் செய்துவிடும் கடவ்வாங்கி கொடாதால்நேர்ந்தவை.

சூலை, விசைநரம்பில் வெப்பம் கொண்டு தமர்விம்மிதமாசுபற்றி உதிரம்கெட்டு விசைநரம்பை மடக்கி கொள்வதாம்.

குன்மம். நெல்உமிகல் யுண்பதால் சோறை சேர்ந்துகுடலில் மாசுஅதிகரித்து அதுபிரளும்போது கிருமிசார்வதால்நோகும் மாசு நிவர்த்திக்க நீங்கும்.

வாத பித்தஅய்யவலி சத்திஎரி குன்மசூலையென (எ) விதம் நேரும், வயிரெரிய குடிகெடுத்தல் பழித்தல் தானமில்லாமைபிறர்பசிக்க வுண்டதினுல் வருபவை.

சோகை, வாயு யெழும்பி யீரல்வெந்து சரீரமெல்லாம் வெளுப்பேரி உதிரம்வற்றி அடிவயிறுகனத்து தாதுகெட்டு பசிதணிந்து கைகால் வோயும்.

சன்னி வருபவை மூலத்தில் சிங்குவையும் தீ சலம் வாய்வும் கூடி நரம்புபின்னி யெழும்புதலால்.

கைகால் குடைச்சல் முடக்குவீக்கம் வருபவை குழந்தை மரம்வெட்டல் சிவதெஜந்து கைகால் முறிதலால்வரும் (௫) வலியும் ஊர்வனவும் பரவை பட்சி நாகம் கொன்ற தோஷத்தால்வரும்.

௰அ பித்தம் பயித்தியம், பெரியோரை நிந்தைசெய்தல் தலங்களையழித்தல் தூஷணித்தலால் ஸ்ரீகள் கெர்ப்பநோய்கள் விந்துவை யழித்தல் சிசுவைமரித்தல் கன்னுக்குபால்விடாமல்செய்வது யிளம்பயிரை யழித்தல் பூ பிஞ்சியை அழித்தலால்வரும்.

பாண்டு நோய் தாய் தந்தைமனம் நோகல் மனிதரை வம்புசெய்தல் ஆங்காரம் பொய்பேசலால்வரும், சிரநோய்கள்கோபம் பொய்வசனம் தூஷணம் இடும்பாகபேசல் சிவருக்கு நஞ்சிடுதலால் வரும்.

கரப்பன்வண்டுகடி, குருதூஷணம்வழியில் முள்ளடைத்தல் மாங்களை பூவுதிர அடித்தலால்வரும், பிள்ளை கண்டமாலை ஆயுதங்களாலடித்தல் கல்லெறிதல் உயிர்களை சுடுதலால்வரும்.

கண்ணோப் (கூ௰சு) ம் மாதர்களை யுற்றுபார்த்து மோகித்தல் வதைப்பவரை விலக்காமை ஆலயம் போய் கடவுளை தொழாததாலும் பலவுயிரை தன்னுயிர்போ லெண்ணாததாலும் வரும்.

ஆனந்தவாயு உயிர்களைகட்டி யாக்கிஅறுத்தல் பசுவையடித்தல் குடல்களைகிறி வெளிகண்டதாலும்,

சத்திரஞ்செய்ய ஆகாதிதிகள்.

சீர்பெறு பிரதமை சேரும்பெருவிரல்
நேர்பெறுயுள்ளங்காலது துதிகை
திரிதிகைமுழங்கால் சேர்ந்திடுமென்க
சவுத்திபெருந்துடை தாவியபஞ்சமி

குய்யத்திடத்தே குடியிருந்திடுமாம்
அய்யமேசஷ்டி யமர்ந்திடும்நாபி
சப்தமிமூலையில் தானிருந்திடுமே
வொத்திடும் அஷ்டமியோநி நேர்கரத்திர்

மெத்திநவமி மேவியகழுத்தில்
அதரந்தசமியிலாகு மவ்விடத்தே
யேகாதசியி லிருந்திடும்நாவில்
துவாதசியில் துயின்றிடும் நெற்றி

திரியோதசியில் சேர்ந்திடும்புருவம்
சதுர்த்தி டேரி னானிருந்திடுமே.
உதித்திடும் பூரணம் உச்சியினுரையும்
செப்பியவமுர்தம் நிலைநின்றதனுல்.

சத்திரம்பண்ணிடில் தானெழும் நோய்கள்
கொப்புளித்திடினும் குத்துப்படினும்.
தப்பிலாஅரவம் தான்கடித்திடினும்
யட்டைகடிக்கினு மடிகடிபிலந்தியும்

வயத்தில்பிணியெனும் மரணமதாகுமே
காசினிதனிலே கைவிஷதாரி
திதிகளையறிந்து செய்திடபலிக்கும்
மசிழ்பெருமுனிவர் மகிழ்ந்துரைத்தனரே.

மார்பதரம் நெத்திவளரிடது புயமுச்சி
சீர்வலத்தரம் நாபிசில்லோதிக் கேர்பெருகும்
அருக்கநாட்கொண்டு சநியாகுமட்டும்
குறியிற் சுருக்கமெனச்சொல்.



முப்பு.

அப்புவேமுப்பு அல்லதுவேரொன்றுகுமோ
யாவதர்க் கியல்போ
துப்புகெட்டவனே உப்பினைப்பிடித்தால்
சூதமும் புனைகழன்றுடும்
தப்பில்லைவேதை பாச்சலாம்யோக
சாதனைசெய்திடர்க்கெனவெ
பற்ப்பமுமொன் றெளிதினுரைத்தனன்
பொதிகைபருப்ப தத்தனி லிருப்பவனே

யென்னவேவானத் திடியினிலொன்று
கன்னியமான கடல்தனிலொன்று
பொன்னெனபூத்த பூமியிலொன்று
முன்னவர்சொன்ன முப்பூவிம் மூன்றே.

அகத்தியர் சால சுருக்கம்

எடுத்ததொருரோகமெல்லாம்தீர்ந்துபோக
யென்மகனேசெந்தூரயியம்பக்கேளு
தடுத்ததொருலவணத்தைதண்ணீர்விட்டு
தயவாகபத்துதரம்காச்சிக்கொண்டு
வெடுத்ததனையாட்டிடவேமருந்துகேளு
வுத்தமனேதுரிசிகெந்திலிங்கந்தானும்
எடுத்ததொருவுப்பொன்றுக்கரைக்கால்போடு
போட்டரைப்பாய்குமரிநீர்பொற்றலையின்சாறே.

பொடுதலைச்சார்தூதுவளைஉமிநீர்விட்டு
சாதகமாய்வொவ்வொன்றுசாமமாக
நாட்டங்க சாரதனிலாட்டிவாங்கி
நலமாகபில்லைதட்டிரவியில்வைத்து
யோட்டில்வைத்துயோடுகொண்சீலைசெய்து
வொருபுடமாய்குக்கிடத்தில்நீரிப்போகும்
வாட்டமாயிருக்கவென்றுல்வைத்தியரேகேளு
வியாதியென்றவகையெல்லாமறிந்துபோடே.

போட்டடாபூபதியுமிதர்க்குமீடோபூரணமாஞ்
செந்தூரமிதர்க்குமீடோ
நாட்டிலேயுள்ளதொருவயித்தியார்க்கு
நாடிவரும்நோய்களுக்குமிதுவேயாகும்
தேடியதோர்சிலவுமில்லைசெந்தூரத்தால்
செயமானகாலனைத்தானெழுப்பலாகும்

கூடியதோர்பிணமெழுந்துபேசக்கேளு
குணமாகசிலாகையொன்றுசெய்திடாயே.

செய்திடுவாய்செம்பாலும்வெள்ளியாலும்
துவளையுடபெருமனப்பாகீளங்கேளு
அய்யாருவிரல்நீளம்ஆண்பிள்ளைக்கு
அரிவையர்க்குவெட்டுவிரல்நீளமாகும்
மைய்யஅந்தயோனியிலேயேற்றிக்கொண்டு
பணவிடைதான்செந்தூரம் ருதம்பாதி
வெய்யவனைபார்க்குமந்த மூலிச்சாறு
விட்டுநீரோணவத்தை செபித்திடாயே.

செபித்திடுவாய் ஆயிரத்தெட்டுருதானப்பா
செத்தபிணமெழுந்திருந்து வார்த்தைபேசும்
மைய்யஅந்தசலாகையதைவாங்கும்போது
பன்றுபோலிருந்திடுவாள் விதிதான்தீர்ந்தால்
மெய்யாகயிருக்கவென்றால் யெழுந்துபோவாள்
வேதாந்தசித்தரெல்லாம் மெச்சினார்கள்
கைய்யடக்கம்மிதுகுருவும் கொண்டோர்க்கப்பா
காசினியில்மாந்தருக்கு காட்டொணாதே.

## கொள்ளைநோய் சய்காரன்.

வாந்திபேதி லேக்கியம்- திரிகடுகு சித்தரத்தை லவுங்கம் வகைப. (க) சூரணம்செய்து லிங்கம் வி - கி. (க) இரசசெந்தூரம் வி - கி. (ஐ) வீரம் வி - கி. (ஐ) பூரம் வி - கி. (வ) கூட்டி தேனால் (ச) சாமமரைத்து லேக்கியம் பதமாய்எடுத்து பேதியும் வாந்தியும் கண்டவர்களுக்கு குண்டகாய்பிரமாணமாக மூன்றுதரம் கொடுக்கவேண்டும் தாகமானால் அன்னகாடி கொடுத்து வரவும் ஆகாரம் புழுங்கலமுது நொய்கஞ்சிசெய்து லவணமிட்டு கொடுக்கவும் சீதளமிருந்து விட்டிருந்தால் நேத்திரத்திற்கு இஞ்சிரசம் கலிக்கயிடவும்.

புலஸ்திய மகாமுனியின் நாலிற்கூறிய உப்பு சுன்னம்.

வாதியாய்புவியில் வாழ்வதற்கரிய மவுனமாங்கரியுப்பு கட்டு வகுத்திடும்தெளிவாய் வகையதாயுரைக்க மகத்துகள் மறைத்திடும் சூட்சம்.

பேதையென்றுலகில் பெருத்திடும் மூலிப்பிரகாசமாங்குநிணாயினடிதான்.

பிளிடாமூலி தண்ணீர்மிட்டாலெனுமே பெருந்தும்பைதாழையுமேனி,



நீதிறுவகைச்சாறிதுசமனாக நிறைதவருமலிதர்க்கு:
நிகழ்த்திடும்நாலுக்கொருவிதம் கரியுப்பெடுத்துடன் சாத்தினிற்களரத்து. சோதியாய்பாகம் தெரிந்துடனடுப்பில்தீயெரித்து சுலம்கண்ட. செய்கையாய் பொங்கிவருதலில்லாமல்சிறுகவேதீயெரித்திடுமே. சிறுக தீயெரிக்க செலமெலாம்வற்றிசெலிப்பதில்லாமலும் கட்டும் சிறலில்லாமல்கசிவுபோய் கசடற்றிறமதாய் வலுத்துடனிருக்கும். குழுசிடவிதற்கு அரைவித பாகம்கூட்டிடும்வெடியுப்புசீனம். குறைவராதிடிலும்அறுவகைசெயநீர்குமிற விட்டாட்டிடுமையோல். யறுவகையரியுட்மமூரிதானெனுமே அறிந்தறியாமலும் மறைத்தார். அதுமெழுகதுபோல் வருதலுமெடுத்து யதிதவட்டதுசெய்து ரவியில். மறுபடாமலுமே கதிரவன் முகத்தினில்வைத்து காய்ந்ததுவெடித்தோட்டில் வகுத்துமேலோடுமூடி மண்சிலே மருபடாதொருமுழபுடமே, முழபுடமதனில் மூட்டுவன்னியைத்தான் மூழ்ந்திடாமலும் புடமாறி. முதிர்ந்திடாமலும் மலர்ந்து கரியுப்பின் சுன்னம்உலகொலாம் விலைமதித்திடலாம். பழமையுப்பறிபார் பதனமாய்வைத்து பரிசைவேதைகளுமேயாடும். பலபலதொழில்கள் நீச்சில்லாசுன்னம் பாரினில்நினைத்ததுமுடியும். இழையகல்லுப்பின்கட்டினை விளங்கயெடுத்துநீ பொடித்துமுன்சாத்தில். இனமதாய்களைத்து வடிப்பின்மேலேத்தி எரித்திடநீரதுசுண்டும். பிழைவருகாமல் குமரவும்காய்ச்சி பின்பதையாறவைத்திடுவாய். பெருமைதானிதற்கு அரைவிதபாகம் பேணியேவெடிசீனமேத்தே. விதமறுவகை நீர்விட்டு நீராட்டிவிடாமல்செய் நீரதும்முட்டி. விறுமெழுகதுபோல் பதம்வரவழித்து விதமதாய்வட்டுசெய்திடின். அதமருபத்துசாக்கிரில்மாரும் அருணனில்காயந் தெடுத்ததனை. அடக்கியோடதனில்லதிதவோடதின்மேல் ஆக்கினைசெய்து மண்சிலே. பதமுழபுடத்தில் பதியவுந்தாக்கி பகர்ந்தபின்வோடுதுமெடுத்து. பார்த்திடும் கல்லுப்பதுமலர்ந்ததிக பளிங்குதன் னிறமதாய்சுன்னம்.சுதனருளதனால் சுன்னம்வந்தெய்துவது ஏரோகியம் சுபஸ்தபுண்ணியம் செய்தோர்க்கே. யாத்துமதுரோகியண்டை தப்புத்துபோல் குவிந்துசுன்னமும்கருகி பாழாமே.

தன்வந்திரியார் சண்டமாருத சிந்தூரம்.

சுத்திசெய்த ரசகர்ப்பூரம் (ச) லிங்கம் (அ) வீரம் (உ) நெல்லிக்கெந்தி (உ) இரதசிந்தூரம் (ச) இவைகளை இரண்டுசா[illegible]வைவிடாமலரைத்து [illegible]த்திரப்படுத்திபணவிடையாகடபச்ச[illegible]லத்தின் மத்தியில்வைத்து உருட்டி முழுங்கிசெ

யயவும், ஆறுவேளை சன்னி (௰௩) குட்டம் மகோதரம் பிலீகை குன்மம் வாதம் (அ௰) கிரந்தி கொறுக்கு காமாலை பிளவை சுரம் (௬௪) விரைவாதம் தனுர்வாதம் குஷ்டவுத்திரம் கண்டமாலை கருமேகம் வண்டுகடிகள் யோனிபுத்தும் வியாதிக்குதக்க அநுபானங்களிலிட தீரும் வியாதிக்குத்தக்க பத்தியமும் ஆயுள்வேத பண்டிதர்கள் வைப்பது.

ரசபாஷாணாதிகளால் அனேக ஔஷதங்கள் செய்து நோயாளர்க்கு உபயோகப்படுத்தும்படி சிவகாருண்ணியராகியசித்தர்ரிஷிகள் சொல்லியிருக்கின்றனர் அவையவைகளுக்குரிய சுத்திகளையும் இடைபாகங்களும் சரீரபேதங்களையும் நோயினளவும் அறிந்து நோய்களுக்குரிய அநுபானங்களில் கொடுத்துவருகிறதில் நோயினளவைமதித்து எந்தப்ருவத்தில் கொடாமல் நிறுத்தவேண்டுமோ அதுசமயம் நிறுத்தி உடனே அவிழ்தவேகங்களை தணிக்கச்சொல்லி யிருக்கும் முறிவுகளை கொடுத்துவருவதில் பிணியாளனை யாதொரு துன்பங்களிலும் பொருந்தசெய்யாமல் வினைக்கீடாகிய துன்பத்திலிருந்து விலகச்செய்யும்.

ஒருமண்டலம் இரண்டுமண்டலம் கொடுக்கவேண்டுமென்றும் பணவிடைகள் களஞ்சிபலம் குன்றியிடைஅளவாகவும் ஒருவேளை யிரண்டுவேளையாக கொடுக்கும்படியாக ஆதிநூல்களில் சொல்லியிருந்தாலும் சுமார் (௫௰) ஆண்டிற்கு முன்வசித்த தேகங்களுக்கும் இப்போதுஇருக்கும் தேகங்களுக்கும் வெகுபேதமாக குறைவுகாட்டுகிறது ஆதலால் தேகதிடத்தைகண்டு ஔஷத பிரமாணத்தை குறவுபடுத்திக்கொடுக்கவேண்டும்.

அவசியம் ரசபாஷாணகெந்தகம் சம்பந்தஜினுசுகளின் குண அவகுணங்களையும் மூலிகாதிவித்துஇலை பூமுதலிய வகைகளின் குணங்களையும் உபரசங்களின் குணங்களையும் கூடியவரையில் பண்டிதர்கள் அநுபவத்திற்கு வந்திருக்கவேண்டும் அவ்வகையறியாமல் உபயோகப்படுத்துவதில் அமிர்தமே விஷமாகும் ஆதலால் கடவுளாக்கினைக்குள் படவேண்டுவ தவசியம்.

### குங்குமபூ குளிகை.

குங்குமப்பூ ப. (௧) திரிகடுகு திரிபலை சாதிக்காய் கிராம்பு யேலம் சந்தனத்தூள் தேவதாரம் கடுகுரோகணி [illegible]கை ப. (௨) பழரசத்தில் (௬) ஜாமம் இஞ்சிரசத்தில் [illegible] ஜாமம் கண்டங்கத்திரி பழரசத்தில் ௨, ஜாமமாகவரைத்து பயறள



வாக மாத்திரைசெய்து தக்கஅநுபானங்களில் சீதளம்வரட்சி இவைகளுக்கிடவும்.

### சாம்பராணி பதங்ககுளிகை.

நெய்திப[illegible]காலிறங்கிய பதங்கம் ப. ௪, கிராம்பு ப. ௰௩, கோரோசனை ப. ௩, இவைகளை கறப்புவெத்திலை ரசத்தாலரைத்து குன்றிபிரமாணம் சூதகங்களுக்கு மிளகுஅள் நெய்யிலும உதிரகட்டுக்கு சக்கரையிலும் சீதளங்களுக்கு தேனிலும்மிட.

### கோரோசனை மாத்திரை.

கோரோசனை ப. ௪, சூதம் சூடன் திப்பிலி லவுங்கம் கோஷ்டம் ஜாபத்ரி சருஞ்சீரகம் சாதிக்கா வோமம் மதுரம் அக்கல்காரம் நன்னாரிவேர் மிளகு வகை ப. ௩, மணத்தக்காளிரசத்தால் ஒருசாமமரைத்து பயறுபிரமாணம் தேனிலிட சுரசீதளசபங்கள் தீரும்.

### சுரசன்னி யிவைகளுக்கு அநுபானம்.

வெள்ளெருக்கு மாவிலங்கன் கொடிவேலி முருங்கை இஞ்சி யிவைகள் வேர்பட்டை ரசம் சுரசம்செய்தும் ஆடாதோடை ஆதண்டை தும்பை புரசன் கோடகசாலை பொற்றலை இஞ்சி யிவைகள் ரசம்கூட்டி சுரசம்செய்து தேனிட்டும் - கோரோசனை கஸ்தூரி பச்சைகர்ப்பூரம் குங்குமபூ சவ்வாது இவைகளை பழரசத்திலரைத்து முன்கண்ட வியாதிகளுக்குரிய ஔஷதங்களை கூட்டிகுடுக்கவும்.

### சூட்டினால் வந்தவினை நோய்களுக்கு.

அறுகன்புல்வேர் செப்புநெருஞ்சிவேர் முருங்கைவேர் மிளகு கோரைகிழங்கு வகை ப. ௨, அரைபடி சலத்தில் வீசம்படியாக கியாழம்வடித்து இதில் வாழைசருகு சாம்பல் ப. ௪, பசுவெண்ணை ப. ௨, இட்டு சுடுகையாகவே இம்மாதிரி மூன்றுவேளை கொடுக்கவும் - அல்லது உளுந்துமாவு கேழ்ச்சிபருப்பின்மாவு வெள்ளைகுன்றியின்மாவு இவைகள் வகை ப. வீசம் வெண்கருவாலரைத்து நோகும்வினையின் மீது பைத்தாசபூசி அனல்காட்ட நோக்காடு தீரும்.

### நோயாளர்க்கு தசாங்கவத்தி.

அகிற்கட்டை சந்தனக்கட்டை தேவதாரிகட்டை செம்பிலிச்சக்கட்டை கிஷ்ணஅகிற்கட்டை குராணம்வகை ப. ௧, பளிங்குசாம்பிராணி ப. ௨, சிலாரசம் ப. ௧௨, மட்டிபால்

ப. க, யாவும்கூட்டி பன்னீராலரைத்து மயிலாலக்கடி கொழும்தடவிய குச்சிகளுக்கு அதைக்கண்டுவிரல் கனம்பூசி நிழலுணர்த்தி கொளுத்தி நோயாளி சமீபம்வைத்து புகைபட சீதளம் பித்தம் மூர்ச்சை சிரோபாரம் முதசன்னி தீரும்.

கண்டஸ்தானமீது வருநோய்கள் வராமலிருக்க நசியம்.

ஸ்ரீசந்தனம் அரைத்து உணர்த்தியவை ப. ருஉ, மூதல்திரம் புகலையைசற்று அனல்காட்டி தூள்செய்தவை ப. ருஉ கஸ்தூரிமஞ்சள் மரமஞ்சள் லவங்கம் பச்சிலை சிருநாகபூ செஞ்சந்தனம் குங்குமபூ சோம்பு சுக்கு யேலம் திப்பிலி மிளகு நெல்லிவத்தல் சீரகம் குருவேர் சாதிக்கா சாபத்ரி அதிமதுரம் வால்மிளகு கோஷ்டம் வெட்டிவேர் மயிலிறகுசடைவகைக்கு தோலா (வ) இவைகளை தனித்தனி தூள்செய்து யாவும் வொன்றுகூட்டி எலுமிச்சம்பழ ரசத்தில் ச, ஜாமம் இளநீரால் உ, ஜாமம் பன்னீரால் உ, ஜாமமாக அரைத்து ஒருதோலாவிதம் பில்லைசெய்து நிழலுணர்த்தி பத்திரப்படுத்தி ஒருபில்லையுடன் பச்சைகர்ப்பூரம் சாம்பிராணி பதங்கம் புனுகு தினுசுக்கு மஞ்சாடிசேர்த்து அரைத்து வெள்ளிடப்பி வில்வகுடுக்கையில் வைத்து சிட்டிகையாக உபயோகபடுத்தி வரவும்-சதாரணபுகலை தூள்போட்டு வரும்அப்பியாசிகள் அத்துடன் சிட்டிகைதூள் கலந்து நசியமிட்டு வரவும்.

சத்தி உப்பு பதங்கம்.

பளிங்குகூடன்ப. க, திருகூத்பத்ரி ரசத்தாலரைத்து உணர்த்தி சத்திராதஉப்பு ப. க, கல்லுப்பு வெண்காரம் வெடிவகை ப. வ, பூ, ப. ஆவின் நெய்யாலரைத்து சிறுலவங்கபட்டை வால்மிளகு யேலக்காஅரிசி பயிரவனஸ்தி வகை ப. வ, வொன்றுக்கி சந்தனஅத்தர் ப. வ, புனுகு வி-கி. க, கூட்டி பிசைந்து பிங்கானிலிட்டு மேல்பிங்கான்மூடி உருந்துமாவு கவசம்செய்து மணலில் கூ, ஜாமம் எரித்து பதங்கத்தை எடுத்துகொள்ளவும் பண்டிதர்கள் அனேக வியாதிகளுக்கு உபயோகப்படுத்துவர்.

## இங்கிலீஷ் ஔஷதம்.

திரேகவலிவிர்க்கு மில்க்கின்னும் பகும்பர்லில் பல்வீஸ்சாலேமிசிரி டிறம்கஷீக்பிளவர் சாதிக்கா தூள்யிட்டு [illegible]ாய்ச்சிகுடிப்பது.



அசீரணத்திர்க்கு பெப்பர்மெண்டாயில் உ, முதல்டு துளிவரையில் சர்க்கரையிலும். பித்தத்திர்க்கு சல்பர்காஷ்டிச்டிலியூட்டம் டிஞ்சர்காடனம் டிஞ்சர்சிஞ்சிபரீஸ்சுகம் தண்ணீரில்கொடுப்பதும் சோடா கல்ம்பாதூள் பிஸ்மத் சேவல்சினி தூள்க்கி மிரு, குன்றியிடைகொடுப்பது.

வாந்திபேதிக்கி சல்பூரிக்ஆசிட் டு, துளி சலத்தில் தாமதப்படுத்திகொடுப்பதும் குளோர்டயின் டு, முதல் மிரு, துளிவரையில் பிராந்தியில் கொடுத்துவருதலும் இருப்பல் வயிற்றுநோய் இரைப்பு சூலைநோயிர்க்குமாகும்.

நீர்சுருக்கிர்க்கு பொட்டாஸ் ஆசிட் ஷ்லைக்கர்பொட்டாஸ் பொட்டாஸநைட்டாஸ் ஸ்பிரீட்ஸ்யீத்தரீஸ் நைடர்ஸலடிஞ்சர் ஆய்யாசமி கூட்டி குடிப்பதும்.

நீரொழுக்கிற்கு எகஷ்டிராக்ட்பெலோடோணு வ, கிரைன் ஓப்பியம் வ, கிரைன் கொயினன் மாத்திரைசெய்து கொடுப்பதும்.

வயிற்றிருள்ளபட்டைகிருமிகளுக்கு சான்டனின் பெரியவர்க்கு ரு, சிறுவர்க்கு க, முதல் ச, கிரைன்வரையில் சர்க்கரையிலும் சிறுகிருமிகளுக்கு கோஷர்யகியாழத்தில் ச, முதல் அ, விகி வரையில் எப்சம்சாலட் கலந்துகொடுத்தாலும்

ஒருதலைநோய்க்கு காஜிபுட்டாயில் தடவதாலும் சிலம்மநாயல்தடவதாலும் வோலியம்காக போவுடர்தடவவும் கொயினுவுள்ளுக்கு கொடுப்பதாலும்-

வாய்வுகளுக்கு பட்டாஸ்நயின்டார்ஸ் பொட்டாஸஆயோடம் தண்ணீயிலாகிலும் பிராந்தியிலாகிலும் கொடுப்பதும்.

சட்டைகளுக்கு சிட்டுஆயின்டுமெண்டுவெண்ணையில்கூட்டி பூசுவதாலும்.

வெள்ளைக்கி கொப்பயபா டு, முதல் கூடு, துளிவரையில் சர்க்கரையில்கொடுப்பதும்.

சூதகவாய்விர்க்கு பில்ஆலோஸ்யெய்ட்மர் ரு, கிரைன் புசித்துசலம் புசிப்பதும்.

செருக்கிர்க்கு காஷ்டிக் டெஞ்சுபுளு ஆயின்டுமெண் டுகூட்டி தடவிவருவதும்.

கண்ணோயிர்க்கு காஷ்டிக் அல்லது ஜிங்சல்வீஸ் நல்லஜலத்தில் அளவாகயிட்டு நேத்திரத்திலிட்டுவரவும்.

சூரக்கருக்கு கொயினைன் சிங்கொயினைன் உ௦, குன்றி தேனிலாகிலும் கெந்தகதிராவக சலத்திலும் கொயிநடம் உ௦, குன்றி சோடா உ௦, குன்றியும் சர்க்கரையிலும்.

முறைகாச்சலுக்கு பவுலர்ஸ் ஸொலிஷன்திராவகம் பித்தசியாழத்தில் உ, முதல் ரு, துளிவரையில் கொடுப்பதும்.

இரும்பலுக்கு டிஞ்சர்கேம்பர்திராவகம் ய, முதல் கூய, துளிவரையிலும் டிஞ்சர்பில்லி ய,முதல் உய, துளியும் டிஞ்சர் அய்யாசாபி ய, முதல் கூய, வரையில் ஸ்பிரீட்அமோனியா ஆரோமா டிசை ய, முதல் கூய, வரையிலும் டிஸ்பிறிடிஸ்குளோர்பாரம் ய, முதல் உய, வரையில் மார்பியாஅயிட்டோகுளோர்ட்டயிஸ் ௨, கிரைனும் சலத்தில்கொடுப்பதும்.

வயற்றுவலிக்கு டிஞ்சர்ஒப்பியம் ரு, துளிமுதல் யரு, வரையில்டிஞ்சர்அசப்பட்டிடா ய,துளிமுதல் கூய துளிவரையில் சலத்திலும் சோடா உரு, குன்றியிடையும் டிஞ்சர்காடமம் ய, முதல் கூய, துளிவரையிலும் பெப்பர்மெண்டு திராவகம் க, முதல் ரு, துளிசர்க்கரையிலும் குளோர்டயன் ரு, முதல் உய, துளிசலத்திலும்.

பக்கமிழுப்பிர்க்கு எம்பிளாஸ்டகம் பெலடோனாதோலில்தடயி நோயமீதுபோடுவதும்.

விரைகோய்க்கு டிஞ்சர்அயிடன் பூசுவதாலும் போஸ்தகாகியாழம் காப்பிடம்செய்வதும்.

உள்மூலம் வெளிமூலத்திர்க்கு ஐங்கொயிண்டம் காலிகம் ஒப்பியோபூசுவதாலும் இதில்உதிரங்கண்டால் ஆஸ்லிஙா என்பதை போயிட்டண்டு உய, முதல் சய, துளிவரையில் சலத்தில்கொடுப்பதும்.

ஞ்டைச்சலுக்கு லெனிமண்டம் பெல்லடோனா கேம்பர் குளோராட்டபாரம் லிக்கர்அமோனியா லெனிமண்ட்டம்ஒப்பியும் இவைகளைசேர்த்து தேய்ப்பதாலும்.

விக்கல்களுக்கு பொட்டாஸ் அவிட்ஸ் பொட்டாஸ்நைட்ஸ் ஸ்ப்பிரீட்ஸயிதர்ஸ் நைட்ரோஸை டிஞ்சர்டேலிஸ் யின் புருஷன்பொக்குயிதுகள் உள்ளுக்குகொடுப்பதும் டிஞ்சர்அயோடன் தடவதாலும்.

சீதபேதிக்கி காஷ்டறுயல் பேதிக்கிகொடுத்து ஒப்பியம் யிப்பிகேக்கிபூவர்பவுடர் அயிர் டிஞ்சர்ஒப்பியம் பல்வீஸ்கைநோபல்விஸடோவரீஸ் யிர், கிரைன்ஒப்பியம் வ,கிரைனும்குடுப்பதும் பல்வீஸயிப்பிகாக் கீம்பவுடர் உ, குன்றிதேனிலும்.



அதிசாரபேதிக்கி காஷடிக் ஞ, கிரைன் அபினி ௨, கிரைனும் கூட்டிக்குடுப்பதும் சில்பேட்ஆப்காப்பர் ௨, கிரைன்ஒப்பியம் ௨, கிரைனும்குடுப்பதும்.

நீர்துவராத்திலடைப்பு எரிவிர்க்கு வால்மிளகு விகி.௪௦ தண்ணீர்பலம் ய, ல்சரைத்து நாளைக்கு ச. தரம்.

இன்ரைபைய்க்கு பலம்கொடுத்து அசீரணபேதியைநீக்கும். காசுகட்டி விகி. உ௦, லவுங்கப்பட்டை விகி. ௨, கற்கண்டு ப. ஙுஞ, சலம் ப. சு, ல்பாகுசெய்து அதிலிட்டுபாகபடுத்தி வனு,முதல் ஙு, ப. வரையில்கொடுக்கலாம்.

மாரில்கபம்உலர்ந்தயிருமலுக்குநரிவெங்காயம் விகி. காலேவிலம் கக்குதாள் விகி. க. சப்பு விகி. க, கமநாயகம் விகி. ௨ஞ, கர்க்கண்டுபாகில் சேர்த்தரைத்து உ, குன்றியிடை மாத்திரைசெய்து ரு, மாத்திரைவரையில் கொடுக்கலாம்.

காக்கைவலி விக்கலுக்கு கற்பூரம் குன்றி க, பெருங்காயம் குன்றி உ, சாருயம் துளி சு, வேலங்கோந்து இளகில்கரைத்து கூய, மாத்திரைசெய்து நாழிகைக்கொருதரம் கூ, விதம்கொடுக்க கற்பூரத்தை வாய்வுஇடுப்புவலிக்கு சாருயத்திலரைதது தேய்க்கவும்.

கீல் வாய்வுக்கு கற்பூரம் விகி. ச. சாருயம்துளி யரு, எள்ளெண்ணை ப. உ௦. யிதிலரைத்துதடவ. தாகமடங்க சுட்டரொட்டிசலத்தில் அடுப்புசரிதுாவிட்டுகொடுக்க அடங்கும் அசீர்னஏப்பம் மார்புஎரிச்சலுக்கு கரிதாள் ரு,குன்றிஎடை உள்ளுக்குக்கொடுக்கவும் ஆசனத்தில் மூலநோயுண்டானல் கஞ்சாயிலை பிடி. க, மஞ்சள்தூள் விகி. உ, எள்ளெண்ணை விகி. உ, கூட்டியரைத்து தடவவேண்டும்.

சாதம்யேற்றுக்கொள்வதுடன் தேகவலிவும் நிலவேம்பு விகி. ச, கிச்சிலிதோல் விகி. க, தலியா விகி. ௨, சாருயம் விகி.கூஉ ௰கூ.பலம் வெந்நீரில்கூட்டி இரண்நாடின்சென்று வடிகட்டி அ, விகி. யாக இரண்டுவேளைகொடுக்க.

பேதிக்கு சந்திரமல்லிவேர்யென்னும் பேதிகிழங்கு க, திராக்ஷிஉப்பு உ, கூட்டி க, விகி. குடிக்கவும்.

பேதி அதிமதுரம் விகி. கூஉ, திராக்ஷி விகி. அ, கியாழம்வடித்துகொடுக்க பேதியாய் தாகமடங்கும்.

இரைப்புவியாதிக்கு ஊமத்தம்வேர் கிழஙுணர்த்திபுகைபிடிக்க மார்பிறுரையை அறுக்கும். இரத்தம்கட்டியிருக்கும் வீக்கத்திர்க்கு வேப்பிலையை அரைத்து சட்டியில்கிளறிகட்

டலாம். சிறுவர்வயிற்றுபூச்சிக்கு. பப்பாய்காய்பால் க, விகி, முதல்ங, விகி.வரையில் வென்னீர்பசம்பாலில் சிறுவருக்குக் கொடுத்து ங. மணிபெர்றுத்து ஆமணக்கெண்ணை கொடுக்கவும்.

ராசபிளவைக்கு வேலம்பட்டைதோல்தூள் விகி. உ எள்ளெண்ணை விகி. அ, கலந்துதடவ.

எவ்விதவியாதியால் சொக்குக்கும்தலையில்இரத்தமதிகரித்தாலும் கடுகுதூள் ப. சுஉ, கோதுமைமாவு ப. சுஉ,காடியில்நனைத்து கூழ்போல்செய்து துணியில்தடவி பாதத்தின் கீழ்கட்டவும்.

காமாலைத்திர்க்கு பூண்டுதைலத்தை பஞ்சியில்துவைத்து டு, சு, வேளை வைக்க.

மண்ணீரல்வீக்கத்திர்க்கு பூண்டுதிரி.உம, மூசாம்பரம் விகி. அ, அரைத்து சாருயத்தில்கலந்து ங, நாள் வெய்யலில்வைத்து உ, விகி. வரையில்கொடுக்கலாம்.

பேதிக்கி நிலாவிரை விகி. சு, தனியா விகி. க, கியாழம்வடித்து திராக்ஷி உம்பு விகி. ௨, யிட்டுகொடுக்கவும்.

பீஜவீக்கத்திர்க்கு கணுநோய்களுக்கு நொச்சி இலையை வேகவைத்து கட்டலாம்.

முடக்கு பிடிப்பு வீரைவீக்கத்திர்க்கு நன்னாரி நிலவேம்பு கியாழத்தில் பட்டாஸ்அயோடன் உஉ, குன்றிஎடைவரையில்உபயோகப்படுத்தவும்.

டிஞ்சர்பர்றி கோகூதியா லூரியசலம் துவிரா, ல்திராவகம் டு முதல் ய,துளிவரையில்குடிக்க வலிவாரும்.மூளைமூலம் கரைந்துவிட பல்லிஸ்டிஸ்டேஸிஸ் ரோ. க, கூட்டியரைத்து துணியில்தடவி மூளைமீதுபோட்டுவரவும்.

சகலபேதியும்நிருத்த சூடன் விகி. க, மிளகு விகி. ௨, சுக்கு விகி. ௨, லவுங்கம் மாஷா க, கூட்டி நல்லஜலத்தாலரைத்து புன்னைகொட்டை பிரமாணம்கொடுத்து மீதுஜலம் கொடுக்க மூன்றுவேளை.



| தமிழ். | இங்கிலீஷ். |
| --- | --- |
| கெந்தகம் ... ... | சல்பர். |
| பொட்டுப்புதிராவகம் ... | னைட்ரிக்ஆசிட். |
| உப்புதிராவகம் ... ... | மியூரிஆட்டிக் ஆசிட். |
| சீமைசுண்ணாம்பிலாகும் ... | கார்போனிக் ஆசிட். |
| மாஉப்பு ... ... | கார்போகட் ஆப்பொட்டாஸ். |
| திராக்ஷிஉப்பு ... ... | கிரிமிட்டாட்டர். |
| சச்சிகார் ... ... | கார்போநடை ஆப்ஸோடா. |
| இந்துப்பு ... ... | ராக்சாலட்டு. |
| கருப்புஉப்பு ... ... | பிட்லேயான். |
| வெண்காரம் ... ... | பொரக்ஸ். |
| நவாசாரம் ... ... | ஸால்அமோனியாக். |
| சுண்ணாம்புநவாசாரதிநிர் ... | அம்மோனியா. |
| சுண்ணாம்பு ... ... | லயம். |
| சீமை சுண்ணாம் பு... ... | சாக். |
| பேதிஉப்பு ... ... | எப்சன்சால்ட் மெக்நிசா. |
| படிகாரம் ... ... | ஆலம் |
| அயசிந்தூரம் ... ... | ரெட்ஆப்சைட் ஆப்ஐரன். |
| அன்னபேதி ... ... | சல்பட்ஆப்ஐரன். |
| ஈயம் ... ... | லெட். |
| மயில்துத்தம் ... ... | சல்பட்ஆப்காப்பர். |
| துத்திநாகபூ ... ... | பிளவரஸ்ஆப்ஜிங். |
| பால்துத்தம் ... ... | சல்பட்ஆப்ஜிங். |
| அஞ்சனக்கல் ... ... | அண்டிமணி. |
| அஞ்சனக்கல்பஸ்பம் ... | அண்டிமவுனியல் பவுடர். |
| வாங்கிபஸ்பமாவது.. ... | அஞ்சணகல்திராக்ஷிப்புமாம் |

சிறுரிணங்களுக்குதடவமுர்தார்சிங்கிப. சு, எள்ளெண்ணை ப. எவ, சலம் விகி. யசு, சிறுதீயில் காய்ச்சிஎடுக்கவும்.

பிளவுஅயின்டுமெண் டுகம் க, ஆட்டுகொழுப்பு உ,டு நாள் அரைத்து கொருக்குகளுக்கு போடவும்.

மெழுக்குபிளாஸ்திரி மெழுகு க, எவ்வெண்ணை உ கூட்டிக்காய்ச்சி புதுரிணங்களுக்குபோட்.

அக்கினிபிளாஸ்ரி ஆட்டுக்கொழுப்பு க, மெழுக்கு க, வெ, குங்கிலியம் க, தேன் க, கூட்டிகாய்ச்சி கடிதத்தில்தடவிபோட கொப்புளிக்கும்.

தாத்திராகபூ பிளாஸ்திரி ஷை பூ விரி. ௪, ஆட்டுக்கொழுப்பு விரி. உ௪, கூட்டிஅரைத்து கை காலில் வெடிப்பிற்குபோட.

கெந்தகதிராவககளிம்பு ஷை திராவகம் விரி. க, ஆட்டுக்கொழுப்பு விரி. அ. இரண்டையும் அரைத்து தடிப்புமீது தடவ குணமாகும்.

### துஷ்டம் மேகசட்டைகளுக்கு நாசிம்ப எண்ணெ.

வெள்ளைகல்யாண முருக்கன்பட்டை பூவரசன்பட்டை இலவன்பட்டை தனித்தனி இளநீர்விட்டிடித்து பிழிந்த வகை ரசம் படி (வ) பிரமதண்டு ரசம் படி (வ) துத்தியிலை ரசம் படி (வ) சிறுசின்னி ரசம் படி (வ) குமரிசாதம் தேங்காபிரமாணம் வெந்தியம் ப. (உ௦) தூள்செய்து சித்தாமணக்கெண்ணை ப. (ருய) கூட்டி காய்ச்சி பதத்தில்வடித்து. பூரம் ப. ௨, சேர்த்தரைத்து வேளைக்கு ஒருரூபாஎடையாக கொண்டு வெந்நீர் சாதம்புசிக்க நாள் (ரு) - (எ) மருபத்தியம் அரைஉப்பு புளி சேர்க்கவும்.

### துஷ்டம் கிரந்திகளுக்கு சிவசத்தி லேகியம்.

சுத்திசெய்த ஆமலகெந்தி ப. (அ) பாலேருதம் ப. (அ) இரண்டையும் கூட்டி இரண்டுசாமமாக அரைத்து எடுத்து சீனிசர்க்கரை ப. (உய௪) ஏலம் கிராம்பு சாதிக்கா சாபத்திரி அதிமதுரம் ஓமம் சித்தரத்தை மிளகு வாளுழுவை சுக்கு சித்திரமூலபட்டை திப்பிலி வகை ப. (க) பொன்வராலாக வறுத்து சூரணம்செய்து கூட்டி நல்லதேனை காய்ச்சி அழுக்கைநீக்கி சுடுகையில்தானே முன்தினுசுகளையிட்டு பிசைந்து லேக்கியபதமாக செய்துகொண்டு வேளைக்கு அரைதோலா விதம் இருவேளையாக ரோகநிதானத்திர்க்கேர்க்க (வ) (௨) (க) மண்டலம் கொடுக்க-உப்பு புளி காப்பன் நீக்கிய ஆகாரம் குட்டம் கெர்ப்பநோய் கிரந்தி பக்கபவுத்திரம் கொடிபவுத்திரம் கண்டமாலை வாயுகள்தீர்ந்து தாதுவல்லியாகும் முத்தெண்ணை பிதானம்.

### வெள்ளை அபுரேக்கு சுன்னம்.

சிறுகுடுவையில் (க) ப. பொட்டிலுப்பை அடியில் பாதிபரப்பி மீதுஒருபலம் ரேக்கு அபரேக்கை வைந்து மீறுபா



தி உப்பை யிட்டு வாபுரம் புளியாரையிலையை அடைத்து ஓடுமூடி அரைசிபுடமிட சுன்னமாகும் வெண்ணெயில் குடுக்க நீர்சுருக்குஅழலைதீரும்.

### வெள்வங்க பஸ்பம்.

சுத்திசெய்த வெள்வங்கத்தை தகடாகசெய்து பொடியாக கத்தரித்து கோணிபட்டையில் உணர்த்தி தூளாக்கிய நொச்சில்தூளை இரண்டுவிரல் கனம்பரப்பி வங்கபொடியைதூவி அதின்மீது மூலிகைதூளைதூவி தலையணைபோல் சுருட்டி கட்டி (௫) படி உமிமத்தியில் வைத்து நெருப்பிடவும் நன்றாக ஆரியபிறகு பொரிந்திருப்பவைகளை எடுத்து அரைத்து வேகாமல் கிள்ரவைகளை நீக்கி பர்ப்பமாயிருப்பதை எடுத்து வெண்ணெயில் உபயோகப்படுத்தவும் மேகம்வெள்ளைதீரும்.

### மேகங்களுக்கு பேரண்ட பஸ்பம்.

பால்போலிருக்கும் அண்டவோட்டை பூநீரில் கொதிப்பித்து கழிகிஎடுத்து எருமைசாணி அடைமத்தியில் வைத்து (௨) கஜபுடமிட்டு (௪) - க்கு - (க) பூரம் சேர்த்து வாய்நீருலரைத்து பில்லையை உணர்த்தி (௨) கஜபுடமிட்டு பணவிடையாக தேனில் (௨) மண்டலம் கொடுக்க செம்மேகம் தீரும்.

### அழரிசிலை கெந்திபர்ப்பம்.

கரும்பில்லாஞ்சி எலியை அரைத்து அதர்க்குள் வைத்து சீலைசெய்து (கூ) வரட்டியில் புடமிட்டு குன்றிஎடையாக வெண்ணெயில் கொடுக்க கெரிப்புகள் நீங்கும்.

### பாலேருதசிந்தூரம்.

சிறியகுடுவையில் (வ) ப. நெல்லிகாகெந்தியை பாலேரசம் பலம் ஒன்றுக்கு கீழ்மேலிட்டு ஓடுமூடி சீலைசெய்து மூன்றெருவில் புடமிட்டு அரிசியிடை தேனிலிட வாயு சுரம் தீரும்

### அன்னபேதி சிந்தூரம்.

மான்செவி கள்ளியிலைரசத்தி லரைத்து பில்லையமு, எருவில் புடம் தேனிலிட வாய்வு வீக்கம் தீரும்.

### பலகரைசங்கு சுன்னம்.

குடுவையில் எலிமிச்சம் பழரசத்தில் (கூ) நாள்வூரி அப்படியே (௨) கஜபுடமிட்டு பழரசத்தில் குடுக்க வயர்வலிதீரும்.

முத்துசிப்பி சுன்னம் இரும்பல் க்ஷயத்திர்க்கும்.

ஒருபலத்திர்க்கு வீரம்குன்றி பாஷாணம் குன்றி இரண்டையும் உமிநீராலரைத்து தடவி உணர்த்தி ஓட்டில்வைத்து (௭) கெசபுடமிட்டு எடுத்து திப்பிலி ப. (க) திப்பிலிமூலம் சீரகம் சுக்கு ஏலம் சிறுதேக்கு வாய்விளங்கம் கடுக்கா மிளகு வகை ப. (வ) இளவறுப்பு சூரணம்செய்து சர்க்கரை ப. ௧௭, கூட்டி தேனைகாச்சி அதிலிட்டு பிசைந்து கெசகாய் பிரமாணத்தில் முன்சுன்னம் (௨) அரிசி எடைவைத்து சாப்பிட்டு வரவும்.

சித்தண்டம்.

அண்டத்தை சிரியதுவாரமிட்டு அதினுள் (உய) தாளி உத்தாமணிபால்விட்டு குப்பைமுள்ளி கீரையை கவசம்செய்து மண்சீலைசெய்து (ய) வரட்டியில் புடமிட்டு எடுத்து தேனிலிட சீதளம் சுரம் தீரும்.

சகலவாய்விர்க்கு வாதமாருத மெழுகு.

பரங்கிசக்கை ப. (அ) கடுக்காதோல் ப. (அ) திரிகடுகு சித்திரமூலப்பட்டை சித்திரமூலபட்டை வகை ப. (உ) கசகசா ப. (க) கார்போகஅரிசி விழுலரிசி வெப்பாலரிசி வகை ப. ௭, சாதிக்கா சாபத்திரி ஏலம் லவுங்கம் சித்தரத்தை வால்மிளகு அதிமதுரம் வகை ப. (வ) சூரணம்செய்யவும் - கோரோசனம் குங்குமப்பூ வகை ப. (வ) தாளகம் ப. (க) வீரம் ப. (க) லிங்கம் ப. (க) பூரம் ப. (வ) ரசசிந்தூரம் ப. (வ) இவைகளை முன்னதாக வரைத்துயாவும் ஒன்றாககூட்டி திருப்பலாதி கியாழத்தால் (அ) சாமமரைத்து நிழலுணர்த்தி தேனால் (௯) சாமமரைத்து மிளகு பிரமாணம் பனைவெல்லத்தில் வைத்து இருவேளையும் குடிக்க புளிநீக்க நெய் வெள்ளாட்டு வத்தலாகும் தீரும்வியாதிகள் முடக்குவாதம் சூலைமேகவாயு பாண்டுவலி குடல்வாயு சூலைவாயு மண்டைவாயு சூதகவாயு முசல்வாயு மூர்ச்சைவாயு பித்தவாய்வு பாரிசவாய்வு அர்புதவாய்வு திமிர்வாய்வு தீரும்.

கூழ்பாண்ட லேகியம் வெப்பந்தணிந்து தேகம் தணியும்.

ஒருசாம பூசினிகாயின் மேல்தோலும் விரைசோரையும் நீக்கி மற்றதை துண்டுகளாக்கி (கஎ) படிசலம்விட்டு வேகவைத்து சலம்வடித்து கொண்டு தண்ணீரும் சக்கையும் இடைக்கு இரண்டிடை சர்க்கரைகூட்டி பாகுஎடுத்து சக்கையை கடைந்திட்டு கற்பூரவிரை பச்சிப்பு (அ) பூனைக்காலிவிரை உ,



வால்முளகி (க) சபேத்மிசிலி (க) குஸ்சேதுசாலம் (உ) வேலன்கோந்து (உ) முருக்கன்பிசின் (உ) வெங்காயவிரை (க) சல்கம்விரை (ச) நீர்முள்ளிவிரை (க) முள்ளங்கிவிரை (க) சிருநாகபூ (க) ஆதரிசருக் (க) ஆதரிசுபேத் (க) லவுங்கபட்டை (க) இவைகளை தோலாக்கள்சூரணமிட்டு கிளரி வேளைக்கு (௭) தோலாவிதம் மில்வகை நீக்கவும்.

பக்கசூலை கேர்ப்பசூலைக்கு எண்ணை.

முத்தெண்ணை ப. (யஉ) சலம்விட்டு இடித்துஎடுத்த மிளகருணைஎலை ரசம் ப. (யஉ) பூண்டுதிரி ப. (அ) கூட்டி காச்சிவடித்து ஆள்தக்கபடி (௯) நாள் குடித்துவர ஆகும்பேதி வெளுப்பாகஆனால் நோய்நீங்கிய குறிப்பாம் இச்சாபத்தியம்.

சிவநாரமூர்தம் கெந்திருதம் காய்பொரித்த வெண்காரம் மனோசிலை திரிகடுகு வகை வி - நி. (க) முன்னதாக சூதமும் கெந்தியையுமரைத்து மற்றதினுசுகளையும் கூட்டி (அ) சாமம் அரைத்து பதிரப்படுத்தி சுரம் சீதளம் தலைவலி தலைபாரமிவைகளுக்கு நியம் கூட்டி தேனில் உள்ளுக்கு குடிக்கவும்.

சன்னிகளுக்கு உருக்குமாத்திரை. லிங்கம் வீரம் பூரம் சூதம் லிங்கதொட்டி வகை வி - நி. (க) இவைகளை அண்டவெள்ளை கருவில்மஞ்சளிட்டு தெளிந்தநீரால் ச, சாமமரைத்து கோதுமைபோல் மாத்திரைசெய்து உணர்த்தி வெத்திலைத்துண்டுகளில் வொவ்வொன்றாய் வைத்து நூலால்கட்டி ஓலைசுருளுக்குள் வைத்து மீதுமணலால்மூடி அதின்மீது மூடு, வரட்டியில் புடமிட்டு எடுக்க உருக்குமாத்திரையாக இருக்கும் தக்க அனுபானங்களில்கொடுக்கவும்.

சுக்லவர்த்திக்கி.

அரைக்கால்படி சலத்தில் உ, மாக்கலான் காவிரையும் முள்ளங்கிவிரை தோ. க, இரண்டையும் துணியில் முடிந்திட்டு கியாழம்செய்து பிழைந்து வடித்து இதில் தேன் ப. க, காடி ப. க, உப்புகல் ௯, கூட்டிசாப்பிட்டு உ, படி சலத்தில் மணத்தகாளி விதல் தோ. க, அதிமதுரம் தோ. க, துணியில் முடிந்திட்டு காச்சி அந்தசலத்தை கொஞ்சம் கொஞ்சமாக குடித்துவந்து வாந்திசெய்து வரவும் முடிவில் ஒருதோலா குல்குந்தில் ௭, மாசா நேமல்தகிவைத்து குடித்து ஆகாரம்கொள்ளவும் இருநாளுயிவ்விதமே குடிக்கலாம்.

## பசித்தீபனத்திர்க்கு.

ஓமம் ப. க, குருசாணி ஓமம் ப. க, நாகமுரு ப. க, அல்செய்து கஉ, ப. பனைவெல்லத்தில் பிசைந்து புங்கன்கொட்டை பிரமாணம் பொசிக்கவும்.

### நவரத்தினங்கள் நீற்றின பற்பங்களின் குணம்.

மாணிக்கம் சுரம் சன்னி, தோஷம் தாகம் மேகம் கண்ணோய் நீக்கும் நேத்திரரோகங்களனைத்தும்—வயிரமெனும் ரவை எப்பிணியும் நீக்கும்—வயிடூரியம் சீதவாதம் சிலேட்டபம் எப்பம் சூலை குன்மம்பித்தம் நீக்கும்— கோமேதகம் வாதபித்தம் மலகட்டு மந்தாக்கினி நீக்கும். புட்பராகம் வீரியவிர்த்தியு மழகுண்டாக்கும்—கெட்டிகல்பவழம் திரிதோஷம் அய்யகபம் காசம் சுரதோஷம் உதிரவாந்திபேதி காக்கைவலி கல்லடைப்பு இருமல் நேத்திரரோகம் தீர்ந்து சுத்தஉதிரந்தரும்—ஆணிமுத்து அஸ்திசுரம் சோபை கண்ணோய் விந்து நஷ்டம் கபம் நீக்கும்—பச்சைமரகதம் மதுமேகம் புண்பிசாசு நீக்கி [illegible]விர்த்திதரும்—நீலம் வலி மேகம் பித்தம் பாண்டு மதிமயக்கம் நீக்கும் உதிரவாந்தி உதிரபீனிசம் சக்குவான்தீரும்.

### உலோகநீற்றின செந்தூரங்கள் குணம்.

தாம்பரம்விஷங்கள் சன்னிபாதம் க்ஷீணசுக்குலம் விழிநோய் கோழைகட்டும்—பொன் அய்யகபம் காசம் சயரோகம் யிவைதீர்ந்து தாதுவை வலுப்படுத்தும் —வெள்ளி சலமேகம் கரப்பன் பித்தகபம் மேகம் தாகம் கிரந்தி சூலை மந்தாக்கினி தீரும்—வெள்வங்க நீற்றினைத்திர்க்கும் இதுவேகுணமாம்.

இரும்பு பாண்டு வெண்குட்டம் சோபை காமாலை குன்மமந்தம் குடல்புண் அதிசாரபேதி தீர்ந்து தாதுவிர்த்தி நாடிகளை வலிவுபடுத்தும் இரவைவலிவு ரோமங்கள்கருக்கும்.

எக்கு சோபை கண்ணோய் மந்தம்கபம் பாண்டு தீர்ந்து தேகதிடமும் சுக்கிலத்தையும் தரும்— காந்தம் யிரவுக்கும் மண்ணிரலுக்கும் வலிமைசேர்க்கும் சோகை குன்மம் மேகம் பாண்டு திரிதோஷம் வெட்டை பிரமியம் நீருமை கல்லடைப்பு பாரிசவாயு பிடிப்பு நரம்புகளிசிவு தீரும்.

மண்டூரம் வீக்கம் அஸ்திசுரம் விஷரோகம் சுவாசசயம் பாண்டு இரும்பல் நீருமை நீர்பெருக்கு மூலரோகம் உதிரவாந்தி தீர்ந்து இரைபக்கு வலிமைதரும்.



தந்திரோகம் மேகம்பேதி அழலை வெட்டை கிரணி மூலைப்புண் பயித்தியம் படைகள்தீரும்.

காரீயம் விரணகுட்டம் குதவிரணம் சூலை மேகம் சுரம் தீரும்.

இவைகளின் தனிகுணம் யில்வகைதரும் இவைகளுடன் வேருதினுசுகளை சேர்த்து நீற்றின செந்தூரவகைகளுக்கு சேருந்தினுசுகள் குணத்தையும் கொடுக்கும்.

வெள்ளி பூரணசுரம் மாளிஷம் மேகவாதபிடிப்பு ஏழுக்குவெள்ளை உதிரபேதி க்ஷயம் கோழை விழிநோய் இரும்பல் அட்டகுன்மம் கிரந்திகிர்சோகைதீரும்— தாம்பரம் ரத்தபித்தம் சன்னிபாதம்வழுமை மகோதரம்கபாதிக்கம் பீனிகம் அதிசாரம்வெண்குஷ்டம் இரத்தகுன்மம் வீரணம் கிருமி தாது நஷ்டம் தீரும்.

### பாஷாண வகையில் சிலவற்றின் குணத்தைபுகலுவாம்.

குணக்கேடுநீக்கிய பாதரசம் நேத்திரநோய் நரம்புசிரந்தி அஷ்டகுன்மம் கல்பிடிப்பு மகாவிரணங்கள் பெருவியாதி க்ஷீணவாதம்—இரசகற்பூரம் வாதபிடிப்பு பித்தசூலை வயற்றுநோய் சிலேத்தும்மவாதம் சுரோணிதவாதம் தீரும்.

சாதிலிங்கம் அதிசாரமருட்சை சன்னிபாதம் அற்புதபுண் அதிமூத்திரசாரணவிஷம் இரும்பல்கரப்பன் குணக்கா கிரந்தி மண்டகுஷ்டம் வாதநோய் அந்தரமுகரோகங்கள் தீரும்.

சவ்வீரம் குன்மகுரநோய் மகாவாதங்கள் துற்மாமிசங்கள் கல்பிடிப்பு சோகைரோகம் தீரும்.

கெல்லிக்கா கெந்தகம் மேஅ குஷ்டம் அஜம் வல்லை கட்டிகவிசை மகோதரம் குந்தநோய் மகாவிஷம் மேகவியாதி [illegible]தசுரம் வாதிக்கம் தீரும்.

வாணகெந்தகத்தின்குணம் ரசரத்த தாதுகளிற்பிறந்த கிருமிகள் நமை குஷ்டங்கள் தீரும்,

தாளகத்தின்குணம் சுரம் குஷ்டரோகம் நடுக்க சுரம் க்ஷயகாசசுவாசம் துஷ்டவிரணம் தீரும்.

சிவந்தஅரிதாரம் குளிர்சுரம் மகாவாதரோகம் சரீரக்குத்தல் சிரைபிடிப்பு குஷ்டரோகம் தீரும்.

மடலரிதாரகறுப்புகள் இவை உடற்றரியவிஷங்கள் சருமகுஷ்டம் குளிர்சுரம் சுவாசம் சிலந்திவிஷம் தீரும்.

மிருதாரசிங்கி சரீரம்வெங்கும்பரவும்விரணம்காப்பன் கிரந்தி குட்டம் மகாவிரணம் தீரும்.

எலிகளின் நாமமும் அதாகன் கடித்தாலதற்கு

ஔஷதபிரயோகமும்.

அரசன் மயிலன் மூலத்திதி கெப்பு கிரியன் குலத்திரியன் பதி பாண்டு புரைந்தரி புதன் வரனல் யிவை மடக்கும் ஔஷதம் யான்கண்டதாலில் புகலவில்லை.

திருவடிவிளக்கன் மாரபுத்திரன் உதிரமண்டலி அருணன் குலந்தன் மந்திரி முத்திரையன் உத்திரியன் விரிசெய்கன் விசையன் அலியன் உத்தமன் யிவை மடக்கும் அதின்குணமும் ஔஷதமும் யிதிகடியிற்காண்க.

திருவடிவிளக்கன் கடித்தால்.

உடல்சிவந்து தேகம்சொரியாகும் கோரைகிழங்கு என்பது முத்தகாசம் யிந்துப்பும் தேனில்குடுக்க.

மாரபுத்திரன் சரீரத்திற்குள் வெதும்பும் எரிக்கும் தலைசுண்டு வாய்நாத்தமாகும் அதற்கு வாகைபட்டையும் அதின் விரையும் தேனில் குடுக்க.

உதிரமண்டலி சிருநீர் ரத்தம் போலிரக்கும்கடிவாயில் வட்டம்போல்விருக்கும் அதற்கு மஞ்சள் பற்பாடகமும் நெய்யில்கொடுக்க.

அருணன் உடம்புகருக்கும் யிரும்பல் தேகமிளக்கும்.

அதற்கு முத்தகாசும் பர்ப்பாடகமும் தேனில் கொடுக்க.

குலந்தன் உடம்புகுளிர்ந்து நடுக்கங்காணும்.

அதற்கு செஞ்சந்தணம் தேனில்குடுக்க.

மந்தரி சொரியாகி தினவாகும் பாவட்டம் எலி மாடபுராஎச்சம் இவைகளை அரைத்து முகத்திலும் காதிலும் பூசி காக்கணவேர் கருவேல்பட்டை வில்வவேர் சமன் தேனில் கொடுக்க.

முத்திரையன்உடம்பு வெண்குட்டமாகும்.

அதற்கு வாகைவிரையை தேனில்கொடுக்க.

உத்திரியன் உடம்பில் கொப்பளங்களாகு மதற்காக தகரவிரையை காடியிலரைத்து பூசி உள்ளுக்கும் கொடுக்க.



விரிசங்கன் காதுகேளாது வீங்கும் உடம்பெரியும்.

அதற்கு கடுகுரோகணியும் கற்கண்டும் குடுக்க.

விசையன் வாய்நிருண்டாகும் வீங்கும்உடம்பு சுழற்கும் கிலிகிலிக்கும் அதற்கு நாழிஉளுந்தும் அரிசியும் விளங்காசதையும் அரைத்து நெய்யில்குழைத்து உடம்பிலும் தலையிலும் பூச.

அலியன் உடம்புதத்துபோல் காணும் வீங்கும் கண் கருக்கும்.

அதற்கு சிருகீரைவேரை தேனில்குழைத்துகுடுக்க.

உத்தமன் திரேகமெங்கும் கொப்பளமாகும்

அதற்கு பாவட்டம் எலிசாறும் புராஎச்சமும் தேனில் கொடுத்து உடம்பிலும் பூச.

மேர்க்கண்ட நாமமுடைய, எலிகடித்தால் மேற்கண்ட விதமாக நோய்கள் காணுவதால் மேற்கண்டபடி அவிழ்தங்களை ட - டு நாள் கொடுக்க நிவர்த்தியாம் அப்படி வியாதிகளை விபாதிகள்என்று மதிலை கவனித்துபாராமல் மேகசம்பந்த வியாதிகள்என்று மதித்து பலவாரான அவிழ்தங்களை கொடுப்பதில் வியாதிகள் நீங்காமல் போவதுடன் அவிழ்தங்கள் புகன்ற முன்னோர்கள் பேரில் பிழைகூருவது வீணல்லவா.

| திணுசு. | அதற்கு பரிகார திணுசு. | அதற்கு பதில் திணுசு. |
|---|---|---|
| அபிரேகம் ... ... | | கத்திரா - கர்பிஸ் |
| அரிதாரம் ... ... | பசும்பால் பாதாம் பரிப்பு ... | |
| கர்ப்பூரம் ... ... | அம்பர்கஸ்தூரி ... | மூக்கிலுப்பு சந்தணம் |
| காரியம் ... ... | பல்குடித்துவாந்தி | வெள்ளியம் |
| கோரோசனை ... | வாதுமைபிசின் ... | பாத்ஷுகர் |
| அகிர்கட்டை ... | கர்ப்பூரம் ... | மேல்படி கட்டைகள் |
| அக்கிராகாரம் ... | வாதுமைபிசின்திராக்ஷி ... | அரிசி திப்பிலி |
| அசாருன் ... ... | தீபதிராக்ஷி ... | சுக்கு வசம்பு |
| அதிமதுரம் ... | நருவளிகா ரோசாபூ ... | திருபுதா சுக்கு |
| அபினி ... ... | மிளகுலவுங்கபட்டைசுன்பற்பிருன் | குருசாணி ஓமம் |
| அம்பர் ... ... | குளிர்ச்சிவஸ்து. | கஸ்தூரி குங்குமபூ |
| அரத்தை ... ... | சந்தணம் மூக்கிலுப்பு ... | வால்மிளகு லவுங்கம் |
| அரக்கு ... ... | ரூமஸ்தகி ... | ரேவல்சினி மூக்கிலுப்பு அசாருன் |
| ஆல்புகாரு ... | நருவளிகா குல்குந்து ... | புளி |
| ஆத்துதும்மட்டி... | பாதுமை பிசின்... | விளக்கெண்ணை கள்ளி |
| கருங்காலி ... ... | தேன் ... | இளந்தகொட்டை |
| யிஞ்சி... ... ... | தேன்வாதுமை நெய் ... | அரிசி திப்பிலி |
| ஊமத்தைவித்து ... | மிளகு சோம்பு தேன் ... | பேகேஜுபா |
| எட்டி ... ... | சக்கரை பனிநீர் ... | மேல்படி பட்டை |
| எருக்கிலை ... | நெய்பால் மோர்... | இலைக்கள்ளி |
| ஏலக்கா ... | சக்கரை ... | கற - ஏலரிசி |
| ஏலரிசி ... | வாதுமை பிசின்... | வால்மிளகு |



| திணுசு. | அதற்கு பரிகார திணுசு. | அதற்கு பதில் திணுசு. |
|---|---|---|
| ஓமம் ... | தனியா ... | ஆசுமுத்லோமம் |
| கெஞ்சா ... | கசகசா பாதுமை பருப்பு ... | ஊமத்துவித்து எட்டி |
| கடுகு ... | வாதுமை நெய் காடி ... | அப்போஷாது |
| கரியபவளம் } சுத்தாளைப்பால் } | மைசாக்ஷி திருபலாதி கடுக்கா ... | சிவதைவேர் செகமுனியா |
| கருஞ்சீரகம ... | வாதுமை பிசின்... | சதகுப்பிஅனிருன் |
| காளாஞ் ... | கடுகுகாடி உப்பு... | |
| சீமைதுத்தி ... | தேன் சோம்பு ... | சிருதுத்தி |
| மட்டிப்பால் ... | சடாமாஞ்சி ... | |
| சிலாரசம் ... | ரூமஸ்தகி ... | |
| காடி ... | சக்கரை ... | பழரசம் |
| காவி ... | ரூமஸ்தகி பனிநீர் | |
| குக்கில் ... | கத்திரு குங்குமபூ. | வாலேந்திரபவளம் |
| குசும்பாபூ ... | தேன் ... | |
| குங்குமபூ ... | அனிருன் ... | சிகிஞ்சேபின் |
| குந்திரிகம் ... | சக்கரை ... | ரூமஸ்தகி |
| கொடிவேலி ... | விளாம்பிசின் மஸ்தகி ... | பவளம் கிச்சில்கிழங்கு |
| தணியா ... | கோழிமுட்டை ... | கஷகசா |
| கோஷ்டம் ... | அனிருன் ... | அக்கிராகாரம் |
| கோரைகிழங்கு ... | காடி ... | சடாமாஞ்சி |
| சதகுப்பை ... | பழரசசர்பத் ... | சோம்பு |
| சந்தணம் ... | தேன் கற்கண்டு ... | கற்பூரம் கொட்டைபாக்கு |
| சவ்வரிசி ... | பால் சக்கரை நெய் | |
| சிருலவுங்கபட்டை | கத்திரு அசாருன். | வால்மிளகு |
| சாதிக்கா ... | சர்பத் தேபனப்ஷர ... | சாபத்திரி |
| சாபத்ரி ... | விளாம்பிசின் ... | சாதிக்கா |
| சாதிலிங்கம் ... | மூலைபால் ஆவின் பால் ... | பிர்தார்சிங்கி |
| நிலாவரை ... | மஞ்சட்கிழங்கு ... | சிவதைவேர் |

| திறுசு. | அதற்க்கு பரிகார திறுசு. | அதற்க்கு பதில் திறுசு. |
|---|---|---|
| சிந்திகொடி | பசும்பால் பேய் | அத்திபால் மேல்படிகள்ளு |
| சீரகம் | கத்திரா | கருசீரகம் |
| படிகாரம் | பசும்பால் | நவாசாரம் |
| சுக்குபிஞ்சி | கத்திரா | ருத்தியானஸ் |
| சோம்பு | சந்தனம் | கர்பிஸ் |
| தாமரைபூ | கற்கண்டு பனிநீர் | துத்திவிரை |
| தாளிசபத்திரி | கத்திரா | |
| தானிக்காய் | தேன் சக்கரை | நெல்லிபருப்பு |
| சிவதைவேர் | மேல்படி தோல் நெய் | கம்பிளிபூசி அடிமரபட்டை |
| ஆனைதிப்பிலி | பழரசம் | சுக்கு |
| திப்பிலிமூலம் | நெய்பால் | சுக்குதிப்பிலி |
| திப்பிலி | சந்தனம் விளாம் | மிளகு சுக்கு |
| திராக்ஷிபழம் | சிகிஞ்சேபின் | திராக்ஷி |
| துத்திநாகம் | தேன் | காரீயம் |
| துத்தி | பால்சக்கரை | சீமைதுத்தி |
| துரிசி | ,, | வைடூரகல் |
| அயம் | நெய்பால் மாமிசம் | மண்டூரம் |
| கழற்சிகாய் | நெய்பால்மோர் | மேல்படி வேர்யிலை |
| சாம்பிராணி | கசகசீ | ருமஸ்தி மட்டிபால் |
| கத்தகாம்பு | மீனம்பர் | கஸ்தூரி |
| மாக்கலான் | ரோசாபூதயிலம் | நஞ்சுமுரிச்சான் |
| பூநாகம் | ,, | இந்திரகோபம் |
| நிலபனைகிழங்கு | நெய்பால் | காரட்கிழங்கு |
| நீரடிமுத்து | நெய்பால் | பரங்கிசக்கை |
| நீலிமருந்து | தேன் | நாட்டுகோதுமை |
| நேர்வாளம் | சுத்திகள் கடுக்கா | சிவதைவேர் |
| பவளம் | வாதுமைபிசின் | இரத்தபவளம் |
| வைரம் | நெய்பால் வாந்தி | ,, |
| பனிநீர் | தேன்கற்கண்டு | ,, |
| பாதரசம் | ,, | காரீயம் |
| பிதுர்ரோகணி | தேன் | மஞ்சள் |
| புரசங்கொட்டை | நெய்பால்சர்க்கரை | குருசாணிவோமச் |
| பூமிசக்கரை கிழங்கு | அனிசூன் | அக்கிராகாரம் |



| திறுசு. | அதற்க்கு பரிகார திறுசு. | அதற்க்கு பதில் திறுசு. |
|---|---|---|
| பூனைகாலி | யிலந்தைபழம் | துத்திவிரை |
| பெருங்காஞ்சொரி | விளாம்பிசின் | |
| பெருங்காயம் | மாதளம்பழம் | ஜாவ்சீர் |
| பொன் | தேன்கஷ்தூரி | செம்பு |
| பொன்னுவாரை | நெய்பால் | தாழம்பூ |
| மஞ்சட்கிழங்கு | பழரசம் | பிதுரோகணி |
| மரமஞ்சள் | பழசர்பத் | குங்குமபூ |
| மருதோன்றி | வாதுமைபிசின் | மருக்கொழுந்து |
| மாசிக்காய் | வாதுமைபிசின் | மாதளங்கொழுந்து |
| மிளகு | வெண்ணெய் நெய் | சுக்குதிப்பிலி |
| முத்து | பவழம் | முத்துசிப்பி |
| மூங்கிலுப்பு | தேன்ருமஸ்தகி | சந்தனம் |
| ருமஸ்தகி | வாதுமைபிசின் | குந்திரீகம் |
| ரேவல்சின்னி | விளாம்பிசின் | ரோசாபூ |
| லவுங்கபட்டை | வாதுமைபிசின் | வால்மிளகு |
| லவுங்கபத்திரி | ருமஸ்தகி | சடாமாஞ்சி |
| லவுங்கபூ | வேலம்பிசின் | சாப்தரி |
| வசம்பு | சிகிஞ்சபின் | சிரகம் |
| வால்மிளகு | ருமஸ்தகி | யேலம் லவுங்கபட்டை |
| வெடியுப்பு | வாதுமைபிசின் | இந்துப்பு |
| வெந்தியம் | அனிசூன் | ஆளிவிரை |
| பூண்டு | பசுநெய் | காட்டுவெங்காயம் |
| வாய்விளங்கம் | ,, | வால்மிளகு |

| பதார்த்தம். | | பரிகாரதினுசு. |
|---|---|---|
| பொதினு | ... | பழாசம் மாசிக்கா |
| மணத்தக்காளி | ... | கடுசீரகம் |
| தேயிலே | ... | பால்சர்க்கரை |
| அகத்திகீரை | ... | பசும்பால் |
| கரிவேப்பிலே | ... | நெய்வெண்ணெ |
| காப்பி | ... | பசுநெய்சர்க்கரை |
| துவரை | ... | நெய்புளி |
| பச்சபயரு | ... | தேன்சர்க்கரை |
| உளுந்து | ... | நெய்சிரணபதார்த்தம் |
| மொச்சை | ... | சீரகம் மிளகு உப்பு |
| கடலே | ... | கஷகஷாகாடி |
| பட்டாணி | ... | பன்னிர் |
| பெரும்பயறு | ... | கடுகுசுக்குயிஞ்சி |
| கொள்ளு | ... | நெய்புளி |
| எள்ளு | ... | தேங்கலந்தண்ணை |
| பாதாம்பருப்பு | ... | சக்கரைருமஸ்த்தகி |
| கஷகஷா | ... | தேன்ருமஸ்த்தகி |
| கருப்புகசகசா | ... | சோம்பு |
| சுரக்கா | ... | புளிப்புகாடி |
| பூசினிகா | ... | சுக்குசீரகம் |
| கூழ்பாண்ட | ... | சக்கரைகர்கண்டு |
| வெள்ளரிகா | ... | சுக்குதேன்உப்பு |
| அவரைகா | ... | குல்குந்து |
| பீர்க்கங்கா | ... | கர்மசாலா |
| புடலங்கா | ... | கர்மசாலா யிரச்சி |
| மிதிபாகர்கா | ... | நெய்புளி |
| காட்டுபவர்கா | ... | பழாசம்நெய்யிரச்சி |
| அதளங்கா | ... | உப்பு புளி நெய் |
| மிளகா | ... | புளிப்பு நெய் |
| பச்சமிளகா | ... | பழர்சம் உப்பு யிருள்ளி |
| கத்திரிகா | ... | நெய்யிரச்சி |
| முள்ளிகா | ... | நெய்புளி |
| கொத்தவரைகா | ... | யிஞ்சிசுக்குசீரகம்நெய் |



| பதார்த்தம். | | பரிகாரதினுசு. |
|---|---|---|
| பெண்டகாய் | ... | ருமஸத்தகி |
| வாழைக்காய் | ... | மிளகு சீரகம் |
| வாழைபிஞ்சு | ... | நெய்மிளகு |
| பலர்க்கா | ... | இஞ்சிமிளகு சீரகம் |
| பலாபிஞ்சி | ... | கர்மசாலா |
| அத்திக்கா | ... | சீரகம்புதினு |
| முருங்கைகா | ... | புளிப்புநெய் |
| மேல்படிபிஞ்சு | ... | பால்நெய் |
| அரிநெல்லிகா | ... | கல்லுப்பு |
| புளியங்காய் | ... | உப்புபச்சைமிளகா |
| மாங்காய் | ... | உப்புகாடிசீரகம் |
| மாபிஞ்சு | ... | உப்புசீரகம் |
| தேங்கா | ... | பழாசம்புளிப்பு |
| கொத்தமல்லி | ... | மஞ்சள்கரு |
| பருப்புக்கீரை | ... | மிளகுசீரகம் |
| தண்டுகீரை | ... | கடுகுபூண்டு |
| செங்கீரை | ... | மிளகு சீரகம் யிஞ்சி |
| முளகீரை | ... | மேல்படி |
| அரகீரை | ... | புளி |
| புளியாரை | ... | மாமிஷம் |
| வசளகீரை | ... | மிளகுசீரகம் |
| வெந்தியகீரை | ... | காடிதேன் |
| வேளேகீரை | ... | பழாச்நெய் |
| சதாப்பிலே | ... | மோரிலவிக்கவும் |
| வெள்ளேரிவிதை | ... | சுக்கு சோம்புதேன் |
| சுரைவிரை | ... | காடி |
| வெள்ளரிவிரை | ... | காடி |
| முள்ளங்கிவிரை | ... | உப்புதேன் |
| நெருஞ்சிவித்து | ... | தேன்சிரகம் |
| துத்திவித்து | ... | யிஞ்சி காடி புதினு |
| நீர்முள்ளிவித்து | ... | யிஞ்சிசாசிரா |
| ஆளிவித்து | ... | கொத்தமல்லி தேன் |
| வெந்தியம் | ... | காடிதேன் |

| பதார்த்தம். | பரிகாரதினுசு. |
|---|---|
| பிசப்கோல்வித்து ... | காடி-தேன் |
| கிலப்பனை ... | மிளகுசீரகஇஞ்சி |
| கருணைகிழங்கு ... | நெய்புளி |
| சேமகிழங்கு ... | புளி |
| உருளகிழங்கு ... | இஞ்சி புதினா பழரசம் |
| வள்ளிகிழங்கு ... | சக்கரை |
| சிறுவள்ளி ... | சக்கரை தேன் |
| முள்ளங்கி ... | உப்பு தேன் |
| செம்முள்ளங்கி ... | குல்குந்து [illegible] |
| ஈருள்ளி ... | உப்பு |
| பூண்டு ... | நெய் பழம் |
| இஞ்சி ... | தேன் நெய் |
| ஆட்டிறைச்சி ... | கொத்தமல்லி லவங்கப்பட்டை நெய் |
| தலைகறி ... | இஞ்சி பழரசம் புதினா |
| தலைமூளை ... | இஞ்சி கடுகு சீரகம் |
| கண்ணிரச்சி ... | காடி பழரசம் |
| கழுத்திரச்சி ... | கொத்தமல்லி வெங்காயம் |
| மார்பிரச்சி ... | புதினா பழரசம் |
| இருதயயிரச்சி ... | காடிபழரசம் |
| நுரையீரல் ... | புதினா மிளகு சீரகம் |
| ஈரல் ... | காடி கடுக்கா லவுங்கபட்டை |
| காலீரச்சி ... | காடி சீரகம் கொத்தமல்லி |
| மண்ணீரல் ... | லவுங்கபட்டை நெய் |
| குடல் ... | சுக்கு திப்பிலி சீரகம் கடுகு |
| கொழுப்புகுடல் ... | காடிபழரசம் |
| குண்டிகாய் ... | மிளகு திப்பிலி உப்பு |
| கொழுப்பு ... | சீரகம் சுக்கு |
| பீஜம் ... | காட்டுக்காடி |
| கால்கள் ... | சீரகம் புதினாகாடி |
| குட்டிறைச்சி ... | புதினாபழரசம் |
| எலும்புமூளை ... | கருவாபட்டை |
| முயலிரச்சி ... | நெய்சல்லாத கீரை |



| பதார்த்தம். | பரிகாரதினுசு. |
|---|---|
| உடும்பிர்ச்சி | புதினாபழரசம் |
| சேவல் | காடிபழரசம் |
| பெட்டைக்கோழி | மேற்படி |
| பாத்துகறி | காடிதேன் |
| கவுதாரிகறி | காடிதேன் பழரசம் |
| லவக்குரிவி | வாதுமைநெய் |
| கொக்கு | புளி தயிர் |
| புறாக்கறி | திராக்ஷிபழரசம் |
| கோழிமுட்டை | காடிகுல்குந்து முள்ளங்கி |
| பாத்துமுட்டை | இஞ்சிசிரகம்தனியா முள்ளங்கி |

அம்மை நோயின் பகுதி.

சரீரத்தின் வேகமின்றி வெட்கைகொண்டு தேகமெல்லாம் சூடாய் [illegible] கொப்புளிப்பு அஸ்திகளை துளைத்து (௰௪) விதமாய் [illegible] பாலம்மை-விறகுதிரி-கொள்ளம்மை-கல் [illegible] முத்து-மொழுக்கன்-உப்புதிரி-கரும்பனைசை-வெந்தயம்-பாசிபயர்-விச்சிறப்புல்-சிக்குருவான்-தனை-இவ்விதமாய் பேதமாய்காணும்.

அவ்விதம்காணும் ஆரம்பத்தில் [illegible] மணைக் எண்ணை ப. (௧) மிளகுதான் ப. (௨) சிறு [illegible] (௨) அனாளவி பிச்சம்பழ ரசம் கூட்டி மத்தித்து [illegible] ஆறி விடவாறுக இருந்தால் இந்துப்பு ப. (௨) கூட்டி [illegible] பேதியாகும் வைஷ்ணம்கழிந்து அதிகமாக அம்மைகாணும்.

நஞ்சரப்பன் வேனாகரம்பு நீங்கலாக புன்னகாயளவு அரைத்து வெந்நீரில் குடிக்க பேதியும் வாந்தியுமாய் அம்மைவிசேடமாய் காணுது ஆகாரம் கஞ்சிசெய்து கொடுக்க.

சுரம்-வாதத்தால் மாங்கிஷத்தில் சாரும்-பித்தம் சர்மத்தில்சாரும்-அய்யம் அஸ்தியில் சாரும்-குழந்தைகளுக்கு தாய்முலைபால் பேதத்தால் மாந்தமும்-கெற்பகூட்டால் கெணமும் - புணர்ச்சியால் அக்கரங்களும் - அதிகபோகத்தால் வைகூரியும் - கற்மத்தால் பலவிதவியாதிகளும் உற்பவமாகும்.

நோய்நிர்க்கும் கால அளவு - பிரந்தநாள்முதல் கரப்பன் மாதம் (௩) புணர்ச்சியால் நேரும்வியாதி வருடம் (௧) மாந்த வியாதி வருடம் (௩) மூணுக்குமேல் கணம்வருடம் (௭) ஏழுக்குமேல் அக்கரங்கள் வருடம் (௩௰) வைகூரி எற்க்கும் வரையில் உள்ளது.

தசநாடியிருப்பிடம்-புருவம்-உச்சி-கண்டம்-நெஞ்சு-கைகாலடி-முழங்கை-கணுக்கால்-முழங்கால்-கைகீழ்-ஆ௰.

கைபார்க்கும்பொது கையைசரியாக நீட்டசெய்து நெட்டிவயங்கி பார்க்கவேண்டும்.

வாதம்நாபியின்கீழ் - பித்தம்கண்டத்தின்கீழ்அய்யம்உச்சியின்கீழ்-வலக்கை புருஷருக்கும் - இடக்கை ஸ்ரீகளுக்கும்-காலையில்வாதநாடிகடும் பகல்பித்தம் மாலைசிலேத்மம் இரவுமவ்விவமே பத்துநாழிகையாக மாரிநடக்கும்.

வாதம் சிறுபிள்ளை தூங்கும் தொட்டில் வளைந்து வளைந்து செல்வதுபோலும் மண்டுகம், ஓணான், சர்ப்பம், குருவி, ஆமை நடைபோலும்.

பித்தநாடி அன்னநடை, மயில்நடை, [illegible]ருமாடப் புரா நடை, ஊக்குரிவிபோலும், மெதுதென மீண்டு மீண்டு கெருடனைபோல் பெலத்து எழும்பெனவும்.

சேத்மம் தயங்கிதொத்தி தொத்தாதாகிவே[illegible]ழிநடை கொக்குஉரக்கம்போலும் ஊக்குரிவிபோலும் சிலந்திபூச்சிபோலும் ஸ்ரீபோகம்செய்[illegible]ன் நடிபோலும்.

வாதபித்தநாடி சிருகுரிவிபோல் நடந்து வசிவான [illegible]ல்நடையும் ஒந்திநடைபோல் காட்டும்.

பித்தசேத்மநாடி பாம்புபோலுயர்ந்து தவளைபோல்குதிக்கும்.



அசீரணநாடிமதயானை அசைந்தசைந்துநட்ப்பதுபோல் தீபனத்தின்நாடி சிறுகாக்கைபோல் தூங்கல்.

சன்னிக்கி கிரோடிஅன்னம் ஓட்டைமந்தமாக விரகு கட்டு சுமந்தவைபோலுமாம்,

சுகச்ன்னி குக்கிடம்போல் நடந்து பாம்புபோல்மோதி மூஞ்சுர்போல்நடந்து அமரும்.

வாதசுரம் வாளமீனைபோல்பாய்ந்து சர்ப்பம்போலடங்கி ஆனைபோலார் பரித்துகாணும் வளைந்து முன்பாய்ந்துமீண்டு மயில்தாரா அன்னநடையாகநின்று முன்பாய்ச்சல் பின்பாய்ச்சலாகவும் நடந்தால் (அ) நாளையிர்சிவபுரமேகும்.

பித்தநாடி தேள்கொடிக்கு தெரிப்பதுபோல் தெரித்தால் (௧) மாதத்தில்மரணம்.

பித்தம் தவளைசர்ப்பமதுபோல் [illegible]தானுல் பட்சத்தில்மரணம்.

பித்தநாடி அரவைனதுடிப்பதுபோல் காலையில் வெட்டுநாள் பித்தம் மீண்டு மீண்டு நடந்தால் மீளாது.

உந்திசுழியைப்பற்றி, வாதபித்த அய்யத்தில் அய்யநாடிதன்னில் [illegible]போலும் காந்தக்கனல்போலும் பம்பரம்போல் சுழன்றாலும் மரணம்.

வாதபித்தம் அய்யத்தைசார்ந்து அய்யம் தன்வீடேகிகாணுமாகில் மரணம் சிலேத்மம் வீணையைபோல் துடிக்கில் (௩) நாளையில்.

சிலேச்மம் தவளையைபோல் குதித்து பாம்புபோல்பிரண்டும் மாத்திர்நாடி பின்னியதுபோல் கண்டாலும் மரணம்.

கெர்ப்பநாடி - எரும்பூரல்போலும் ஆமைஅசைவுபோலும் குளிர்ச்சியாக வாதம்நடக்கும்.

பூதநாடி பின்னிதரின் ஓலிவாகநடந்தும் கிடாபாச்சல் செக்குஅருகல் மூஞ்சுர் சிருபந்தெழும்பல் ஏத்தம் அசைவு போலும்.

விகாரநாடி புழுபோல் நிமர்ந்து [illegible]ண்டுஒலிபோலும் காஷ்ட்டத்தில் லெழும்பும் சுவாலைபோலும் கிளியெழும்புதல்போலும் திரைவெர்டுங்குவது போலும் [illegible]நாடிநடக்கும்.

௩, ஆண்டில் மரணத்திர்க்கு - பிங்கலைநாடி ஒருநாள் முழுமையுமாக நடக்கும்.

உ, ஆண்டில் மரணத்திற்கு - வாதநாடி இரண்டுநாள் முழுமையு நடக்கும்.

| | | |
|---|---|---|
| மூன்றுநாள் நடந்தால் | — | ஒருஆண்டில் |
| ச, திங்களில் மரணம் | — | பித்தநாடி ஒருநாள்தயங்கி நடந்தால் |
| ங, திங்களில் மரணம் | — | அசைவிலாமல் உ, நாள் நடக்கில் |
| சயரு, நாளையில் மரணம் | — | மூன்று நாளோடுமோகில் |
| ரு, நாளையில் மரணம் | — | சேத்மநாடி நாள்மூன்று காடிந்தோடில் |
| ய, நாளையில் மரணம் | — | உ, நாள்நடக்கில் |
| யரு, நாளையில் மரணம் | — | ஒருநாள்யோடும் |

பித்தநாடி (ரு) நாளயிரண்டு அரவுயசைவாகவும் இருந் அசைதயலாகவும் உடுக்கை ஒசைபொலும் கண்டால் மரணம்.

## சுரங்களில் அவபத்தியம்.

இத்திப்பு புளிபழம் கசப்புபாக்கு வெத்திலை பால் பரிமளம் குருத்தசலம் சிதலவஸ்த்துகள் ஸ்ரீசங்கம் வாசிப்பு வழிநடை சந்தனைகர்ப்பூரம் பூசல் சிவந்தவஸ்த்திரம் நெய் வெல்லம் எண்ணை மோர் காற்று பெண்பார்வை இவைகளால் மகாதோஷம் சேரும்.

## இன்னவர்க்கு நாடிதெரியாது.

உண்டவர்கை அர்பிக்கனம் பசி அதிகவழிநடை இளைத்தவர் பேய்பிடித்தவர் கோபி ஸ்ரீசங்கமம் பயித்தியர் கஞ்சாகள்ளு அபினி கொண்டோர்க்கும் வாயு சாதனையர்க்கும் கோழி தவளை பாம்பு உண்ணுவர்க்கும் காக்கைவலி குமரகண்டவலி யோர்க்கும் பாஷாணம் தீந்தது விஷம் இன்னவர்க்கும் நாடியினல் வியாதி அரியகூடாமை.

## தன்மந்திரியார் சுரலங்கணம்.

வாதசுரத்திற்கு நாள் (எ) - வென்னீர்குடுக்க - (ச) நாழிகை குன்னீரக.

பித்தசுரத்திர்க்கு நாள் (ரு) - போசனம் குடுக்க - (ய) நாழிகைக்குமேல்.

சேத்ம சுரத்திர்க்கு நாள் (கூ) - கஞ்சிகுடுக்க - (யரு) நாழிகைக்குமேல்.



## வாயு பத்தின்செயல்வகை.

பிராணவாயு மூலாதாரத்திலிருந்து மேலெழுந்து யஉ, அங்குலத்தில் (அ) உள்சென்று (ச) பாழாகும் நீலவர்ணம் தேவதை சந்திரன் பொசிப்பை பிராணமாக்கும் இதைஉச்சரித்தால் பாலனாகயிருக்கலாம்.

அபானன் சுவாதிட்டானம் உர்பத்தியாய் கீழ்நோக்கி மலசலத்தை போக்கும் பச்சைவர்ணம் ஆசனத்தைசுருக்கி வைக்கும் அன்னசாரத்தை சேரவைக்கும் தேவதை வாதருசன்.

வியானன் தோலில்நின்று (எயஉரு) நாடியிலும் சர்வசந்துகளிலும் நின்றுநீட்டல் முடக்கல்செய்து பரிசங்களிந்து அன்னசாரங்களை அங்கங்கே நிரப்பித்து சடத்தை போஷிக்கும் பால்வர்ணம் தேவந்தயோடன்.

உதானன் உதருக்கினையை எழுப்பி அன்னசாரத்தை சமைத்து காமத்தைமூட்டும் மின்னல்வர்ணம் தேவதைஅக்கினி.

சமானன் வாயுகளை மிஞ்சொட்டாமல் அருசுவை அன்னந்தண்ணீர் சமனப்படுத்தி சரீரமெல்லாம் சாரசெய்யும் வர்ணம் புஷ்பராகம் தேவதை ஆதித்தன்.

நாகன் சகலகலைபாடி வைக்கும் கண்விழிப்பிக்கும் பொன்வர்ணம் தெய்வம் அனந்தன் கூர்மன் இமைகொட்டல் கொட்டாவி வாய்மூடும் கண்விழிக்கும் காட்சியாவும் காட்டும். வெளுப்புவர்ணம் தெய்வம் விஷ்ணு.

கிருகரன் மூக்கில் கசிவுண்டாகும் பசி தும்பல் இரும்பல் கருப்புவர்ணம் தேவதைசிவன்.

தேவதத்தன் சோம்பல் முரித்திடுதல் கண் தலையைவலிசெய்தல் சண்டை தர்க்கம் கோபமூண்டாக்கல் படிகவர்ணம் தேவேந்திரன்.

தனஞ்செயன் முடிவில் வீங்கசெய்து கன்னத்தில் சமுத்திரம்போல் துடித்து வாயுவு கள்யாவும் போனபிறகு மூன்றுநாள் தலைவெடித்துபோகும் நீலவர்ணம் தன்மந்திரி.

ஆச்சுதே அறிவொன்றின் விசாரணைபகேளு
அனைத்தையுமே பார்த்திருந்து அகண்டந்தானய்
கோச்சுதே குருவாகி தத்துவங்களாய்
கொடியதீவினையாகி நல்வினையுமாகி

போச்சுதேபெண்ணாய் பிரபஞ்சமாகி புகழுறிய
நிற்குணமாய் நிர்மலமுமாகி
நீச்சுதேசிவமாகி சிவனாகி சொரூபசுடரின்
கதிரொளியாய் சிறந்தவாறே.

### பித்தம் வர்த்திக்குங்காலம்.

ஆவணி, புரட்டாசி, அர்ப்பிசி, கார்த்திகை இந்தமாதங்களில் பொங்கி அதின்பிறகு அடங்கி சரீரத்தில்பரவும்.

இவை கடவுளைபணியாமல் குருவை பணியாமலும் தாயைவஞ்சித்தலும் பிறர்திரவியத்தை அபகரித்தலும் புளி, உப்பு, உறைப்பு அதிகமாய் உண்பதாலும் துக்கம் அதிகவேலை நெருப்பு வெய்யல் கோபம்கொண்டவர்க்கும் நித்திரை நீங்கியதாலும் நாபிக்குமேல் நின்றுபித்தம் (சஉ) விதமாய் உற்பவமாம்.

### பித்தம் (சஉக்கு) விபரம்.

ஆயுரு, ஆமவகம், உமாதம், மந்தம, வன்னி, சேத்மம் சுரோணிதம், விகாரம், விதறணம், உளை, றத்தம், சுழி காசம், அசீரணம். அருசி, எரி அழல், தாடி, விஷ, அதிசாரம் மூல, உதிர, கண்ட, ஓடு, மூடு, நடுக்கு, கபால, சத்து, மந்தம் விலக க்ஷய, திமிர், நாவில், சீத, தாந்த மார்க்க, மருந்தீடு பித்தங்களாகும்.

### பஞ்சபூதமூலி.

தீராதநோயனைத்தும் தீர்வதர்க்குதிரமாக
மூலியொரு வகையோஅய்ந்து
சீராம்பொன்மேனி வெண்துத்தியோடு
திரமான சிவதையோடுநீலிநான்கும்
பேரானமூன்றுவகை பஞ்சகரோகம்
பிரந்தவகையரிந்தந்தமூலிகொண்டு
சீராகவளையில் வந்தபோதுவாங்கி
செப்பதனில்வைத்திடவேசித்திப்போமே
போமென்றவாதநோய் வந்தபேர்க்கு
பொன்மேனிவெண்துத்தி பூடன்றுலே
வாமென்றபித்தாலெழுந்தநோய்க்கு
வகையரிந்துசிவதையினிவாங்கிகொள்ளு
பொமென்றசிலேத்து மத்தால்வந்தநோய்க்கு
வுத்தமனேநிகரில்லா நீலிதன்னை
யாமென்றவளையில் வந்தபோதுவாங்கி
அய்ந்துமாவைத்துதாம் யரிந்துவையே.



### அகஸ்த்தியர் சிந்தாநடம்.

கேளப்பாவூழியென்ற காற்றைசொல்வேன்
கெடியானசாமாளர் தேவியாலே
காளக்கூடம்போல கருத்துயிர்க்கும்
கண்ணுக்குந்தோத்தாறுகடினமெத்த
வாளப்பாகூற்றிட விபரமெல்லாம்
மைந்தகேளிசொல்லுகிறேன் வகையாய்கேளு
பாளப்பாபண்ணிவிடும் புலகமெல்லாம்
பரிசுத்தமாயிருந்தால் பரக்குந்தானே
பரக்குமென்றுசொல்வதுதாகாருக்சென்றால்
பாராளுமன்னவர்க்குஞ்சிவயோகிக்குந்
இரக்கமொன்றுமில்லாதவுத்தர்பேரில்
யென்னசொல்வேன் ஊழியுடவேகந்தாலும்
சிரக்குமென்றுநினையாதேதேகந்தன்னை
சணத்திலேயொழித்துவிடும்தெளிவாய்நில்லு
இரக்கமியுள்ளவர்க்குதேகம்போகும் யென்மகனே
யிதையறிந்துபாருபாரோ
பாருநீபுலத்தியனேஅய்யாகேளு பரிவாகமேலிருந்துயிரங்கும்பாரு
ஊரிலேசெனங்களிடசிரசிர்பட்டார்யுத்தநோர்
ரத்தமெல்லாம்முரிந்துநீராம்
காருநீகக்கலுடன்பேதிகாணும்கண்மூடிநிரக்கு
மூன்னேகளைத்துபோகும்
ஆருநீயானாலும்தேகமெல்லாம
ஆச்சரியம்வியர்வையது பிசின்போலாமே
பிசின்போலேவியர்வையதுபெருகிநிக்கும்
பேருளகண்டமதுவரட்சிகாணும்
கசிந்துருகிதேகமெல்லாம்கடினவேளை
கக்கல்கண்டநாழிகைக்குகடுப்புகாணும்
விசிதமாய்வயருவலிகாணுமப்பா
வெகுசுருக்காய்சன்னியதுபிரவேசிக்கும்
நிசிதமாயிருந்தாக்கால்பிராணன்போகும்
நிமஷத்தில்ஔஷதமதுநினைவாய்போடே

### தெர்க்கவிழ்தம்.

லிங்கம் வீரம் பூரம் சூடன் அபினி சுக்கு மிளகு கஞ்சாவித்து குங்குமப்பூ கஸ்தூரி வகைக்கு வி - நி. (க) செந்தூயாமத்தில் சாமம் (உ) சித்திரமூல் கியாமத்தில் சாமம்

(சு) சாருயத்தில் சாமம் (உ) இவ்விதமாகவரைத்து கொடி சுன்னம் களஞ்சி கூட்டிவரைத்து மிளகளவாக திரட்டி ஒரு மாத்திரை சாராயத்திலிட்டு கொடுக்க.

தாகமானல் நாயுருவி புளியம்பட்டை மருங்கைபட்டை மாவிலிங்கன்பட்டை சித்தாமூலபட்டை சிவனார்வேம்பு எருக்கன்பூ தென்னம்பிஞ்சி இவைகளை (சு) படி சலத்தில் யொட்டொன்ருக கியாழம்வடித்து கொஞ்சமாக கஸ்தூரி இழைத்து கொஞ்சம் கொஞ்சமாக தாகத்திற்க்கு கொடுத்து வரவேண்டும்.

வாந்திபேதி மூன்றுவிதமாக காணும்விபரம்.

கொம்பனென்பது நேத்திரத்தைச் சார்ந்து கருப்பாக பேதியாய் தேகம்பாவும், பிசின்போல் வியர்வை கடுப்ப நாவரட்சி விக்கல் சன்னி களை குளிர்ச்சியாகும் அசாத்தியம் (கூ௰) நாழிகையில் முடிவு.

குட்டர்ப்படுவனென்பது மார்பைசாரும் மஞ்சள்நிறமாய் தாங்காதபேதி காதடைப்பு மூர்ச்சை அடிவயர்வலி சீதமும் உதரமும் காணும் நரம்புகளிழுக்கும் உடல்குளிரும் சந்து விடும் (௩) நாள் சென்றுகொல்லும்.

அக்கரனென்பது உந்தியின் கீழ்சார்ந்து அசிரனபேதி போலும் மிசரமாக வெள்ளையாகவும சேருபோலும் பேதியாகும் இதில்சாதமும் வேளிப்படும் தாகிக்கும் குளிரும் நெஞ்சுசுருக்தல் கைகால் கடுப்பு சரீரம் துர்கந்தம்காட்டும்.

உதிரத்திலுள்ள நீர்பகுதிகள் ஜீரணபாதையின் சளிசவ்வின்வழியாய் தள்ளப்படுதலே இன்னோயாகும் இவ்வியாதியால் மாண்ட பிரேதகுறிகள் விபரம் - தியக்கநிலையைகடந்து சன்னிகோலமான காச்சலையடைந்து மரித்தபிரேதம் குடல்கள் வெண்ணைடைகளுள்ள நீரால் நிரைந்திருக்கும் சளிசவ்வுவீங்கியும் பொட்டு பொட்டாய் சஞ்சயித்துமிருக்கும் வயற்றில் சேஷண மணிகளெல்லாம் பருத்துபுடைத்திருக்கும் நாளங்களிலும் நாடிகளிலும் காரிரத்தம் திணிந்திருக்கும் சுவாசபைகள் சிலரில் துஞ்சயித்தும் சிலரில் மெத்தசுருங்கியுமிருக்கும் ஈரலும் பித்தப்பையும் பித்தநீரால் தேங்கி இருக்கும் கிருக்கங்கள் சஞ்சயித்தும் சலபைசுருங்கி வெறுமையாயுமிருக்கும் இவ்வியாதி வினைப்பகுதியால் வருவதாக இருக்கினும் பலயீனம் சுகதாட்சி குடிவெறி அதிகாங்கை அசுத்தற்காற்று அசுத்தநீர் தாழ்வாகியயிடம் ஈரமானயிடங்களில் வசிப்பதாலும் உண்ணுமாகார பதார்த்தங்கள் பழுத



டைந்து வதிறுலுண்டாகும் ஓர்வித நஞ்சு உற்பத்தியாயிருப்பதை உட்கொள்வதால் நேருமென்று ஐரோப்பியர் செய்த அங்கசோதனை கூவிர் கூறியிருக்கின்றனர். இந்துமத ரிஷிகள் கூறிய சோதிட நூற்களில் செனன கால அமைப்பென்றும் ஆயுள் வேதிய பண்டிதர்கள் சாபளாதேவியெனும் விஷகாற்றினால் தூர்மரணமென்று கண்டிருக்கின்றனர். இதின் ரகசியம் பிராணாதி வாயுக்களை யடைக்கி அந்தகரண சேட்டை நிவர்த்தித்து தனது சொரூபத்தை யடைந்தவற்கு விளங்கும். இக்கொடியபிணி வாராமுன் ஒவ்வொருவரும் நமது செல்வப் பொருளாகிய கடவுளை சதாகாலமும் வணங்கி போற்றுதலே மேன்மையான ஔஷதமாக இருந்து ரக்ஷிக்கப்படும்.

வாத சுரத்திற்கு:—சுக்கு, முள்ளி, கண்டங்கத்திரி, வெட்டிபெருமல்லி, சிறுமல்லி, வகை பலம் வ-கியாழம் வடித்து இதில் அமுதிட்டு கஞ்சிசெய்து ஆகாரம் கொடுக்கவும்.

பித்த சுரத்திற்கு:—வில்லவேர், சித்தாமுட்டிவேர், கியாழத்தில் கஞ்சி செய்து கொடுக்கவும்.

சேத்ம சுரத்திற்கு:—பாதிரி வில்வ இலை, பெருங்குமிழ், கியாழத்தில் கஞ்சிசெய்து கொடுக்கவும்.

கண்டாவிஷ்தம் நாவராக்ஷி தோஷம் சன்னிக்கு.

பொன் வெள்ளி பவழம் முத்து குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி மதுரம் அக்கிருகாரம் அரத்தை கடுக்கொம்பு புரசன் வித்து மாஞ்சில் ஏலம் வால்மிளகு லவுங்கபத்திரி ருத்ராக்ஷம் வில்வவேரு கோஷ்டம் கிராம்பு சுக்கு வகை வி. நி. ஐ இவைகளை கோவை ரசம் முலைப்பால் தேன் இவ்வகளிலரைத்து வைத்துக்கொண்டு தோஷம் நேர்ந்தபோது முலைப்பாலிலிழைத்து நாவில் தீட்டி வரவும்.

மரண நிச்சயக்குறி.

அழிந்திடுங்கைகாலெற்றி கன்னத்தம்மிலடர்ந்து துடிப்புமிலாமல் நீங்கவாறு, மொழிந்திடுங்கண்மூன்று நாள்பத்திலாவி முடிந்தவிடும் மிதுவொழிய செவியிலோசை, யொழிந்திடு நாளேழுகண்ணி லொளிதானோர்கா முயர்ந்தமணமூன்றினாவிரண்டு துணைவேறுறால், கழிந்திடுகில்லுயி லென்று கருதியீசன் கழலிணையைப்போற்றிவினை கழிக்குயோமே.

எந்தஅவிழ்தங்களாகிலும் கொடுக்கும்போது விபூதியை ஓம்கிலியும் ஓம்சிவய மஹோன்மணியே நம வென்று ஸஹஸ்ரநாமம் தியானித்து கொடுக்கவும்.

சன்னி வயிற்றுவலி குன்மம் காச்சல் இவைகளுக்கு கியாழம்- கண்டங்கத்திரி பேய்புடலை பர்பாடகம் பெருமுட்டி விஷ்ணுகாந்தி சித்தாமுட்டி விலாமிச்சு தூதுவளை சிந்தல் கொடி வகைகளஞ்சி உ சுக்கு திப்பிலி ரோகணி வட்டு நேசாவரம் வகைகளஞ்சி க-அ-க ஆ கியாழம் வடித்துக் கொடுக்கவும்.

நடுக்கல் சுரத்திற்கு- கொயினா குன்றி-ரு நவாச்சாரம் குன்றி-எ கூட்டியரைத்து ரு-பாகம் செய்து ரு-வேளை கொடுக்க சீதளபதார்த்தம் நீக்க ய-நாள் பகல் நித்திரை கூடாது

சன்னி சுர சயிக்கு முகால் வசம்பை தட்டி இஞ்சுடன் கஸ்தூரி கூட்டி முடிச்சு கட்டி முகர தீரும்.

சகல எலி கடிக்கு- ஆடுதின்னாப்பாளை வேர் விளாம்பட்டை மஞ்சள் வகை பலம்-வ வெந்நீரிலரைத்து ரு நாள் கொடுப்பதாலும் வ-படி எள்ளெண்ணெயில் சித்திரமூல வேர் உத்தாமணி வேர் பிரகருணை வேர் வகை பலம்-க பசும்பாலிலரைத்து கலக்கி காச்சி வடித்து ரு-காசிடையாக ரு-நாள் கொடுக்க உப்பு புளி நீக்கவும்.

தேள் நட்டுவாகாலிக்கு-பெருங்கிழங்கு வேரை உள்ளுக்குக்கொடுத்து அதே வேரை வெத்திலை ரசத்திலிழைத்து கடிவாயில் தடவ தீரும்.

நல்ல சர்பத்திற்கு- வெள்ளருகு இலையை உள்ளுக்குக் கொடுத்தாலும் எருக்கிலை புகலையும் கசக்கி கண் காது மூக்கில் நசியம் விடுவதாலும் தும்பை ஆளசி மிளகு உப்பு கூட்டி கசக்கி முன்மாதிரி விடுவதாலும் மிளகு உப்பு வெத்திலை கசக்கி விடுவதாலும் விஷம் நீங்கும் தும்பை ரசத்தில் மிளகு தூளிட்டு கொடுக்கவும்.

நேர்வாளப் பருப்பெடுத்து நேர்ந்தசன்னம் வைத்தரைத்து காரும்வெத்திலை பாக்கிலிட்டு கரையமென்று முழுங்கிலா வாரும்வாந்தி பேதியுமாய் மண்டையிலேறும் விஷந்தீரும் காரும் பத்தியம் பாசிபயர் பச்சரிசியும் பால்கூட்டே சுவாதீனமில்லாதிருந்தால் தும்பைரசத்தில் நல்லெண்ணெய் கூட்டி மூக்கில் நசியம் விடதீரும் மேல்படிக்கு மெழுகு-வெள்ளை பாஷாணம் ரசம் கெந்தி சீலை காயம் அரிசி வேப்பன் வித்து வகை விருகனிடை-க நேர்வாளப்பருப்ப விருகனிடை-யச கூட்டி எருக்கன் பாலால் ஒருசாமம் வேப்பெண்ணெயில் ஒருசாம-



மரைத்து மாட்டுக்கொம்பு டப்பியில் வைத்து பயரு பிரமாணம் வெத்திலையில் தடவி கொடுக்க மோருசாதம் மருநாள் உப்பு வருத்து கூட்ட மூன்றுநாள் முத்தெண்ணெய் ஸ்நானம் அவசியமானால் தனியா கியாழம் கொடுக்கவும்.

விருட்சிக விஷமாத்திரை- ருய எட்டிப்பழ சுளையுடன் வெள்ளைபாஷாணம் பலம்-க சிறுதுண்டு களாகாயிட்டு ஆட்டு மூத்திரம் வெள்ளெருக்கன்பால் இரண்டு பலம் விட்டு மூடி சுய-நாள் புதைத்து எடுத்து பாஷாண மாத்திரம் எடுத்து எருக்கன் பாலாலரைத்து மாத்திரைசெய்து சலத்திலிழைத்து கடிவாயில் தடவி அனல் காட்ட விஷம் நீங்கும்.

சிரஸ்நான தைலவகை.

கூர் எள்ளு எண்ணெய்படி-உ அகத்திக்கீரை ரசம்படி-உ கூட்டி ரவியில் வைத்து மறுநாள் கோஷ்டம் பலம்-க அரைத்திட்டு காச்சி வடித்து ஸ்நானம் செய்து வரவும் [illegible] தீரும்.

எள்ளெண்ணெய்பலம்-சய நிலவேளா இலை விளாங்காய் பிரமாணம் வில்வ பழம்-க பசும்பாலிலரைக்கவும் சீரகம் பலம்-க முலைப்பாலிலரைக்கவும் கூட்டி காச்சி வடித்து ஸ்நானம் செய்துவர சாலேசாரம் தீரும்.

தைல கருக்கம்.

வில்வபட்டை பலம்-யஉ உ-படி சலத்தில் எட்டிலொன்றாக கியாழம் வடித்து அறைத்த சந்தனம் பலம்-க எள்ளெண்ணெய்பலம்-யரு காச்சி வடித்து ஸ்நானம் செய்துவர பித்தம் உஷ்ணம் மேகம் இரும்பல் மூலரத்தம் நீங்கி கண் தெரியும்.

வேங்கைநார் தைலம் முன்போல கியாழம் வடித்து விலாமிச்சு பலம்-க எள்ளெண்ணெய் பலம்-யரு கூட்டி. காச்சி வடித்து முழுகிவர மண்டையிடி வீக்கம் பீனிசம் வாதம் நீங்கி காந்தியுண்டாகும்.

வெட்டிவேர் பலம்-ய முன்போல கியாழம் வடித்து எள்ளெண்ணெய் பலம்-யரு பாலிலரைத்த அதிமதுரம் பலம்-க கூட்டி காச்சி வடித்து முழுகிவர பீனிசம் மண்டைகுத்து குட்டசொரி பிசீர்கோர்வை கண்புகைச்சல் கால்கோவு தீரும்.

நாள்சென்ற வேம்பு பட்டை பலம்-உரு ரு-படி சலத்தில் அ-க-ஆ கியாழம் வடித்து எள்ளெண்ணெய்பலம்-ரு

ஏலம் பலம்-௧ யிட்டு காச்சி வடித்து முழுகிவர சூலை குட்ட ரோகம் தழுதளைகடுப்பு செங்கரப்பன் புறைகள் தீரும்.

சித்திரமூலவேர் பட்டை பலம்-ம உ௰-படி சலத்தில் அ-௧-ஆக வடித்து எள்ளெண்ணெய் பலம்-௰௫ பசுவெண்ணெய்பலம்-௨ சீரகம் பலம்-௧ காச்சி வடித்து முழுக ஆனந்த வாயு ஸ்திரீமேகம் சிறுசொறி குட்டம் அரையாப்பு கிரந்தி சூலை புண்விக்கம் தீரும்.

சீரகம் பலம்-உ௰ அ-படி சலத்தில் அ-௧-ஆக வடித்து எள்ளெண்ணெய் பலம்-ஈ கார்கோலவிசி பலம்-௨ யிட்டு காச்சி வடித்து முழுகிவர அகுன்மம் வாந்தி பித்தம் கிறுகிறுப்பு உஷ்ணம் கபாலசூடு நீங்கும்.

கீழாநெல்லி சமூலம் பலம்-௨௰௫ அ-௧-ஆக கியாழம் வடித்து [illegible] ணெய்பலம்-ஈ சர்க்கரைபலம்-௫ காச்சிவடித்து முழுக பித்தம் [illegible] தலைசுத்து வாய்நீரூறல் உஷ்ணம் கைகால் எரிவு நீங்கும்.

கரிச்சாலை ரசம் படி-௧ நெல்லிக்காய் ரசம் படி-காலை விசம் எள்ளெண்ணெய்படி-௧ சாதிக்காபலம்-௧ காச்சி வடித்து முழுகிவர தலைசெவி ரோகம் பித்தம் உஷ்ணம் பீனிசம் தீரும்.

உள்ளுந்து தேய்.

பொன்னாங்காணி வேர் வெட்டிவேர் விலாமிச்சுவேர் அருகன்வேர் சிறுகிளைவேர் வகை பலம்-௧ பசும்பாலிலரைக்கவும் நெய் படி-௨ சாதிக்கா அதிமதுரம் சர்க்கரை பலம்-௫ கூட்டி காச்சி வடித்து காண்டிவிதம் கொள்ள உள்சுரம் உஷ்ணம் மேகம் அச்சரங்கள் தீரும்.

சர்வ பித்தங்களுக்கு தைலம் இளநீர் படி-௧ பசுப்பால் படி-௧ நல்லெண்ணெய் படி-௧மதுரம் குங்குமப்பூ கோஷ்டம் சந்தனம் அகில் ஏலம் லவங்கம் விளாமிச்சு பூண்டு ரோகணி நன்னாரி பசும்பாசி நெய்தல் சடாமாசி நீர்மிட்டான் செண்பகப்பூ கோரைக்கிழங்கு சாதிக்கா புனுகு பச்சைகற்பூரம் வகைக்கு களஞ்சி-௧ இவைகளை இளநீரிலரைத்து கலக்கி காச்சி வடித்து உச்சிமுதல் பாதம்வரையில் தேய்த்து முழுக கண்குளிர்ச்சி காந்தல் தீரும் கக்கல் கண் புகைச்சல் நயனரோகம் வாயூறல் நெஞ்செரிவு தீரும்.



வல்லாரைநெய் ஈ-பலம் வல்லாரையை அ-படி சலத்தில் ஒருபடி கியாழம் வடித்து பசுநெய் படி-௧ தக்கு ஏலம் கடுகுரோகிணி சாதிக்கா தாளிச பத்திரி கோஷ்டம் விலாமிச்சு வெட்டிவேர் சீரகம் சண்பகப்பூ கஸ்தூரிமஞ்சள் இம்பூரல் கச்சோலம் மல்லி தான்றிகாய் தக்கோலம் ரோகணிவகை விருக நிடை-௧ ஆவின்பாலிலரைத்து கூட்டிக்காச்சி கொடுக்க தொந்தமாந்தம் பேர்மாந்தம் மேகம் காசம் இளைப்பு இரும்பல் இரைப்பு மூலகணம் உட்சுரம் தீரும்.

பித்தவெட்டைக்கு எண்ணெய்.

சித்தாமணக்கு எண்ணெய் படி-௧ பழரசம் படி-வ இலந்தை ரசம் படி-வ வெங்காயம் படி-வ கருசீரகம் பலம்-உ குமரிசாதம் பலம்-௧ கூட்டி வடித்து காண்டிவிதம் கொடுக்க பித்தகணசூடு அஸ்தி சுரம் வெட்டைபித்தம் வாட்சி தீரும்.

கண்சூடு [illegible] எண்ணெய் முத்தெண்ணெய் [illegible] குமரிசாதம் தேங்காய் பிரமாணம் வெந்தயம் பலம்-வ வெங்காயம் பலம்-ம சிறுக அரிந்திட்டு காச்சி வடித்து கொடுக்க.

கணமாந்தம் தோஷ எண்ணெய் சித்தாமணக்கு எண்ணெய்படி-௧ குமரி சலம் படி-வ பழரசம்படி-வ வெங்காயரசம் படி-வ பசும்பால் படி-ஹ கோஷ்டம் மதுரம் சண்பகப்பூ ஏலம் கிருஷ்ணவங்கப்பட்டை வகை பலம்-வ வெந்தயம் பலம்-௧ அரைத்திட்டு காச்சி வடித்து காண்டிவிதம் கொடுக்க.

உடன்சீரணம் ஆகார திரவியங்கள் சீரணமாகும் நாழிகை.

| | |
|---|---|
| வெல்லம் தேன் பச்சமுத்து கூடியவை நாழிகை | ௨௰ |
| மாபொரிவுண்டை மினமோதகம் ... | ௨௰ |
| பால் ... ... ... ... | ௰அ |
| நீர் அன்னம் ... ... ... ... | ௰௫ |
| வெண்ணெய்கூடிய அன்னம் ... ... | ௰௫ |
| வெந்நீர் ... ... ... ... | ௰௫ |
| அன்னம் ... ... ... ... | ௰௬ |
| மோர் அன்னம் ... ... ... ... | ௰௨ |
| தேன் சூரண ஸ்தல லேக்கியம் ... ... | ௰௩ |
| தயிரன்னம் ... ... ... ... | |
| கக்கரிகாய் காய்வர்க்கங்கள் ... ... | அ |
| உயர்ந்த பழவர்க்கம் கிழங்குகள் வித்து கனிரசம் | |
| புதளிர் இடித்து பிழிந்த ரசம் அரைத்தமருந்து | |
| செயநீர் சூரணம்தசலம் ... ... ... | ௭.௰ |

நல்ல பதார்த்தம் வடிகஞ்சி இளநீர் சர்க்கரைபானை

| | | |
|---|---|---|
| கம் வருத்தமாசலம் | ... ... ... | ௭ |
| கவிரசம் | ... ... ... ... | ௯ |
| அறுசுவைகூடிய பதார்த்தம் கழுநீர்காடி | ... | ௫ |
| தயிரன்னமீது சலம்குடிக்கல் | ... ... | ௪ |
| ஆரிய சலம் பர்பம் | ... ... ... | ௧௨௭ |
| வியாழம் | ... ... ... ... | ௧௨ |
| சாறுயம் | ... ... ... ... | ௫-௭,௨ |

## ஆகாரம் பிரிவு.

ஒருவேளை உண்ட உணவில் பிரிந்த அன்னரசமான அது அன்றைக்கு ரச தாதுவை நனைத்து ஊறிநின்று ரசதாதுவி லேறும். முன் அதில் நின்றவை ரத்த தாதுவிலேறும். இரண்டாநாள் ரசதாதுவிலிருந்து ரத்த தாதுவிலேறும். ௩-வது நாள் மாமிச தாதுவிலேறும். ௪-வது நாள் மேதோ தாதுவிலேறும். ௫-வது நாள் அஸ்தி தாதுவிலேறும். ௬-வது நாள் மச்சை தாதுவிலேறும். ௭-வது நாள் சுக்குல தாதுவிலேறும். ௮-வது நாள் தேகவலிவு தரும்.

உணவு முதலில் மதுர வஸ்து மத்தியில், புளிப்பு உப்பு உரைப்பு இலை கறி, முடிவில் துவர்ப்பு சம்மந்தமான புளிப்பு தயிர் ஊர்காய்கள் உண்ணவும்.

இன்னவியாதியாளர்க்கு இன்னவை நீக்கவேண்டு மென்பது.

தயிர்-விக்கம் குறைநோய் நேத்திரரோகம் வாதகுன்மம் சோபை சலதோஷம் விஷசுரம் பீனிசம் பிலிகம் கிரந்தி பாண்டு பேதி இவைகளுக்கு நீக்கவேண்டும்.

நெய்-தருணசுரம் சன்னிபாதம் நீர்கோர்வை கப்தோஷம் பெருவயறு பேதிவாதம் வாதகுன்மம்.

தாம்பூலம் மகோதரம் மூர்ச்சை சன்னிபாத தாபசுரம் விஷம் பைத்தியம் க்ஷயம்.

வாத தேகிகளுக்கு பதார்த்தம்-சாம பூசனி கத்திரி வழுதுணங்காய் முருங்கை பிஞ்சி வெள்ளவரை மிதிபாகல் பிஞ்சி காறுகருணை காட்டுகருணை (கிழங்கு) ஆரா மணத்தக்காளி நல்லசனை மேனி முன்னை நல்வேளையானைநெரிஞ்சி முசுமுசுக்கை அப்பக்கோவை மூக்குரட்டை (ரசவகை) வெள்ளைசாரணை பாகல் முருங்கை முள்ளங்கி தூதுளை பொன்னாங்காணி (வற்றல்) சுண்டை பேபுடல் தூதுளை நெல்லி ஆதண்டை மணத்த



காளி வெள்ளவரை முள்ளி காட்டுபிரண்டை (ஊறுகாய்) நார்த்தை தான்றி கடு தேற்றான் பருங்களா பிஞ்சி இவைகளில் உப்பிட்டதாகும்.

பித்ததேகிக்கு பதார்த்தம்- வெள்ளரி கொம்புபாகல் மிதிபாகல் நிலப்புடல் பீர்க்கு அவரை ஆற்றுமுள்ளி சாம பூசனி கத்திரி முருங்கை பருங்களா வாழை வள்ளிகிழங்கு வெங்காயம் வாழை பூவாழைதண்டு (கிழங்குவகை) புளியாரை கோவை முருங்கை வசலை பொன்முசுட்டை அப்புக்கோவை ஒரிதழ் தாமரை பாலை காட்டு முசுமுசுக்கை தூதுளம் கரை வல்லாரை சிறுகீரை மணத்தக்காளி (ரசவகை) கொத்துமல்லி கொடிவசலை வெள்ளைஅகத்தி பிரமிதை வேளைதொரு (வற்றல்) வெண்முள்ளி பேபுடல் தூதுளம் காட்டுசுண்டை கண்டங்கத்திரி பயற்றங்காய் மணத்தக்காளி தாமரை வல்லாரை (ஊறுகாய்) பச்சமிளகு இஞ்சி தூதுளம் கடுகு நெல்லி தான்றி நார்த்தை தமர்த்தை புன்னை ஆல்விளா தேற்றான் மா நன்னாரி நார்த்தங்கா எலிமிச்சன்.

சிலேதம தேகிக்கு கத்திரி பேபுடல் அவரை கொம்பு பாகல் மிதிப்பாகல் [illegible] பகளா கண்டங்கத்திரி அத்தி பலா பயிற்றம்பிஞ்சி பீர்க்குபிஞ்சி கருணைகிழங்கு வாழைதண்டு மேல்படிபூ வள்ளங்கி சாமபூசனி வெங்காயம் வள்ளிகிழங்கு (கிழங்குவகை) காரை அப்புக்கோவை வரிகோவை பசுமுன்னை கருஞ்செம்பை பேபுடல் பிரமி நெருஞ்சி ஆரை புளியாரை மருதகம் நெய்தல் மேனி வல்லாரை பொன்றுவாரை முசுமுசு க்கை முருங்கை பிண்ணாக்கி பண்ணை மணலி முளக்கீரை முசு காராமணி உளுந்து கடலை மலைக்களா வேளை மணத்தக்காளி பொன்னாங்காணி வசளை கற்றாழை நாய்வேளை வேளை (ரசவகை) நெருக்கு சதகுப்பை வெங்காயம் கொத்தமல்லி வேளை சுக்கு அகத்தி குரிஞ்சான் பாகல் தூதுளம் பிரண்டை (வற்றல்) சுண்டை மணத்தக்காளி தூதுளம் பிர ண்டை கோவை முள்ளி பேபுடல் ஆதண்டை அவரை கண் டங்கத்திரி நெல்லி நார்த்தைபிஞ்சி (ஊறுகாய்) மஞ்சள் மிளகு சுண்டை வாழைதண்டு மாபிஞ்சி தூதுளம் மிதிபாகல் பிஞ்சி ஆகும்.

இருதயத்திற்கு வலிவை தருவதாகிய நார்த்தம்பழம் தாமரைப்பூ தாழம்பூ கிராகவம் சிமை அத்திபழம் மாதுளம் பழம் முந்திரிபழம் செம்பு பொன் வெள்ளி இரசவர்க்கி

கல் மூங்கிலுப்பு எலிமிச்சம்பழம் மோக்கு சேபுப்பழம் நெல்லிக்காய் புளி கற்பூரம் கொத்தமல்லி ரோசாபூ கடுக்கா இச்சிலி கிழங்கு கோரைகிழங்கு லவுங்கபட்டை அம்பர் ஏலக்கா அகிர்கட்டை சடாமாசி ஏலம் கஸ்தூரி பிஸ்தாபருப்பு குங்குமப்பூ காவுஜபான் பாலங்கு ஸ்தகதூஸ் பஹமன் சுரும்பகமன் சுபைத் சேதுவார் ஷாகாகுல் மிசரி கஹருபாகத்திருல்வுங்கம் இவைகளில் சிலதை எவ்விதமாகமேனும் தக்கபடி பாகப்படுத்தி உண்டு வருவதில் இருதய பலயீனம் நீங்கி வலிவை தரும்.

ஈரலுக்கு வலிவை கொடுக்கும் பதார்த்தம் திராக்ஷி பழம் ரோசாபூ மாதுளம்பழம் சாதிக்கா இச்சிலிகிழங்கு கோரை கிழங்கு லவுங்கபட்டை ஏலக்கா அகிர்கட்டை காசினி அசாருன் பிஸ்தாபருப்பு ருமஸ்தகி பாதுரஞ்சி போயாஜரிக்ஷிக் மழைதண்ணீர்.

நீர்பைக்கு வலிவை தருவன எலிமிச்சம்பழ ரசம் யிளகு ஜரிக்ஷிக்பழம் காடி ருமஸ்தகி கருசீரகம் இந்துப்பு ஏலக்கா சுத்த ஜலம்.

தேகத்திற்கு தக்கஸ்நானத்திற்கு கூட்டெண்ணெய் விபரம்.

வாததேகிக்கு ஆவின் நெய்-க எள்ளெண்ணெய்-உ முத தெண்ணெய்-ங இந்த எடைகளாகவும்.

பித்ததேகிக்கு எள்ளெண்ணெய்-க முத்தெண்ணெய்-உ நெய்-ங இந்த எடைகளாகவும்.

ஐயதேகிக்கு முத்தெண்ணெய்-க நெய்-உ எள்ளெண்ணெய்-ங இந்த எடைகளாக கூட்டி காச்சி உச்சி செய்து சிரம் தேய்த்து முழுகவேண்டும்.

இக்கூட்டு தைலமாவது முத்து எள் புன்னை புங்கு வேம்பு இவைகளின் எண்ணெய்களை சமபாக கூட்டி காச்சி உபயோகிக்க தனுர்வாதம் மகாவாதம் சன்னிபாதசுரம் கப தோஷங்கள் நிவர்த்தியாகும்.



## கெற்ப நூல்.

முக்கோணவடிவு நிதம்ப உதடுகள் இரண்டுபெரிய உதடு மேல்லாக தோல் மடிப்பு சின்ன உதட்டின் கீழில் சவ்வுமடிப்பு சுமரி யென்பது ஆண்குறிக்குச் சமதுவாரம் உணர்வுள்ளது இது பூரிக்கும்போதுதான் இன்பம் உண்டாகிறது இதற்கடியில் முக்கோண வடிவு மூத்திரத் துவாரம் மேற்கண்டதிற்கடியில் வரும் குழை ஒண்ணரை அங்குல நீளம் மேற்கண்டதிற்கடியில் ஒரு பெரிய துவாரம் அவைதான் நிதம்பம் அதன் நீளம் நாலு அங்குலம் சுற்றளவு ஒரு அங்குலம்; அது விரியத்தக்க குணமுடைத்தது ருதுவாகாத பெண்களுக்கு சவ்வு மூடியிருக்கும் விடப்ப உதடுகள் கீழ் புறத்திற்கு நாவாயென்று பேர் கோழையுள்ள சவ்வு அபானத்திற்கு மேலிருப்பது விரியத்தக்கயிடம் முதல் புருடன் போகித்தவுடன் இந்திரியமானது கெர்ப்பப்பையில் குழைவழியாய் சுரோணித முதல் சென்று அதிலிருந்து பிலோப்பியன் குழைவழியாய் சுரோணித யிருக்கும் நாதாசயத்திலுள் பிரவேசித்து அவ்விடத்தில் சுக்குலமும் சுரோணிதமும் மிசிரமாகி கருவுண்டாகி சில நாள் கழித்து பிலோப்பியன் குழைவழியாய் மறுபடியும் கெற்ப பைக்கு வந்து வளரும் ஒரு சமயம் கெர்ப்ப பைக்கு வராமல் வளர்ந்தால் மிக அபாயம் கெர்ப்பப் பை பேரிக்காய் அத்திகனி வடிவாய் அடி வயற்றின் மத்தியில் முன் புறத்தில் நீர் பையும் பின் புறத்தில் குடல்களும் அபானமும் அடியில் நிதம்பமுமாயிருக்கிறது இரண்டே முக்கால் அங்குல நீளம் இரண்டே கால் அங்குல அகலம் ஒரு அங்குல பெருமனுமாக இதில் கருவளர்ந்த பிறகு ௧௪-அங்குல நீளமும் ௰அ-அங்குல அகலமும் கூ-அங்குல பருமனுமாக இருக்கும் [illegible] சுற்றளவும் ௧௪ ௰அ முதல் உஉ-அங்குல நீளமும் சது, ௫-அங்குல சுற்றளவும் கூ-முதல் கூ-பவுன் நிறைவுள்ள [illegible]காவுமிருக்கிறது கெருல் என்னும் முக்கோண வடிவுள்ள இடத்தில் கரு வளருகிறது கெர்ப்பப்பைக்கு ங-புரையுள்ளது மேலிருக்கும் சதையாயிருக்கிறது உட்புரைக்கு அந்தரவேஷ்டனி, சவ்வு நடுபுரை உதிரம் ஊட்டும் புரை வழவழப்பாய் பசையுள்ள சவ்வு இதுகளுக்கு ஒவ்வொரு பள்ள நரம்பு அநேகமிருக்கிறது ஒவ்வொரு கருவுக்கும் காலே அங்குல நீளமும் காலேயிருக்கிறது. கோழிமுட்டை வடிவாய் கால் அங்குல பருமனுமாக இருக்கிறது. [illegible]அங்குல அகலமும் கால் அங்குல பருமனுமாக இருக்கிறது. வீச[illegible]அங்குல அகலமும் கால் அங்குல வரையில் இரேக பனி[illegible]குட் சலம் அரைபடி முதல் ஒன்னரைபடி வரையில் இரேக [illegible]படி இருக்கும் கருவயற்றிலிருந்து உ-அடி நீளம் அதின் முனை [illegible]சபற்றி இருக்கிறது அந்த நஞ்சு கெர்ப்பப்பையின் ஒரு பக்கத்தில் ஒட்டியிருக்கிறது உதிரத்தை கொடி வழியாய் சிசுவிற்கு ஊட்டுகின்றது கருவுக்கு உ-புரையுண்டு ஒன்றில் பனி நீரும் கருவுமிருக்கிறது இன்னொரு புரை இதை சூழ்ந்து கோழிமுட்டையின் சவ்வை போல் மூடியிருக்கிறது.

## கெற்பக்குறி விவரம்.

தேகத்தளர்வு இரத்த விர்த்தி நாடிபடப்பு காலை கொமட்டல் வாந்தி ஒரு மணிநேரம் வரையில் எச்சல் சுரப்பதும் மூன்று மாத வரையில் காணும். நாலாவது மாதத்தில் அடி வயிர் உருட்சியாய்த்

தோன்றும் அடிவயற்றில் காதை வைத்துக்கேட்டால் சங்கு ஒலி கேழ்க்கும் ௭-வது மாதத்தில் தனங்கள் விம்மி அதில் சுருக்கென்று குத்தும் காம்புகள் கருக்கும் சிறுநீரை ஒரு சட்டியில் பிடித்து வைத்தால் வெளுமையாக உப்பு தோன்றும். மலடாகும் காரணம் யாதெனில் கெர்ப்பப்பை இராமையே அவை வியாதியால் பின்னப்பட்டும்பீஜோற்பியன் குழையில்லாமை அவை வியாதியாலடைப்பட்டுமேயாம். நாதாசயம் இல்லாவிட்டாலும் வியாதியால் பின்னமானாலும் ஒளஷதம் பிரயோசனப்படமாட்டாது கெர்ப்பப்பை யில்லாதவர்களுக்கு ருதுகமும் காணமாட்டாது.

## மேகரோக நீர் வியாதி உயி-ல் வாத கோபத்தால் ச.

ஆச்சியமேகம்.— நாள் ஒன்றிற்கு குருணி விதம் துரிதமாய் நெய் போலிரங்கும் சிலையில் நனைத்து கொளுத்திருலெரியும் தேகம் வாடும் எ-வது நாள் மரணம்.

சுத்தமேகம்.— வேளைக்கு நாழி கோசலம் போல் மேல்படி வாசமாயிரங்கும் காய்ச்சினால் விளக்கெரியும் ௰௫-வது ...

பிராமியம்.— வேளைக்கு நாழி விதம் அடிக்கடி இரங்கும் வெழுப்பான மாமிச நாற்றம் காய்ச்சினால் தேன்போல் ௬-மாதம்.

உங்கிசரவி.— இள ஆட்டின் கொழுப்புபோல் வேளைக்கு குருணி காய்ச்சினால் ஆட்டின் நெய்போல் கருப்பஞ்சாரு நாற்றம் ௬, ௫-நாளையில் கொல்லும் அல்லது ௬-வது மாதத்தில்.

இந்த வியாதிகளில் கை, கால், கண் அழற்றும் நாவரள் பல் நாக்கு அடி தொண்டை கருப்பேரும் அன்னந்தண்ணீர் அதிகம் கொள்ளும் மயக்கம் வாயுபரியும் நாற்றந்தரும்.

## பித்தத்தால் சூ.

அப்பியம்.— ஆனைமத சலம்போல் துரிதமாய் வேளைக்கு நாழி இரங்கும் காய்ச்சினால் உவர்மண்போல் அ-தினங்களில்.

அபிரமியம்.— கற்றாழை சலம்போல் மேல்படி வாசமாய் நாழிகைக்கு இரு நாழி விதமிரங்கி ௬-வது ஆண்டில்.

சம்பீரணம் சுண்ணாம்பு நாற்றமாய் வேளைக்கு நாழியாயிரங்கும் எரும்பெரிக்கும் காய்ச்சினால் சுண்ணாம்பு உ-ஆண்டில்.

மதுமியம்.— பசுமை மஞ்சள் நிரமாய் அடிக்கடி இரங்கி பீசகோசம் கடுப்பு அடிபடியும் சடம் கண் வெளுப்பு ௫-ஆண்டில்.

சாத்தியம்.— தாழை விழுதுபோலும் பளிங்குபோலும் கோசபீசம் கடுத்து கூசி காய்ச்சினால் சீழ்போல் ௫-ஆண்டில்.

ஆவிருகம்.— முயலுதிரம்போல் இருநாழியாக காய்ச்சினால் புலால் நாற்றம் பீச கோசம் கடுக்கும் ௬-மாதத்தில்.



இந்த ஆறின் குணம் சரீரம் வற்றி எரிவு கவுச்சி சீழ் கற்றாழை மீன் தேன்போல் நாரும் நாபி வேக்காடு வாய் நாற்றம் விக்கல் அருசி சுரம் மூர்ச்சை மயக்கம் நாவரள் மனசஞ்சலந்தரும்.

## ஐயத்தால் ௰.

வசா.— வேளைக்கு குருணி மீது நிணம் ஆடைபோல் காய்ச்சினால் நிணம் போல் நாரும் அ-வது ஆண்டில் மரணம்.

உத்தமம்.— வேளைக்கு குருணி தண்ணீர்போலிரங்கும் காய்ச்சினால் வொன்றுமிராது கண்ட பத்து வருடத்தில்.

மச்சம்.— அஸ்திக்குள் சதை உருகிவருதாய் வேளைக்கு மூன்றுழி விதம் ௫-வது ஆண்டில்.

ஆஷேகம்.— இளநீர்போல் வேளைக்கு நாழி விதம் காய்ச்சினால் இளநீர் வாசம் தாகம் சஞ்சலம் யிளைக்கும் எ-வது ஆண்டில்.

சூரி.— வெளுப்பாய் பனங்கள்ளுபோல் நுரையுடன் இரங்கும் காய்ச்சினால் கள் வாசனை எ-வது ஆண்டில்.

சுக்குலம்.— தாளி சார்போல் சுக்குல நிரமாய் சிறுத்திரங்கும் காய்ச்சினால் ஈரல் போல் கட்டும் ௬-வது ஆண்டில்.

உதகம்.— சிக்கி கழுநீர்போல் மிகுதியாயிரங்கும் காய்ச்சினால் சங்கு சுண்ணாம்புபோலாகும் சரீரம் நாரும் க-ஆண்டில்.

பின்றுகி.— தேன்போலிரங்கி அடியில் மெழுகுபோல் படியும் வேளைக்கு குருணி ஈ எரும்பு சூழும் சரீரம் தேன்வாசனை ௫-மாதம்.

லவணம்.— காரமாய் சுண்ணாம்பு நீர்போல் மிகுதியாக இரங்கும் காய்ச்சினால் உப்பு படியும் ௰௫-வது ஆண்டில்.

தயித்தியம்.— இறைச்சிகழுவிய தண்ணீர்போல் காய்ச்சினால் கவுச்சி நீர் தாரை முருக்கி விழும்வேளைக்கு முன்றுழி ௬-ஆண்டில்.

இந்த ௰-ம் பருத்து வெளுத்து தினவுமிக அன்னந்தண்ணீர் தேடும் இரும்பல் கோழை ஆயாசம் அழலையை தரும்.

குருணியென்பது ஆதிகால தேகிகளுக்கு.

## மூத்திர கிருச்சினம்.

வாதம்.— மேகத்தால் நாபியில் மாமிசம் சிக்கி சுக்கிலத்தால் மாமிசம் ரோத்தி வாய்வால் நீர் இரங்கசிக்கும் துர்மாமிசம் கருப்பாய் விழும் அருகல் தேகம் கடுப்பு.

பித்தம்.—சிறுநீர் மஞ்சள் சிவந்தும் கைகாலசத்தி சிறுகலாய் நீரிரங்கும் குதம் அண்டம் லிங்கம் இரைச்சல் வயருப்பும் வாயுலரும் வரட்சிகாணும்.

செட்பம்.- அண்டம் குதம் வலி வற்றும் மேனி வெளுப்பு கண் பச்சை கிருகிருப்பு தியக்கம் கடுப்பு சொரி நீரொரிவு அடிக் கடி கசியும் லிங்கத்தில் கூச்சு.

வெகு மூத்திரம்.- அடிக்கடி வெள்ளை காணும் நீர் தாரையடியில் புரு வெச்சம்போல் விழும் அடிவயற்றில் புழுக்களிருந்து வெள்ளை விழுவது கவ்ச்சடிக்கும் விம்பும்போது உச்சியுயிர் தாக்கும் குதலிங்கம் வேதகாடு இதில் வாதமும் சிலேட்ப மும் தீராது.

(நீர் வியாதி உம்-ல் வாதத்தில் கெந்தன் மாம்பூவாசம் சிலாங் கன் காடி நாற்றம் கைப்புளிப்பு.) (வாத பித்தம் பச்சை வர்னன் தலை நாற்றம் புளி கசப்பு ரத்த வர்னன் உதிர வாசம் யினிப்பு சுத் தன் பால்வாசம் வெண்ணெய் ரசனை எருப்புருக்கி மூளை நாற்றம் சிறு கைப்பு வசம்பு காரம்.) பித்தம் ருசிகன் பாணக்கவாசம் கைப்பு பீத வரனன் உப்பு நாற்றம் உப்புரசனை புஷ்பராசன் மல்லிகைபூவாசம்.) (பித்தவாதம் சந்தண வாசம் மிளகு உறைப்பு சம்பிராசன் கோமூத் திர வாசம்.) (பித்த சிலேத்மம் அக்கி கண்ணும்பு வாசம்.) (சிலேத் மம் தவள வர்னன் பாணக வாசம் சக்கரையினிப்பு அனந்தன் சரமக நாற்றம் சினிருசி ரத்த வர்னன் உதிரவாசம் இனிப்பு சோத்திரன் குங்குமபூ வாசம் கைப்பு ருத்திராங்கன் தாழம்பூவாசம் இனிப்பு.) (வேதவாதம் மதுவேகன் கள்ளு நாற்றம் புளிப்பு.) (சிலேத்ம. இந்திர கண்டி செண்பக பூவாசம் விஷ ரசனை நீலகண்டன் எரும்பெருக்கும் புளிப்பு தர்க்கந்தம் ஆக உய.

ஆகாரபையில் [illegible] அன்னரசம் [illegible] சிறுநீரை குண்டிக்காய்களிழுக்கப்பட்டு நீர் பையில் சேர்ந்து வெளிவருபவை சிறு நீராகும்.

சுபாப நீர்.- மிகுந்த தடிப்பும் அதிகதெளிவு மில்லாதிருக்கும். சீரணப்பக்குவநீர்.- நாரிஞ்சிபழநிரம். சீரண அபக்குவ நீர்.- மழை யில் வைக்கோலிலிரங்கிய நிரம். உட்டின மிகுதி.- மஞ்சள் நிறத்து டன் சிகப்பு கலந்ததாயும். உட்டிணம் தருவது.- காட்டு நார்த்தம் பழ நிரம். அதிக உட்டினம்.- தீயின் நிரம். கொடிய உட்டினம்.- மஞ்சள் குங்குமபூ வரிவரியாய் காட்டும். உதிரம் பொங்கியது.- சிக ப்பும் கருப்பும் கலந்தும். அதிக உதிரம் பொங்கியது.- அதிக சிகப்பு நிரமுள்ள பன்னீர்பூ. மிக அதிக உதிர பொங்கல்.- கருப்பும் அதில் கொஞ்சம் சிகப்பும் கலந்தும். சீதளம்.- கருப்பு நிரமும் கொஞ்சம் பச்சை நிரமும். மிகு சீதளம்.- ஒருவித நீல சாயைகாட்டி வாத ரோகம் தரும். விஷ பக்ஷணம்.- விஷகாலி தீண்டியும் யிடு மருந்து களால் ஆகாய நிரம்போலிரங்கும். வாதபித்த கபங்களை கெடுப்பவை.- நீலநிரம் தடித்திருக்கும். மும்மலங்களை மிக கெடுப்பது.- இலைபச்சை நிரம். காமாலை ரோகமும் பித்தமும்.- குங்குமபூ நிரத்துள் கருமை நிரம். உதிர கெடுதி.- குங்குமபூ நிரத்துள் கருமையும் கொஞ்சம்



சிகப்பும். உதிரத்தழுக்குநீர்.- கருமை நிரத்துள் கொஞ்சம் பச்சை. வாதமும் சிலேத்ம கொதிப்பேரி கெடுதியானது.- கருமை வெண்மை. சீதள கொதிப்பு நீர்.- வெளுப்புடன் சளியை போலும். க்ஷய நீர்.- எறும்பை அதிகமாகஉரிஞ் பாக் கிரமாசக்தடும். செர்ப்பம் நாபி ஆண்குறி துவாரத்தில் விரணமிருந்தாலும் கல்லடைப்பு ரோகம் வரு வதாயிருந்தால் இந்திரியம் போலும். கபத்தையிளக்குநீர்.- சீதளமாய் கனமில்லாமல் தெளிவு. வாதபித்த அய்யகெடுதியால் மூத்திரபை விந்துஸ்தான அற்பல நீர் கனமுள்ளதாய் வீக்கம் கட்டி விஷ சுரம் தரும். குண்டிகாய் அற்பல நீர்.- உதிரமும் சிலேத்மமும் நாளாவட் டத்தில் கொதிப்பேரி கழுகிய மாமிசத்தை கழுகியதுபோல். சீதள தேகிக்கு.- வெள்ளத்துள்ள வாசனை வெள்ளை நிரம். மூத்திரபை நாளபுண் நீர்.- கொடிதான துற்கந்தம். உட்டின ரோகம்.- புளி வாசனை முடிவில் சீதளரோகம். உதிரம் மிகுதியாலுண்டானவை.- இனிப்பு வாசனை. பித்த சுபாப கெடுதி நீர்.- கருமை நிர மானின் வாசம். சரீரபசைகள் கெடுதி நீர்.- மச்சைமேதை கரைந்து புலால் நாற்றமாயிரங்கும். காமாலை ரோக நீரில் மஞ்சள் சிகப்பு கருப்பு நிர நுரை.- வாதபித்த அய்யகெடுதி நீரில் நுரை குறைந்திருக்கும் பாண்டு ரோகம் பேதிகளின் காலத்தில் அதிக நீர் உட்கொண்டாலும் நீர் குறைவாக இரங்கும். வாத பிணிநீர்.- வெள்ளை நீர்உதிர நிரத்தையும் காட்டும். பித்த பிணிநீர்.- பொம்மனமாகபழ நிரம் வீர வொளிவு எண்ணெய் வண்ண நிரம். பித்த காமாலை நீர்.- மஞ்சளாகவும் உதிர நிரமாககாட்டும். கபப்பிணி நீர் வெண்மை நிரத்துடன் நுரையும் குமிழியும் சுத்த சலம்போல் உப்பில்லாமலும் நெய்யைப்போல் பல நிரம் கலந்து காட்டும். தொந்த பிணிநீர்.- பல்வர்னங்களாக காட்டும். மகாரோகம் மேகரோகநீர்.- நீரில் உதிரம் காணப்படும்.

நுரையானது உள்பசைகள் இளகப்படுங்காலத்தில் வாய்வானது சிறு நீரில் கலப்பதால் நுரையுண்டாகும் கெடுதியைத்தரும் ஆகாரங் களை இரவு அதிகம்புசியாமல் காலை இரங்கும் நீரை பளிங்கு பாத்தி ரத்தில் பிடித்து பிடித்த முகூர்த்தத்திற்குள் ஆவி போகாமல் ரவிபட வைத்து எள்ளெண்ணெய் ஒரு துளி நடுவில் விட்டு பார்க்கவேண்டும்.

வாய்வினுலிரங்கியது பாம்பைபோல் நீளும். பித்தத்தினுலிரங் கியது மோதிரம்போல் பரவும். கபத்தினுலிரங்கியது முத்துபோல் நிற்கும். தொந்தமானால் கலந்து காட்டும். சாத்தியம் வட்டமாக வும் மெல்லென பரவுதலும் சங்கு சிங்காதனம் குடை வீணை முல்லை யரும்பு தாமரை மலர்போல் காட்டும்.

அசாத்தியம்.

நீர் வெண்மை அதிக தெளிவு நீர் விட்ட விடத்தில் உப்பு உரை யாமலும் மோரைபோலும் பால் போலும் தடிப்பாகவும் நெய்யைப் போலும் சுரகாலத்தில் நீர் அதிக மிரங்கலும் கருமை நிரமும் மேக வியாதிகளில் அதிக நீரிரங்கலும் மரணத்தை தரும். நீரில் எண்

ணெய் விட்டவுடன் பொங்கி பரவுதலும் சிதறி கடுகுபோல் பரவீனும்
நீரிலழுந்தினும் கலந்து விடினும் சன்னியாகிய திரிதோடத்தில் என்
ணெய் யழுந்தினும் விட்ட எண்ணெய் பாணம் வாள் சூலாயுதம் உல
க்கை குடம் வெற்றிலை எருது சிங்கம் யாளி யானை புலி ஆடு பன்றி
மனிதன் பாம்பு ஆமை பக்ஷி நரி குரங்கு கழுகு தேள்போல் உருவ
ங்கள் காணினும் அசாத்தியம் நீர் குணத்தை ஒரு சமயம் பார்ப்பது
போல் பல தரமும் பார்த்து நிச்சயிக்கவேண்டும்.

நீர் நிறம் இடை நாற்றம் நுரை குறைதலாகிய வைந்தின் பேதங்
களை யறியவேண்டியது. நிறம்.- மஞ்சள் ஆறு, சிவப்பு நாலு, பச்சை
ஐந்து, கருப்பு நாலு, வெண்மை இரண்டு, ஆக நீர் உக.
எஅ-வது பக்கமும் பார்க்கவும்.

## சிறுநீர்.

இரத்தக்குறி.- சிமை அத்திபழ நிறம். பித்தக்குறி.- கொடிமா
துளை பழ நிறம். இரசக்குறி.- வெளுத்த சிகப்பு நிறம். வண்டலின்
குறி.- கருத்த இரத்தம் ஆகாய நிறம். இரத்த சொறிப்பின் குறி.- சிவ
ந்திருக்கும். பித்தமதிகரித்த குறி.- மஞ்சள் நிறம். இரசமதிகரித்த
குறி.- வெளுப்பு நிறம். வண்டலதிகரித்த குறி.- கருப்பு நிறம்.

## ஸ்தூல நிருபணம்.

நேத்திரம் நீர்கள் தங்கிய மூன்றுபடலங்களான சவ்வுகளால் உரு
ப்பட்டிருக்கின்றன முதலாவது வெளி வெண்மையான மினுக்காய்
மின்னும் சவ்வில் பளிங்குநீர் இரண்டாவது நுண்ணிய சிறு ரத்த
குழல்களோடிய சவ்வி நீர் மூன்றாவது உள் விழியின் சவ்வி நீர்
மத்தியில் கரும்புள்ளித்தானா பார்வை நரம்பானது அடி மூளையிலிரு
ந்து கிளம்பி கண்ணின்பின் பகுதிமட்டும் ஓடி கண்ணுக்குள் தரிசிய
மென்னும் சவ்வாக பரந்து விரிந்து இருக்கின்றன. கடைக்கண்பக்க
மாக இருக்கும் கண்ணீர்கோளத்தில் கண்ணீர் பொசிந்து சில துவா
ரங்கள் வழியாய் கண்ணிலே பாந்து எப்பொழுதும் பசமையாகவும்
பளப்பளப்பாகவும் செய்கின்றது இந்த நீர் பறந்து பாயும் வேளையில்
இமைப்பதினால் தூசுகள் நீருடன் அள்ளுண்டு மூக்குக்கடுத்த கண்
மடலினுட் கோளையிலிருக்கும் இரண்டு சிறு குழல்கள் வழியாய் மூக்
கில் செல்கின்றன.

சர்மம் வெளிதோல் உட்தோல் ஆக இரண்டு. வெளிதோலானது
உட்தோலில் நச்சக்காற்று படாமல் காக்கும் காவலாளியாயிருக்கின்
றது. உட்தோலிலுள்ள சிறுரத்த குழல்களால் மேனியெங்கும் காக்கப்
பட்டிருக்கும் ஒரு நீர் வெளித்தோலுக்கும் உட்தோலுக்கும் இடை
யிலே வெளித்தோலுக்கூடாக தோற்றும் ஒரு வன்னம் உண்டு. இந்த
வன்னப்படை காப்பிரியில் கறுப்பாயும் அமெரிகா தேசத்து வேடர்க
ளிலே செப்புவன்னமாகவும் ஐரோப்பியர்களிலே வெண் சிகப்பாக



வுமிருக்கும் பேதங்களாம் உட்தோலில் நாடிகள் நாளங்கள் உடம்
பிலே சிதைந்த அணுக்களை வாங்கி ரத்தத்தில் செலுத்தும் குழல்
களும் வலைபோலபின்னி நிணக்கோளங்களும் சுவேதகோளங்களும்
நரம்புகளுமிருக்கின்றது வெளித்தோலுக்குள் சிறுகுழல்களிருப்பதால்
இவைகள் வழியாய் சருகம்மீது பூசிய தைலங்கள் ரத்தத்தில் கலக்கி
ன்றது வேர்வை துவாரங்கள் கடுகளவாக உட்தோலிலிருந்து வெளி
தோல்வரையில் செல்லும் இக்கோளங்களுள் துவாரங்களிலே யளவு
க்கு மிஞ்சிய கொழுப்பு சேர்ந்தால் அது பருவாய்த்தோன்றும். அதை
பிதுக்க வெளியே மூளைபோல் வரும் கொழுப்பு கோளத்தின் துவார
ங்கள் அடைபட்டுப்போனால் அது கற்லை கட்டியாகும் ஆதலால் குளி
க்கும்போது அழுக்குகள் போகும்படி தேய்த்து குளிக்கவேண்டும்.
தோலின் துவாரங்கள் வழியாய் சில கொழுப்பு நீராவி நச்சுக்காற்று
கள் வெளி கழன்றுவிடும் தோலிலிருக்கும் சிறு சிறு கருவிகள் இரத்
தத்திலிருந்து வேர்வையாய் பிரிகின்றன தோலின் துவாரங்கள் வழி
யாய் நாள் ஒன்றுக்கு சரீரத்திலிருந்து கழியும் கஞ்சலமான பதார்த்த
ங்கள் ஒன்றே முக்கால்முதல் இரண்டரை ருத்தல் நிறையளவுக்கு
கழிகின்றது இவ்விதம் கழிவது கழியாவிட்டால் அதுகள் ரத்தத்தி
லேகலந்து உடம்பிலே சேர்ந்து சுவாசபை இரப்பை முதலிய உருப்பு
களினது தொழில்களை குழப்புகின்றபடியால் இரும்பல் கபாலநோய்
அசீரணம் மாந்தம் கழிச்சல் முதலியவை நேரும் சுவாசபை வியாதி
யால் அல்லது பலவீனமானால் அதிக அழற்சி தாவி இரும்பல் இளைப்
பும் வாதநோய் அல்லது இளைப்பு யுடையவனுக்கு உடம்பு குளுமை
தாவில் மேற்கண்ட வியாதிவரும் தோலிலுள்ள சுவேத சிறு கருவிக
ளில் அனல் உண்டு அது மிகுந்தாலும் குறைந்தாலும் வேர்வையுண்
டாகாது கோளங்களினால் உதிரத்திலேயிருந்து பிரியும் அந்தக்த நீர்
வேற்றுமையாக இருக்கும் உமிழ் நீர் கோளங்களிலிருந்து உமிழ்
நீரும் ஈரலிலிருந்து பித்த நீரையும் குண்டிக்காயிலிருந்து சிறு நீரை
யும் பிரிக்கின்றது வெளிகொள்ளும் சாரய வஸ்துகள் சரீரத்தில் கழி
யவேண்டிய வஸ்துக்களை கழிக்காமல் குழம்பி அவைகளை உடம்பிலே
யடக்கம் பண்ணி மூளையின் பதார்த்தத்தை கெடுப்பதினால் குடியர்
நெடுவயதிராமல் சீக்கிரம் மரிப்பர்.

ஆகாரம் ச-விதப்படும் உண்ணல் தின்றல் நக்கல் பருதல் இவை
யாகிய ஆகாரம் வாயினுள் பற்களினும் உமிள்நீராலும் மென்று தொ
ண்டைக்குட் இளகலாக சென்று இரைக்குழல் சவ்வு பேசிகளால்
தள்ளுண்டு பிதுங்கி இரப்பைக்குள் சேர்ந்து இரப்பையின் சவ்வுகள்
இருக்கி நசுக்குவதால் பிதுங்கி உருண்டு புரண்டு வரும்போது இரப்
பையின் உட்பக்கங்களிலிருந்து புளிப்புள்ள ஒரு விசேஷ நீருண்
டாய் அதினுடனே கலந்து அன்ன பாகுயெனும் மிருதுவும் வெண்
மைநிறமான ........ணியாகின்றது அவை துணைகுக்கிகுட் சென்று
பித்த நீருடனேயும் ஒருவகை நீருகிய கணைய நீருடனேயும் கலந்து
பேதப்பட்டு பால் நிறமான அன்னரசமாகவும் மலமாகவும் பிரிகின்றது
அன்னரசமும் மலமும் ஆகாரபையை சேர்ந்த ஒரு அடி நீளமுள்ள
முன்கண்ட துணைகுக்கியிலின்று சிறு குடலுட்குட் சென்று அதினு

டைய நழுவல் தொழுவலாக உ௫-அடி நீள சிறு குடல் வழியாக
போகயில் வெண்ணீராகிய அன்ன ரசத்தை சிறு குடலுக்கூடாக
செல்லும் இரசாயணிகளாகிய சிறு குழல்கள் உறிஞ்சிக்கொண்டு
அடிகழுத்தின் முன்பக்கத்திலுள்ள இடக்காரையென்பின் பின்னாக
இருக்கும் ஒருநாளத்துட்சென்று அதின் வழியாய் ரத்தாசயத்துக்
கூடாக சுவாசப்பைக்குட்சென்று அங்கே சுவாசிக்கும் காற்றுப்பட்டு
ரத்தமாகின்றது. மலமானது பெருங்குடலுட் குட்பட்டு மலமாக
இரங்கிவிடும் பெருங்குடலானது ரு-அடி நீளமாய் சிறுங்குடல் அடி
வாரமிருந்து மேலாக ஒரு சுற்று வந்து ஆசனத்தை சார்ந்திருக்கின்
றன வயற்றுக்குடலுக்கு முன்னே ஒரு முந்தாணியைப்போல் ௪-மடிப்
பாய் மூடிய கொழுப்புள்ள சவ்வு மூடியிருக்கிறது.

சரீரத்திலுள்ள பதார்த்தங்கள் நீராயிருந்தாலும் சரி வைரமாயிரு
ந்தாலும் சரி அவைகளிலுள்ள அணுக்களின் உயிர் நீங்கின காலத்தில்
அவைகளை உறிஞ்சிக்கொண்டு பழுதுபட்டவைகளை விசர்க்க வழி
யாய் தள்ளிவிடும் ஆகாரத்திலிருந்து பிரிந்த பாலைப்போல வெளுத்த
அன்னரசத்தை இரசமெனச்சொல்வது சிலேத்மநீர் இது ஈரலிற்செ
ன்று அதிலுள்ள சிறு நீரை குண்டிக்காய்கள் இழுக்கப்பட்ட பின்பு
மற்றவை ஈரலிர் சிவந்து தெளிந்து மேல் நுரைத்த கன்மிஷத்தை
பித்தமென்றும் அடியிற்படிந்த கன்மிஷத்தை வண்டலென்றும் நடு
வில் தெளிந்த செந்நீரை இரத்தமென்றும் சொல்லப்படும்,

பிரதானமான இரத்தமே சிவந்து இனிப்பாய் வாய்வின் குணமா
கிய சூடும் கொழுமையுங்கொண்டு ஈரலிற்றங்கியிருந்து தேகத்திற்
சென்று எலும்பு நரம்பு தசை முதலிய தாதுக்களை போஷித்து உயி
ருக்குறுதிதந்து விந்தூரச்செய்யும் பித்தம் மஞ்சள் நிறமாய் கசந்து
வெடிப்பு மணம்பொருந்தி தேயுவின் குணமாகிய சூடும் வறட்சி
யும் கொண்டு பித்து பையிற்றங்கி இரைப்பையாகிய சுவாசபை போ
ஷித்து உதிரத்தை யிளக்கி நரம்பு தாரைகளிலேற்றி மலத்தையுமிள
க்கி வெளிபடுத்தியும் ஆகாரப்பையில் ஆகாரத்தை பசனம் செய்யும்
இரசம் வெண்மையாய் சுவையற்று வெள்ளாவி மணத்துடன் அப்பு
வின் குணமாகிய குளிர்ச்சியும் ஈரத்தையும் கொண்டு நுரைக்குக்கியிற்
றங்கியிருந்து உதிரத்தையும் உண்டாக்கி தலைமூளையை வளர்த்து
குடலிலும் ஆகாரபையிலும் ஆமமாகிய மதசலமாகும் வண்டல் கரு,
த்து புளிப்பையும் துவர்ப்பையும் பொருந்தி பிரிதிவியின் குணமா
கிய குளிர்ச்சியும் வரட்சியும் கொண்டு மண்ணீரலிற்றங்கியிருந்து
சிலிர்ப்பையுண்டாக்கும்.

## ஆன்மா மூன்றுயென்பது
## அறிவின்மயமாயிருப்பவர்களுக்கு விளங்கும்.

சீவான்மாயிருதயமாகிய இரத்தாசயத்திலிருந்து தேகவியக்கம்
பகுத்தறிவு கோபம் பயம் சந்தோஷம் யூகைதரும் தேக ஆன்மா ஈரலி
டமாக இருந்து தேகத்தை போஷிக்கும் அறிவான்மா தலை மூளையிலி



ருந்து சிந்தித்தல் கேழ்குதல் உள்ளுணர்வை பார்க்குதல் வெளியுணர்
வையும் அசைவையு முண்டாக்கும் ஆன்மாவென்பது உதிரத்தின்
றெழும் ஆவியாகின்றது இந்தஆவியாலே தேகச்சூடாயிருக்கிறது
இரத்தத்திற்கும் தேகத்திற்கும் சமமந்தத்தையுண்டாக்குவது சிலேத்ம
நீராகவிருக்கிறது இந்த சிலேத்ம நீர் அதிகப்படுவதில் உதிரத்தின்
கொழுமை சூடு குறைந்துதேகம் குளிர்ந்து நசிக்கும்.

இரைப்பையில் பக்குவமடைந்த அன்னரசத்தை ஈரல்யிழுத்து
உதிரமாக்கி புழை நரம்புகளின் வழியாய் சரீரம் யாவுமேற்றி சரீர
த்தை போஷிக்கும் இரத்தசயமாகிய இருதயம் துடிநரம்பு வழியாக
ஆன்ம சக்தியை யுடலெங்கும் பரவச்செய்து உயிர்ப்பிக்கும் தலை
மூளை வெண்ணரம்பு வழியாக யுணர்வை யுடலெங்கும் நிறைத்து
யியக்கும் குண்டிகாய்கள் ஈரலிர் உதிரத்தோடு கலந்து நின்ற சிறு
நீரை பிரிப்பதுமன்றி சுக்கில நரம்புகள் வழியாய் உதிரத்தின் சத்து
களை யிழுத்து பீசத்தில்சேர்த்து விந்துவாக வெளுக்கச்செய்யும்.

நாசியின் இருபாரிசமும் சுவாசம் மீண்டும் உள் புகுவதற்கு கார
ணம் சவ்வாகிய விதானம் சுருங்கி பதிவதினாலும் பழுக்கள் உயர்வதி
னாலும் உஸ்வாசநிஸ்வாசமாகிறதாயிருக்கிறது இவைக்காதாரம் மூளை
நரம்புகள் சுவாசக்குழலானது ஆகாரம் செல்லும் குழலுக்கு முன்புற
முள்ளது மூக்கிலிருந்து உண்ணாவின் புறமா யிரங்கி சுவாசக்குழல்
இருபக்கமுள்ள சுவாசபைகளை சுவாசக்குழல் வாய்வு கண்ணறைகள்
சிறுபேசிகளுமாய்யிவ்விடங்களுள் சென்று மீளும் சுவாசபை அடிகழு
த்திலிருந்து பழுக்கள் பரியந்தம் விசாலித்து சவ்வினால் மூடப்பட்டு
வெண் சிகப்பாய் கரும்புள்ளியோடும் சுவாசக்கண்ணறைகளும் சுவா
சக்குழல்களும் அனேக சிரு ரத்தகுழல்களும் நரம்புகளுமாயிருக்கின்
றது வாய்வு கண்ணறையில் நிறைந்த வாயுவிலே சரீரத்தில் நெருப்பா
க்கும் வாய்வாகிய அமிலிதமும் சுவாசத்தில் ௪-ல் மூன்று பங்குள்ள
உரு சதகவாய்வும்கூடி யிருக்கும் இதில் அமிலிதம் சீவனைக்காக்கும்
உருசதகம் அமிலத்துடன் சேர்வதால்தேக சுகம் செய்யும் சுவாசம்
வெளிவிடுகையில் நச்சு காற்றாகிய இருந்தாமிலமும் நீர் றணுக்களும்
வெளியே கழன்றுவிடும் இரத்தசாயத்திலிருந்து சுவாசபைக்கு போ
கும் காரீ ரத்தம் சுவாசம்படநல்ல கருநிற மாரி சிகப்பு ரத்தமாகும் இர
த்தத்தில் கரிய வாய்வு கலந்திருப்பதால் கருமை நிறமாச்சுது உடம்
பிலே பழுதுபட்ட அணுக்களின் பிரதான கூறாகிய கரியும் நெருப்
பாக்கும் அமிலித வாய்வும் கூடுவதால் இரத்தகுழல்களில் இருந்தாமி
லமாகிய கரிய நச்சு காற்று உண்டாகிறது காரி ரத்தத்தில் சலித
மெனும் வாய்வு கலந்திருப்பதால் அது நெருப்பாக்கும் அமிலத்துடன்
கூடில் தண்ணீராகும் உண்ணும் உணவில் கசியும் சலத்திலுள்ள
2-வாய்வில் யொருவாய்வாகிய சலிதமும் உதிரத்தில் சேருகின்றது
அவைகள் தேகத்தைவிட்டு வேர்வைபிச்சநீர் சிறுநீராக கழிகின்றது.

தேகத்தில் அனலுண்டாகும் காரணம் நாம் கொள்ளும் ஆகாரத்
தில் கரியாகிய இறுசையும் சலத்திலுள்ள 2-பூதியத்தில் ஒரு பூதிய

மாகிய சலிதமும் அடங்கியிருக்கின்றது இருந்தாமில நீராவியும உண்டாவதினால் காங்கை பிரக்கின்றது யிருத்தையும் சலிதமும் உடம்பிலுள்ள அன்னரசத்திலும் சிதைந்தபோன அணுக்களிலும் இவைகள் சேர்ந்திருக்கின்றது நாம் சுவாசம் வாங்கும் வாய்விலிருந்து நாவில் ஒருபங்காகியது நெருப்பாக்கும் வாய்வானது சுவாச பையிலிருக்கும் சிறுகுழலுக்குள் அங்குள்ள ரத்தத்தோடு கலந்து அதோடு ரத்தாசயத்துள் நுழைந்து மறுபடி உடம்பின் பல பகுதிகளையும் போவதிக்கும் சிறுரத்த குழலுக்குள் புகுகின்றது இந்த குழல்களிலேபாயும் செவ்விரத்தத்திலுள்ள நெருப்பு வாய்வானது ம்சாயணி குழல்கள் வழியாய் ரத்தத்தில்வந்தடைந்த ரியாகிய யிருத்தையுடனும் ஒரு பூதம் சலத்தினுடனும் கூடுவதினால் நச்சுகாற்றாகிய இருந்தாயிலமும் நீராவியும்வுண்டாகிறது அவை அணுவணுவாய் யொன்றுடனொன்று கூடுவதால் காங்கை பிரக்கின்றது அங்கே உண்டாகும் நச்சுக்காற்றும் நீராவியும் ரத்தத்தின் வழியாய் சுவாச பையில் வந்து நாம்விடும் சுவாசத்துடனே கூடி வெளிகழிகின்றது இம்மாறுதல் சரீரமெங்குமுள்ள சிறுகுழல்களிலே [illegible]பவிக்கிறபடியால் எப்பகுதியிலும் காங்கை உண்டாகின்றது.

மனிதன் நச்சுக்காற்றை சுவாசிப்பானேயானால் தலைமூளை சுபாவம் தப்பும் காரி ரத்தம் சிரசிற்குச்சென்று தலைநோயுண்டாகும்.

பிரிதிவ் மண்ணீரல் கருப்பு அப்பு குண்டிக்கா தேயு ஈரல் வாய்வு நுரைஈரல் ஆகாயம் தாமரங்கா என்னும் ரத்தாசயம் ஈரலின் தன்மையை சிறுநீராலும் இருதயத்தின் தன்மையை கைநாடி துடிப்பினாலும் மூளையின் தன்மையை யியக்கத்தாலும் இரப்பையின் தன்மையை மலத்தினாலும் உள்கருவிகள் சுப அசுப தன்மையை யறியக் கூடும்.

மிடறு என்பது.— அடி நாவிலிருந்து இரை குழல் மட்டுக்கும் உள்ள மூன்று அங்குல நீள சவ்வு தூர் குழல்.

இரை குழல்.— சுவாசக்குழலுக்குப்பின்னாக ஒரு அடி நீள தடித்த சவ்வுக்குழல்.

இரைப்பை.— நெஞ்சுக்கு கீழ் மேல் வயற்றில் வடம்புக்கு நடு இடப் பக்கமாக இரு சுவாச பைக்கும் அடுத்தாப்போல் மெல்லிய கூடடவுமுள்ளதாகயிருக்கும்.

ஆகாரப்பைக்கு கீழாக கணையமிருக்கும் ஆகாரப்பைக்கும் கணையத்திற்கும் பக்கமாக இட பக்கம் விலா கீழ் முன் பாகமாக வட்டித்த சப்பையாய் கருமை நிறமாய் மண்ணீரலிருக்கும் முளை காய்ச்சலினால் பருக்கும் சாச்ச கட்டியென்பார். ரத்தாசயத்தில் அதிக வெப்பங்கொண்டால் உதிரம் வேறுயிடம் சேரயிடமிராமையால் மண்ணீரலில்சேரும் இதில் வண்டலும் வந்து சேரும்.

கணையமென்பது இரைப்பையின் கீழாக நீண்ட நொடிந்திய சப்



பையான ஓர் வுருப்பு இதிலிருக்கு கணைய நீரானது துணைகுக்கிகுள் செல்லுகின்றது.

இரத்தாசயம் விரிய குவியத்தக்கது இதை இருதயமென்றும் இல் என்ற தாமரங்காயானது நடு நெஞ்சிலே இடப்பக்கமாக சுவாச பையிரண்டுக்கும் இடையே இரட்டை உருப்பாய் கொட்டைபாக்கு வடிவமாய் அவரவரது கைமூஷ்டியளவாய் இதை உரத்த சவ்வுபை மூடியிருக்கும் இரத்தாசயத்தின் வல யிடப்பக்கங்களாகிய வொவ்வொன்றிலும் இரண்டு அறைகளுண்டு அவைகளில் மேலறை சிரவமென்றும் கீழறை சடாரமென்றும்பேர்.

இரத்தாசயத்தின் ஓர் அறையாகிய வல சடாரத்திலிருந்து ரத்தம் கொண்டுபோவது பப்புச நாடியும் இடசடாரத்திலிருந்து கொண்டுபோவது கண்டரை பெருநாடியுமாம் இது எல்லா நாடிக்கும் ஆதாரமாய் அனேகநாடி கிளைகளாய் செவ்விரத்தத்தை எட்டும் செலுத்துகின்றது அந்த ரத்தத்தை ரத்தாசயத்தின் மேலறைக்கு திரும்பி கொண்டு வந்து சேர்க்கும் இரத்தாசயத்தில் உண்டாகும் உதிரத்தில் [illegible] இந்த இரண்டு நாடியில் ஒரு நாடி வலமில் ஒரு பாகம் மூளைக்கு இந்த இரண்டு நாடியில் ஒரு நாடி காரி சுவாச பைக்கும் ஒன்று யிட சுவாசபைக்கும் போகும் இந்தநாடி காரி ரத்தத்தை சுவாச பைகளுக்கு கொண்டுபோய் அங்கே தன்னுடனே சந்திக்கும் நாளங்களுடனே கூடுவதினால் சுவாசபையின் ரத்தம் சுற்றோட்டம் நிறைவேறும்.

ரத்தாசயத்தின் அறைக்கங்களில் ஓர் கருவியாகிய பேசி விரிய குவியத்தக்கது சிரவங்கள் விரியும்பொழுது சடாரங்கள் உடம் சுருங்கும் அதினால் ரத்தம் சரீரமெல்லாம் ஓடி பரவி திரும்பி ரத்தாசயத்தில் வந்து சேரும்.

ரத்தம் ரத்தாசயத்தின் வல சிரவத்திலிருந்து வல சடாரத்துட் சென்று அதிலிருந்து கருமையான அசுத்த ரத்தம் சுவாச பை நாடிக்குள் செல்ல அதின் கிளைகள் ரத்தத்தை இட சுவாச பைக்கும் வல சுவாசபைக்கும் கொண்டுபோகும் பின்பு ரத்தமானது சுவாசபையிலுள்ள சிறுகுழல்களிலே செவ்விரத்தமாகி அவைகளின் வழியாய் சுவாசபை நாளங்களிலே சேர்ந்து ரத்தாசயத்திலுள்ள இடச்சடாரத்துக்குள் விழுகின்றது பின்பு இந்த சுத்தரத்தம் இடச்சடாரத்துட்சென்று அது சுருங்கி பிதுங்கி விடுவதினால் கண்டரை நாடிகளுக்குள்ளே தள்ளுண்டு அதின் கிளைகள் வழியாய் சரீரத்தில் உறுப்பு அடங்கலும் செல்லுகின்றது.

இரத்தாசயமானது சுவாசபை இரண்டுக்கும் இடையே இரட்டை வுருப்பு காதை போலிருப்பது மேலறை சிரவம் கீழறை சடாரம் கீழ்பாதி விரியும் கீழ்பாதி குவியும்போது மேற்பாதி குவியும்போது கீழ்பாதி விரியும் இந்த உருப்பின் பெருமையையும் இதில் நடக்கும் மேற்பாதி விரியும் இந்த உருப்பின் காரியமோ இந்த நிலையை ஒவ்வொரு புத்திமான்களும் செய்கையும் அதுகாரணமோ அல்லது ஏக மனதாய் தீட விசாரிப்பதும் அன்றியில்

தவத்தையடைந்த மேலோர்களையும் அடுத்து அவர்கள் கிருபையாலு முணரவேண்டுவதவசியம். ஈரல் வல பக்கத்தின் விலாவுக்குள் வல சுவாசபையின் கீழ் ஒரு அடி நீள குருக்களவும் ௬-ராத்தல் நிறையுள்ள கருஞ்சிவப்பான ஒரு வுருப்பு இதிலிருந்து பித்த நீர், பிறக்கின்றது இதின் கீழ் பக்கத்தில் மஞ்சள் நிறமான கசப்புள்ள பித்த நீருள்ள சிறுபை யிருக்கின்றது இந்நீர் ஆகார பைக்கு நரம்பு வழியாக செல்லு கின்றது.

உதிரத்திலிருந்து கழியும் நீர்கள் தோலின் வழியாக நிதம் வேர் வைகழியாவிட்டால் சுரம் ஜல தோஷம் வரும் ஈரலிலிருந்து பித்த நீர் தடை பட்டால் அஜீரணமுண்டாகும்.

## துண்டிக்காய்.

இடுப்பு முள்ளந்தண்டுக்கு அருகே இருபக்கத்திலும் மூத்திரம் பொசியும் உருப்பான குண்டிகாயிருப்பது ௪;௫-அங்குல நீளம் ௨-உரு ப்பு இவைகள் ரத்தத்திலிருந்து அமுரியை பிரித்துவிடுவதினால் ரத்த த்தை சுத்தியாக்குகின்றது ஒவ்வொரு குண்டிக்காயிலுமிருந்து ஒவ் வொரு குழலாய் இரண்டு குழல்கள் கிளம்பி அடி வயற்றிற்குள்ளே நடுவே கிடக்கும் சல பையை நாடி ஓடி அதனுடனே பொருந்துகின் றது அக்குழல்களின் வழியாய் அமுரி சொட்டு சொட்டாயிறங்கி சல பை நிரப்புகின்றது இந்த நீர் வெளிவிடாமல் தடைப்பட்டால் சரீர உருப்பில் குழம்பி வியாதிதரும்.

இரத்தம் சூட்டுடன் கொழுமையாகவும் பித்தம் சூட்டுடன் வரட் சியாகவும் சிலேத்மநீர் குளிர்ச்சியுடன் ஈரத்தையும் வண்டல் குளிர்சி யுடன் வரட்சியுமாய் சுபாபகுணமாக விருக்கிறது.

இதுவன்றி வாயுவென்னும் காற்றென்பது மேற்கண்ட நான் கு சத்துகளினின்றெழுகின்ற குளிர்ந்த ஆவியாகயிருக்கின்றது இதுவிசேடம் வண்டலினின்றும் ரசத்தினின்றுமே யுண்டாகின்றது இவைகள் உயர்வு குறைவினால் சகல ரோகங்களும் வரும் அவைகள் ஔஷதத்தினாலன்றி தீருவாம்.

ஔஷதங்கள் பக்குவா சயத்திற் சேர்ந்து ஆகாரத்தைபோல சுத்த ரசமானபிறகு பின்பு அசுபாபசத்துகளுடன் சேர்ந்து அவற் றின் வேறுபாடுகளை நீக்கி சுகுணம் செய்யும்.

தேயு சூடு வாயு கொழுமை அப்பு குளிர்சி பிரிதிவ் வரட்சி. சூட்டின் விகற்பமே வரட்சி குளிர்சி விகற்பமே கொழுமை. தேயு சூட்டுடன் வரட்சியாகவும் வாயு சூட்டுடன் கொழுமையாகவும். அப்பு குளிர்சியுடன் ஈரத்தையும் பிரிதிவ் குளிர்ச்சியுடன் வரட்சியும் பெற்றிருக்கின்றது.

உதிரம்.—௬-விதம் கெடுட் அதிகரித்தல் தடித்தல் நீர்த்தல் அழுகல் நீர்த்தகொழுமை தடித்தகொழுமை.



பித்தம்.—நீர்த்தகொழுமையோடு கலந்த வண்டல் தடித்தகொழுமை யோடு கலந்த வண்டல் இவைகளுடன் கலத்தலாகிய இவ் வைந்தும் பித்தத்தின் வேறுபாடாம்.

இரசம்.—இரத்தத்துடன் கலந்து இனிப்படைதல் வண்டலுடன் கல ந்த பித்தத்துடன் கலந்த கரிப்படைதல் சூட்டுடன் கலந்து புளித்தல் வண்டலுடன் கலந்து துவர்த்தல் குளிர்ச்சியுடன் கலந்து சுவை நீங்கலாகிய இந்த ஐந்தும் இரசத்தின் வேறு பாடாம்.

வண்டல்.—அதிகப்படல் ரத்தத்தோடு கலத்தல் பித்தத்தோடு கலத் தல் [illegible] இந்த ஐந்தும் வண்டலின் வேறுபாடு இவ்வேறு பாட்டால் அநேக வியாதிவருவனவாம்.

## செவி.

சிறிய சவ்வு நடு வெளிகாது நடுகாதுக்கும் இடையே வட்டித்த போகின்றது காதிலிருந்து பின் தொண்டை அருத்க்கு ஒரு குழல் கேள்வி இதில் காற்று போக்கு வருத்துண்டு இது தடையானால் காதுக்குள்ளு குளையும் கேள்வி நரம்பு மூளையிலிருந்து கிளம்பி உட் கின்றது. ளையும் சவ்வுக்குள்ளிருக்கும் நீரிலே படர்ந்து நீக்கு

## மூளை.

சரியான மனிதனுக்கு மூளை மூன்று ராத்தல் இரண்டு பகுதி யுடையது. மூளையை சுற்றி ௩-சவ்வு மூடப்பட்டது. மேல் சவ்வு மெத்த தடிப்பு பலமுள்ளது. மத்திய சவ்வு மெல்லிய வருவெளி யுள்ளது. உட்சவ்வு மகா நுண்ணிய கூந்தலான இரத்த குழல்களால் பின்னப்பட்டு வலையாகயிருக்கும்.

மூளை துணைமூளை முகுளம் மூன்று ... கிருப்பது மூளை க்கு பின்புறம் துணைமூளை அதின் கீழ் முகுளமாகயிருக்கும் முகுள மானது முள்ளந்தண்டுக்கொடியின் தலையான குமிழாக குமிழ் வடிவ முள்ளயிடத்திருந்து முள்ளந்தண்டுக்கொடி வெண்மை அதற்கு நெடு கவுளையாக ஒரு சவ்வு சுற்றியிருக்கின்றது இக்கொடி கைவிரல்பெரு மன் மூளையிலிருந்து முள்ளந்தண்டு நெடுகவோடுகின்றது.

மூளையிலும் முள்ளந்தண்டு கொடியிலுமிருந்து சிறிய வெள்ளை நரம்பு நாடிகள் சரீர எப்பகுதியிலும் கூந்தல் விட்டு போகின்றது அடி மூளையிலிருந்து சிர நரம்புகள் வல மிடமாய் கிளம்பி ௰௨-சோடு களாய் அதில் ஒன்று தவிர மற்றவைகள் முகத்தின் பல பகுதிகளாய் காது கண் நாக்கு மூக்கு இவைகளுக்கு செல்கின்றது. ஐயிக்கிய நர ம்பென்பது முள்ளந்தண்டை யணைந்தும் இடுப்பிலும் இரப்பைக்கு பின்னாகவும் அடி கழுத்திலுமிருந்து பிரதானமிடம் யாவும் சென்று முள்ளந்தண்டில் பிறந்த நரம்புகளுடன் கலக்கின்றன சரீர சோதனை இல்லாதவர்கள் ஆசனத்திலும் தொப்புளுள்ளிருந்தும் நரம்புகள் உற் பவமென்று அறியாமையாய் புகல்வர் சாதனவான்களறிவர்.

மூளையிலுள்ள உணர் நரம்புகள் வழியாய் அறியும். ஓசையால் உணர்ச்சி நரம்பு சேதபடலாகாது குமிளமானது சுரணையுள்ளது அதை குத்தின உடனே வலிப்பு இசிவு உண்டாகும் அதிலே மோசமுண்டு மோசமுண்டானால் மூச்சு தடைப்படும்.

மூளைக்கும் இரைப்பைக்கும் அயிக்கிய நரம்பு சம்பந்தமுண்டாவதால் இந்த நரம்புபேத படுமாகில் தலைநோய் பைத்தியம் வாந்தி உண்டாக்கும் பேய் பிடித்ததாக சொல்வது இந்த நரம்பு கெடுங்காலத்தில் மனமும் மூளையும் அயிக்கிய நரம்பில் சம்பந்தம்.

நாசி வாசனையறிவது. மூக்கினுள் சளி சவ்வினால் மூடப்பட்ட நொய்ய நாற்ற நரம்பு கூந்தலைமூடி சேதமடையாமல் காற்றும் ஒன்றாமொகர காற்றுடன்வாசனை அணுக்களை நாசிக்குள்ளிருக்கும் சவ்விலே மூடப்பட்ட நாற்றநரம்புவழியாய் மூளைக்குசென்று மணமறிகின்றது.

மூக்கில்பொடி போடுவதினால் மூக்கினுள்ளிருக்கும் நரம்பு கூந்தலை மழுக்கி சவ்வையும் தடிக்கசெய்து சுவாசம் சாதாரணமாய் நடவாமல் வாய்வழி சுவாசம் வரும்.

சலதோஷம் உண்டாவதற்கு காரணம்.— மூக்கின் உள்ளறை சளி கோர்த்த சவ்வில் சுரப்பு கொண்டு கொதி கொண்டால் நீர் சொரியும் ஒரு சுவாசபையில் நாள கிளைகளில் சளியானால் சலதோஷமாகும்.

மயக்க புட்டியை முகர சுவாச பையிலுள்ள சோஷணை குழல்கள் வழியாய் மூளைக்கு சென்று அறிவை மயக்குகின்றது. ஆகார பையில் ஆகாரமில்லாதபோதும் சாணி குழல்கள் உடம்பிலுள்ள கொழுப்பை உறிஞ்சி நாளங்களுட் கக்கி விடுவதால் சீவன் காக்கப்படுகின்றது இதனால் தேகவாட்டமும் நோயும்வரும். பனிகால இரவில் தோலில்படும் குளிரினாலே வியர்வை உள்ளடங்கியதால் கழிச்சல் வயருளை உண்டாகும் சுவாசம் ஒன்றுக்கு வைக நாடி மூன்றுதபா அடிக்கும்.

## ஸ்தூல பஞ்சீகரணம்.

பிபி-அஸ்தி பிஅ-மாம்ஷம் பிதே-சருமம் பிவா-நரம்பு பிஆ-ரோமம். அஅ-மூத்திரம் அபி-வாய்நீர் ஆதே-வியர்வை அவா-உதிரம் அஆ-சுக்கிலம். தேதே-பசி தேபி-தாகம் தேஅ-நித்திரை தேவா-ஆலிசியம் தேஆ-சங்கம். வாவா-ஓடல் வாபி-நடத்தல் வாஅ-யிருத்தல் வாதே-சத்தல் வாஆ-கிடத்தல். ஆஆ-மோகம் ஆபி-ஆசை ஆஅ-துவேஷம் ஆதே-பயம் ஆவா-வெட்கம்.

## சூக்ஷ்ம பஞ்சீகரணம்.

ஆஆ-அறிவுகண் வாபி-பிராணன்யிருதயம் தேஆ-காது அஆ-சத்தம் பிஆ-வாக்கு. ஆவா-மனம்கண்டம் வாஅ-அபானகுதம் தேவா-சரீரம் அவா-பரிசம் பிவா-பாதம். அதே-புத்தி வாதே-உதானன் கண்டம்



தேதே-கண் ஆதே-பார்வை பிதே-பாணி. ஆஅ-சித்தம் நாபி வாவு வியானன் சர்வசரீரி தேஅ-சிங்குவை அஅ-ரசம் பிபி-குதம். ஆபி-ஆங்காரம் யிருதயம் வாஆ-சமானன்நாபி தேபி-வாசனை மூக்கு அபி-கெந்தம் பிஅ-குய்யம்.

பூதங்கள் ஒன்றோடொன்று சேர்தலினால் மேற்கண்ட பிரிவுகளாயின.

பிர்மா விஷ்ணு ருத்திரர் நெருப்பு சலம் காற்றாய் ஆக்கல் காக்க லழித்தற்கு வாதபித்த சிலேத்மமாய் இடைகலை பின்கலை சுழிமுனையாக மாறிமாறி தேகத்தில் நடந்து பல பிணிகளை உற்பவம் செய்து அக்கினியை குறைத்து சலமதிகப்பட்டு வாய்வும் ஆகாயத்திலயமாகின்றமையால் பிரேதமாய் பிரிதிவில் அடங்குமாதலால் நோயணுகாமல் காப்பவர்கள்தான் அறிவுடையோர்-மூப்பு யிடைகலை பின்கலை சுழிமுனை யாமென்றும் யிதனை வசப்படுத்தி அளவிறந்த வினைகளை நீக்கக்கூடுமென்றும் இதற்காதாரம் அனுக்கிரஹ கிருபை பெறவேண்டுமென்றும் மேலோர்வாக்கியம் இடை பின்சுழியி னிடத்து அமுர்தம் கானல் வாயும் பொருந்தியிருப்பதால் இதின்பேதத்தால் மூப்பிணியுண்டாவதை நாமனைவருமறிந்தேயிருக்கின்றோம்.

பூதம்-௫ பொறி-௫ புலன்-௫ கன்மேந்திரியம்-௫ தொழில்-௫ அவத்தை-௫ கோசம்-௫ சயம்-௫ ஆதாரம்-௬ ராகம்-௮ நாடி-௰ வாயு-௰ கரணம்-௪ மண்டலம்-௩ தோஷம்-௩ மலம்-௩ ஏஷணை-௩ குணம்-௩ வினை-௨ அறிவு-௧ ஆகத் தத்துவம்-௯௰௬.

நாயகி நாயகனிருவர் இவர்கள் மனம் வாய்வில் கூடி சித்தம் ஆகாயத்தில் சேர்ந்து பொங்கி ஆங்காரம்தீ அதிகமாய் இச்சையுண்டாகும் இந்த ஐந்திற்கும் வலிவு யாதெனில் மனதோடு வியானனும் நாதத்தில் அபானனும் விந்துவில் சமானனும் சித்தத்தில் வியானுமாக கூடி ஆங்காரம் கெற்சிப்போடு கலந்து நிற்கும் உதானன் இந்த பத்தும் மனதும் கூடி மேவிகலந்து விந்துவந்து விழும்போது மவுன பரவசமாகும் இருவருக்குமிவ்விதமேயாம் ஆணுடையமனம் வேறாகவும் பெண்ணின்மனது வேறாகவுமிருந்து புணர்வதில் கருதரியாது முறையான ஆண்பெண்ணும் மௌனமுற்றால் மோசமில்லை கருவங்கே தரிக்கும் பாரு என்று மேலோர் வாக்கியம். அன்றியும் ஸ்திரீகளுக்கு கெர்ப்ப சூலைகளாகிய ஆறுவித வியாதிகளுண்டு அதற்கு தக்க ஔஷதங்களால் நிவர்த்தி செய்வதில் கருதரிக்கும் விந்தானது நாதத் [illegible]க்குள் அநேக கிருமிகளாய் முடிவில் ஓர்கிருமியாய் பிறகு சரீர உறுப்புகள் நாளாவட்டத்தில் ரூபமாய் மானிட சிசுவாய் உதிக்குமென்று நமது [illegible] பண்டிதர்கள் கண்டிருக்கின்றனர் விந்துநாதமும் கூடி சப்த நிறங்களாய் ரூபப்படுமென்றும் இதினால் தான் ஏழு வாரங்களானதாகவும் சோதிடநூலிற் கண்டிருக்கின்றன.

## பிரசவ குறிப்பு.

கருப்பையானது தட்டையாய் நீளத்தில்-௩ அகலத்தில்-௨ அங்குலமுள்ளதாக கீழ்புறத்தில் ஒரு துவாரமுண்டு பையை பிளந்து பார்க்க

உள்ளே முக்கோண ரூபமுடைய பள்ளம் இதுதான் கருக்குழி யென்று பெயர் இதில் சூதகம் சுரக்கின்றது.

சவ்வு சதைகளால் கரு பையின் கழுத்தைச் சுற்றி நீண்டிருக்கிற குழலுக்கு சிசுபாதை என்று பெயர் ௫-௬ அங்குல நீளமுள்ளது வெளியிலகப்படுகிற அதின் வாயானது சுருங்கி சந்திரபிறையைபோலொற்ற ஒரு சவ்வு மூடிக்கொண்டிருக்கும் அதிலெப்போதும் ஒரு துவாரமுண்டு அந்த துவாரத்தின்வழியாகதான் சூதகம் வெளியாகும் முதல் புருடன் சேர்கையில் அந்த சவ்வு மறைந்துவிடும் கருபையின் பக்கத்துக்கொன்றாய் இலுப்ப கொட்டையைப்போல் இரண்டு உருப்புகளுண்டு இது சினைப்பைகளென்று பெயர் அச்சினை பைகளில் முட்டைகளுண்டு ஒவ்வொன்றும்பெருத்து மாதந்தோறும் கரு பையில் வந்து விழும் அச்சமயத்தில் கரு குழியில் ரத்தம் சுரந்து வெளிப்படுகின்றன ரத்தம் சுரோணிதமென்றும் முட்டையை நாதமென்றும் கூறியிருக்கின்றது சிசு ஆரம்பத்தில் முட்டையானது கரு குழியில் வந்திறங்கி ௨௱௮௰ அல்லது ௩௱ நாளைக்குள் படிபடியாய் பெருத்து சிசு வெளியாகியபின் பந்துபோல் சுருங்கி சிறிதாகிவிடும்.

இரண்டு சவ்வுகளால் எற்பட்ட பனிகுடமென்னும் ஒரு பையிலிருக்கிற சலத்தில் சிசு மிதந்துக்கொண்டிருக்கும் குழந்தைக்கு அடிமுதலிய அபாயம் வராமல் காக்க சலத்தை உண்டுசெய்த கடவுள் கிருபையை பெரியோர்கள் உணர்வர் இந்த கெங்கை உற்பவத்தை சாகா கல்வியையுற்ற சித்தர்களாகிய திரிகாலகியானிகளறிவர்.

ரத்த நரம்புகளால் எற்பட்ட ஒரு கொடியானது சிசுவின் நாபியிலிருந்துண்டாகி நஞ்சின் மத்தியில் ஒட்டிக்கொண்டிருக்கிறது நஞ்சானது கரு பையில் வொட்டியிருக்கிறது கரு பையிலிருக்கும் ரத்தம் நஞ்சிலிறங்கி பிரகு தொப்புள் கொடிவழியாய் பிண்டத்துக்குட் சென்று போஷிக்கும் அந்த ரத்தம் கெட்டுப்போனபிரகு மருபடியும் அந்த கொடிவழியாகவே நஞ்சக்கேறி பிரகு கரு பைக்கு சென்று தாயின் ரத்தத்தோடு கலந்து பரிசுத்தமாகும்.

உத்தம பிரசவம் சிசு சிரசு உதயமாகி ௬௰ நாழிகைக்குள் தாயிக்கும் பிள்ளைக்கும் யாதொரு வருத்தமில்லாமலிருக்கும் கையாவது காலாவது உதயமாவதற்கு அக்கிரம பிரசவமாகும் கரு பையானது சுருங்கி அதற்குள்ளிருப்பவைகளை வெளிப்படுத்துகிறபோது மவிதனையாய் இடுப்புவலிகாணும் கரு பையின் வாயை ஆப்பு அடிப்பதுபோல விசாலமாக்கி வைக்கிற சல பைக்கு பனிகுடமென்று பெயர் பிரசவ நோய் ஆரம்பித்து கரு பையின் வாய் பூரணமாய் விரிகிறவரையில் முதல்பாதமென்றும் அது முதல் பிள்ளை வெளிப்படும்வரையில் இரண்டாம்பாதமென்றும் நஞ்சானது கரு பை விட்டு பிரிந்து வெளிபடுகிறவரையில் மூன்றாம்பாதமென்றும் இடுப்புவலி விட்டு விட்டு பின்பு அதிக நேரமாயிருக்கும்போது சீக்கிரத்தில் பிரசவதாகும் கரு பை சுருங்க ஆரம்பிப்பதே பிரசவ ஆரம்பமாம் இடுப்பு வலியில் மல



பந்த முதலியவைகளால் காண்பதுமுண்டு அதற்கு சிலேத்ம நீரு வெளிபடாது கரு பையில் முகமும் விரியாது நிசநோவில் முதல் முதுகில் கண்டு இடுப்பை சுற்றிக்கொண்டு வயற்றுக்குவந்து தொடைகளுக்கு இறங்கிவிடும் கிரமமாய் நின்று நின்று காணும் கரு பையின் வாயை விசாலப்படுத்தி பனிகுடம் பிதுங்கசெய்யும் நோய் கண்டிருக்கும்போது அங்குலி பரிக்ஷை செய்யில் கரு பையின் வாய் மெதுவில் விரிகிற சாடையும் பனிகுடமிறங்குகிற விதமும் புலப்படும் ஸ்திரீ முதல்பாதத்தில் அங்குமிங்கு திரிவாள் எக்கமுற்று பயந்து அழுவாள் பிரசவ நோய் இடுப்பைகத்திரிப்பதுபோலுமிருக்கும் அப்போது இளைச்சலோடு தருவாள் உ-பாதம் வேதனையோடு முக்கல் காணும் சமீபத்திலிருக்கிற எதையாவது பிடித்து முக்குவாள் நோயும் அடிக்கடி வரும் சிசு ஜனித்தபிறகு கொஞ்சம் நேரம் நோவில்லாமலிருக்கும் மருபடியும் கரு பை சுருங்க ஆரம்பிக்கும்போது இடுப்புவலி உண்டாகும் அதில் நஞ்சு பிரிந்துவிடும் சிலவேளை குழந்தையோடு நஞ்சும் எககாலத்தில் பிறப்பதுமுண்டு சுமார் ௰ நிமிஷத்தில் நஞ்சு வெளிப்படுவது வழக்கம் முதல் ஸ்திரீயை இடதுபக்கமாய் படுக்கவைத்து முழங்கால்களை மடக்கி வயத்தோடு அணைத்துக்கொள்ள செய்து நோய் காணுகிறபோது வலதுகை முன்விரலுக்கு எண்ணைதடவி சிசு வருகிற வழியாக செலுத்தி துழவிபார்க்க கரு பை முகமகப்படும் பலவந்தமாய் பனிகுடத்தை யுடைக்கலாகாது பிரசவத்திற்குமுன் பசியாகயிருந்தால் ஆகாரம் கொடுக்கலாம் மலபந்தமாக இருந்தால் முத்தெண்ணெய் சாப்பிடலாம் சிறுநீர் அடைத்திருந்தால் சிலாகைவிட்டு எடுத்துவிடவும் பனிகுடமுடைந்து சிரசு இறங்கி உ-பாதத்தில் ஸ்திரீயை நிருவாணம் செய்து யிடதுபக்கமாய் படுக்கவைத்து முழங்காலை மடக்கி வயிறோடு அணைத்துக்கொள்ளசெய்து தலையணையை கால்களுக்கு மத்தியில் வைத்து ஒரு துணியை கட்டி தொங்கவிட்டு அதை நோய்வரும்போது பிடித்துக்கொள்ளச் சொல்லவும் தாகமிருந்தால் கஞ்சி தண்ணீர் தாராளமாய் கொடுக்கலாம் கரு பையின் முகம் விரிந்து பனிகுடம் உடையாமல் அதனால் பிரசவம் தாமசப்பட்டால் அதை விரலால் குத்திவிடவும் சிசுவின் தலைபக்கத்தை முட்டி தள்ளும்போது மருத்துவச்சி தனது இடது உள்ளங்கையை அந்த இடத்தின் மேல் வைத்து மெதுவாய் தாங்கிக்கொண்டு இருந்து சிரசு வெளியானவுடனே அந்த சிரசை வலது கையால் எந்திக்கொண்டு சிசுவு தானாய் திரும்பும்படி செய்யவேண்டியது கழுத்தை சோதனை செய்து கொடி சுற்றிக்கொண்டிருந்தால் அதை தளர்த்தி அந்த தோள்மீது தள்ளிவிடவேண்டியது சிரசு வெளிகண்டவுடனே வேறொருத்தி வயிற்றின்மேல் கையைவைத்து கரு பையை விடாமல் அழுத்தி பிடித்துக்கொண்டு கீழுக்கு மெதுவாய் தள்ளிக்கொண்டு போகவேண்டியது அப்படி செய்தால் நஞ்சு சீக்கிரம் வெளிக்கு வந்துவிடும் சிரசு வெளிகண்ட பிரகு கொஞ்ச நேரம் நோயில்லாமலிருந்து பிரகு ஆரம்பித்து சரீரத்தை வெளிப்படுத்துவது வழக்கம் ஒருவேளை நோயும் காணாமல் சிசுவும் இறந்துபோய் ஸ்திரியிலிருந்தால் ஒருத்தியை [illegible] அசையாமல் பிடித்துக்கொள்ளச்செய்து மருத்துவச்சி குழந்தையின் தலையை பிடித்துக்கொண்டு ஒருவிரலை அக்குளில் செலு

த்தி மெதுவாய் இழுத்து சிரத்தை வெளிப்படுத்திவிடவும் சீக்கிரமா யிழுத்துவிட்டால் கருப்பை சுருங்காமல் ரத்தம் அதிகமாய் காணும் ஒருவேளை நஞ்சு-௧-௨ மணி நேரம்வரையில் விழாதிருந்தால் அதற்கு கொடியை பிடித்து இழுக்கலாகாது இடதுகை விரலுக்கு கொடியை சுற்றிக்கொண்டு கொஞ்சம் பிறுவாய் இழுத்து பிடித்து வலதுகை விரல்களை குவித்து கொடிவழிபாய் யோனிக்குள் செலுத்தி கருப்பைக்குள் கொண்டுபோய் தடவி நஞ்சொட்டிக்கொண்டிருக்கிற இடத்தை தெரிந்துக்கொண்டு விரல்களால் கருப்பைக்கு காயம்படாமல் நஞ்சை பற்றி பேர்த்து சுருட்டி யிடை சூழ்ந்து மத்தியமாய் வெளிக்கெடுத்துவிட வேண்டியது. உள்ளே துண்டுகளை வைக்கலாகாது சிசு தொப்புள் கொடி 2-அங்குலம் விட்டு சன்னகயற்றால் சுத்தி இறுகமுடிபோட்டு வேண்டியது பிறகு அந்தமுடிக்கு ௨-௱-அங்குலம் வொற்றிவேறொருகயற்றால் முடிபோட்டு அவ்விரண்டு கட்டுகளுக்கு மத்தியில் கத்திரிகோலால் துண்டித்துவிடவேண்டியது. துடிப்பு இருக்கும்போது அறுக்கலாகாது நஞ்சு விழுந்தபிறகு துணியை மடித்து அடிவயற்றின்மேல் வைத்து கருப்பை சுருங்கும்படி வேறொரு துணியால் இழுத்து கட்டிவிட்டு அல்குல்மேல் ஒரு துண்டு துணியை போட்டுவைக்க வேண்டியது. பிரசவமான உடனே தாகமிருந்தால் வெந்நீர்கொடுக்கவும் ஆயாசமிருந்தால் கொஞ்சம் சாராயம் கொடுக்கலாம் பிரசவமான பிறகு கருப்பையிலிருக்கிற அழுக்குவிழ வேதனை காணும் அது எடுத்தால் நன்மை பிரசவமாகி அதன வேதனையாகயிருந்தால் வயற்றுக்கு வெந்நீர் ஒத்தடமும் கொஞ்சம் அபினியும்கொடுக்கவும் மலபந்தமாகயிருந்தால் எண்ணெய் கொடுக்கவும் நஞ்சு கொடி வெளிகண்ட உடனே அல்குல்மேல் உலர்ந்த துணியை போட்டு வைத்து இடைக்கிடை வேருமாற்றவும் களைதீர்ந்து கொஞ்சநேரம் சென்றபிறகு அல்குலை வெந்நீர்விட்டு சுத்தப்படுத்திவிடவும் தினந்திற்கு ௨-தடவை சுத்திக்கவும் பிரசவித்தபிறகு உட்காரவைப்பதில் அடியிரங்குவதுடன் ரத்தப்பிரவாகமும் உண்டாகும் ஆகாரம் கொடாமல் வைப்பது அரியாமை ௩-௪-நாள்வரையில் தே, நீர், பால், கஞ்சி, ரொட்டி, பிசுகோத், பொரி அரிசி, கஞ்சி, எதாகிலும் ஒன்று கொடுப்பது நலம் வெயினும் கொடுக்கலாம் நாள்பட இருத்தாமல் சீக்கிரத்தில் ஸ்நானம் செய்வித்து ஊட்டமான ஆகாரம் கொடுக்க சௌக்கியமுண்டாகும் கெர்ப்ப ஆரம்பத்தில் வாந்தி நேர்வது ஆகாரம் அதிகமாய் கொள்ள உதிரபெருக்கு அதிகமாய் சிசுவிற்கு சென்று பேதப்படுமென்று கடவுள் வாந்தியை புண்டுசெய்வித்திருக்கிறார்.

சிசுவின் வாயிலுள் கோழையை விரலால் எடுத்தும் மேலிருக்கும் குழகுழப்பு போகும்படி வெந்நீர் விட்டு கழுவி தொப்புள் கொடியில் ரத்தம் ஒழுகாமல் வயற்றை துண்டு துணியால் சுற்றிவிடவேண்டியது கொடிவழி ரத்தம் கசிந்திருந்தால் வேறொரு முடியிடவும் அழாமலும் சுவாசம் விடாமலும் கொடியில் துடிப்பு யில்லாமலும் மூர்ச்சை கண்டிருந்தால் வாயையும் மூக்கையும் சுத்தி செய்து சிசுவை வெந்நீரிலும் குளிர்ந்த சலத்திலும் மாரி மாரி அமைத்து கம்பளி துணியால் உடம்பையும் கால் கைகளையும் சூடுபிறக்க தேய்க்கவும் சிசு



புட்டத்தின் மேல் விரல்களால் சுருக்கு தாக்கும்படி அடித்து அழ செய்யவும் குழந்தை உதித்த ௰௨-௰௮-மணி நேரம் சென்று தாய் முலைப்பால் கொடுக்காவிட்டால் பால் கட்டிவிடும் பால் சுரக்காவிட்டால் வெந்நீர் ஒத்தனம் கொடுத்து ஆமணக்கிலையை வதக்கி கட்ட பால் சுரக்கும் விசேட விபரம் வேண்டுபவர்கள் இவைகளை குறித்த பெரு நூல்களை பார்க்கவும்.

முற்றிற்று.

## பிழைதிருத்தல்.

| பக்கம். | வரியில். | இருக்கவேண்டியவை. | பிழையாக யிருப்பது. |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible]பலம். | ப. |
| | | [illegible]விரா[illegible]கிடை | [illegible]ஷி. |
| 3 | 19 | [illegible]க்கு. | [illegible]கு. |
| 12 | 1 | ஈ[illegible]க்கா வி[illegible]ருப்பு. | ஈ[illegible]ாபவிருப்பு. |
| 12 | 11 | காட்டுபெ[illegible] | காட்டு[illegible]ணை |
| 12 | 14 | கடிகை. | கடுகு. |
| 17 | 13 | பிரிதிதின[illegible]ம். | பிரிதிகொடுக்க. |
| 18 | 29 | கக. ரூபா | (கக) ரூபா. |
| 21 | 16 | மாலை. | ம்ரலை. |
| 23 | 26 | புட்டியி[illegible]ல. | புட்யில். |
| 24 | 9 | ரூத்தல். | ரூ. |
| 25 | 10 | டோலாந்திரம். | ரோலாந்திரம். |
| 25 | 34 | லுணர்த்தி. | லுணேர்த்தி. |
| 27 | 27 | துவளை. | துவுளை. |
| 29 | 32 | அரிப்பு. | அரிப்பி. |
| 31 | 20 | செய்து. | செயது. |
| 31 | 1 | கிழங்கு. | கிழங்ரு. |
| 34 | 31 | தேரப்பா. | தோபபா. |
| 33 | 30 | லவைத்த. | லவைத்தும். |
| 34 | 16 | மீதிட்டுவ்ர. | மீ[illegible]வர. |
| 35 | 2 | பாக்ம். | பாக[illegible] ள்ளெண்ணை. |
| 35 | 36 | காகாதென. | காகு[illegible]மன |
| 35 | 10 | புடைகள். | புட[illegible]ககள். |
| 36 | 6 | ரசம்விட்டு. | நீளை[illegible]சம்விட்டு. |
| 38 | 7 | செங்கத்தாள். | செங்கததாள். |
| 40 | 8 | உணர்த்தி. | உணரத்தி. |
| 41 | 11 | வைத்துவிசர. | வைதடுதுவிகிற. |
| 41 | 33 | நடையதடையிரா. | டையுமபாழ்படுமே. |
| 44 | 1 | கருப்பு. | கரும்பு. |
| 44 | 1 | கோழிகுப். | கோழிக்குப். |
| 46 | 20 | நெல்வியிலை. | நெல்யிலை. |
| 51 | 30 | உடு. பலம். | உடு. ப. |
| 53 | 17 | [illegible]பாருமல். | பெருமல். |
| 5[illegible] | 30 | சிலேர்ப்பனம். | இலேர்ப்பன. |
| 53 | 36 | இத்துமி. | துகித்துமி. |
| 54 | 21 | [illegible]ள்விலவம்பிசின். | முள்ளி. |

# பிழை திருத்தல்.

| பக்கம். | வரியில். | இருக்கவேண்டியவை. | பிழையாக விருப்பது. |
|---|---|---|---|
| | | பலம். | ப. |
| | | விராகநிடை. | விநி. |
| 59 | 35 | எற. நாழிகையில். | |
| 60 | 4 | முத்தி. | |
| 60 | 10 | [illegible] | முறிந்து. |
| 60 | 35 | சிருநாக[illegible] | அப்பிலாம். |
| 60 | 1 | சதையாம். | நாகப்த. |
| 72 | 34 | குஷ்டவுடம்பு. | மச்சையாம். |
| 73 | 34 | வயிரம். | குஷ்வுடம்பு. |
| 81 | 13 | கணுவளவு. | வயிரதம். |
| 81 | 30 | லாரும். | க்கயணுவளவு. |
| 92 | 34 | அகிர்கட்டை. | லாகும். |
| 94 | 30 | டிஞ்சர்டிஜ். | அகிரிகட்டை. |
| 94 | 31 | பக்கு. | டிஞ்சர். |
| 98 | 22 | யிரண்டு சாமமரைத்து. | பொக்கு. |
| 101 | 27 | காயின்விரை. | இரண்டுசாமமாக. |
| 102 | 5 | பர்பங்கள். | காவிரை. |
| 103 | 23 | குன்மம். | பசப்பங்கள். |
| 103 | 31 | சுவாசம். | குன்ம. |
| | | | சுவாரம். |
| | | இதை சேர்த்துக்கொள்ளவும். | இதை நீக்கவேண்டியது. |